# திருக்குறளுக்கு உரை திருக்குறளே



இரா. இளங்குமரன்



நூல் வெளியீட்டுக்கு உதவிய

பொறிஞர் திருமிகு

**க. சுப்பிரமணியனார் வசந்தா அம்மையார்**

திருவரங்கம்

# திருக்குறளுக்கு உரை திருக்குறளே

இரா. இளங்குமரன்

வெளியீடு :

**திருவள்ளுவர் தவச்சாலை**

திருவளர்குடி (அல்லூர்)

திருச்சி மாவட்டம் – 620 101.

தொலைப்பேசி : 0431–685328

## நூற் செய்தி

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திருக்குறளுக்கு உரை திருக்குறளே |
| ஆசிரியர் | : | இரா. இளங்குமரன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பாண்டு | : | செப்டம்பர், 2001 |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| நூல் கட்டு | : | தாள் அட்டை |
| பக்கம் | : | 160 |
| தாள் | : | 10.5 வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 10.5 செ.மீ. X 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| வெளியீடு | : | திருவள்ளுவர் தவச்சாலை,<br>அல்லூர் 620 101.<br>திருச்சி மாவட்டம். |
| அச்சு | : | வேமன் பிரிண்டர்சு,<br>19, நியூ காலனி, சோசியர் தெரு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34.<br>☎ : 821 11 34 |
| பொருள் | : | திருக்குறள் ஆராய்ச்சி |
| **விலை** | **:** | **உருபா. 35–00** |

# நன்றியுரை

இச்சுவடியின் முதற்கட்டுரை 'திருக்குறளுக்கு உரை திருக்குறளே' என்பது அதுவே நூற்பெயராயிற்று.

திருக்குறளில் வரலாற்றுப் புதையல், தொல்காப்பியர் வழியில் திருவள்ளுவர் என்னும் இரண்டாம் மூன்றாம் கட்டுரைகளும் முதற்கட்டுரையொடு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவியார் அறக்கட்டளையின் சார்பில் பொழியப்பட்டவை.

திருக்குறளும் கலைச்செல்வாக்கமும் என்றும் நான்காம் கட்டுரை குறளாயப் பொழிவாகியது.

தமிழில் கலைச் சொல்லாக்கம் என்னும் நிறைவுக் கட்டுரை, கோவை. பூ.சா.கோ. பல தொழிற் பயிற்சிக் கல்லூரித் தமிழ் மன்றத்தில் பொழிவு செய்யப்பட்டது.

இவ் வைந்தும் தனித்தனியே பெருநூலாக விரியத் தக்கவை. எனினும், எவ்வெவ் வகைகளில் எல்லாம் திருக்குறள் ஆயப்படவேண்டும் எனச் சுட்டிக் காட்டி விரிநூல் செய்வார்க்கு வழிகாட்டுதலாய் அமையும் என்னும் நோக்கால் வெளிப்பட்டனவாம். முழுதுறு செய்திகளும் அடங்கியவை அல்ல என்க.

முதல் மூன்று கட்டுரைகளும் அந்நாள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவரும், இந்நாள் துணை வேந்தருமாகிய பெரும்பேராசிரியர் முனைவர் பொற்கோ அவர்கள் விழைவின்படி செய்யப்பட்டவை. மூன்று பொழிவுகளின் போதும் தலைமையேற்று நல்லுரை வழங்கியவர்களும் அவர்களே. ஆதலால், அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியன். குறளாயப் பொழிவுக்கு ஏவிய 'வேலா' நெஞ்சில் நிறைந்துளார். 'கலைக்கதிர்' பரப்பும் இதழுக்கும், கலைச் சொல்லாக்கத் தொகுப்புக்கும் இடமாகிய கல்லூரித்

தமிழ் மன்றப் பொழிவு, அருவியில் ஆடிய இன்பம் தந்தது. மன்றத்தார்க்கு நன்றியன்.

இப்பொழிவுகள் நூலாக்கம் பெற உதவியவர் பொறிஞர் திருவாளர் க. சுப்பிரமணியனார் வசந்தா அவர்கள். தவச்சாலை அறக்கட்டளையருள் ஒருவர். நெய்வேலி அனல்மின் நிலையம், இராசகுத்தான் அணுமின் நிலையம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆயவற்றில் பணிசெய்து இந்நாளில் இலிபியா நாட்டில் பணிபுரிந்தாலும் வண்டமிழையும் வள்ளுவத்தையும் நாளும் ஓதி நலங்கொழிக்கும் நற்பற்றாளர். எதிர்கால நாட்டுத் தொண்டை, நாளும் பொழுதும் எண்ணி வருபவர். எடுத்துக் காட்டான இல்வாழ்வில் சுற்றம் ஓம்பும் சுடர்வாழ்வினர்.

திரு. சுப்பிம்ணியனார் தொடர்பு தவச்சாலைக்கு எப்படி வாய்த்தது? மருத்துவர் க. கோபாலர் தொடர்பால் வாய்த்தது. சுப்பிரமணியனார் உடன்பிறந்தார் கோபாலர். அவரும் தவச்சாலை அறக்கட்டளையர். நூல் வெளியீட்டு உதவியாளர்; திருக்குறள் மாமணி; குறளியப் படைப்பாளர். அவர் தொடர்பு எப்படி ஏற்பட்டது? அவர் தமிழ்ப் பற்றும் வள்ளுவ வாழ்வும் வழியாகத் தொடர்பு ஆயது. அப்பற்றுக்கும் அவ்வாழ்வுக்கும் மூலவர் எவர்? அவர் புலவர் குறளன்பனார். தமிழர்–வள்ளுவ வாழ்வர்–தொடர்புகள் இப்படித் தொடர் தொடராக அமையும் பேறு எளிதா? இவையும் தேடிச் சென்று பெற்றவையா? இல்லை! இல்லை! தேடிவந்து உற்றவை!

இச்சுவடியின் மெய்ப்புப் பார்த்துதவிய மெய்யர் எவர்? தாமே முந்து நின்று தம் பேறாக ஏற்றுக்கொண்ட புலமையர் இளமுனைவர். திரு. தமிழகனார் நெஞ்ச நிறைவையன்றி எதனை வழங்குவது இத்தொடர் அன்பர்களுக்கு! இன்பமே சூழ்க! வாழிய உலகம்!

அன்புடன்

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை.
பேசி : 0431–685328



# 1. திருக்குறளுக்கு உரை திருக்குறளே

திருக்குறளுக்கு **மணக்குடவர்** உரை முதல் பதின்மர் உரைஉண்டு என்பது அறிஞர் உலகம் அறிந்தது. அதன் மேலும், நூற்றைத் தொடும் உரைகளும், ஆயிரக் கணக்கான ஆய்வுச் சுவடிகளும், பல்லாயிரக் கணக்கான கட்டுரைகளும் திருக்குறளுக்கு வாய்த்துள. ஆயினும் என்ன? இன்னும் உரைச்சிக்கல் உடைய குறள்கள் இருக்கவே செய்கின்றன.

திருக்குறளுக்குப் பலரும் உரை காண்பது பொதுவகையது. ஆனால், சிறப்பு வகையது, **உரை காணும் நெறிகளை வகுத்துக் கொண்டு அந்நெறிகளின் படி ஆய்வது.** நெறியே இல்லாக்கால், அவரவர் நோக்கும் போக்குமே ஆக்கமெனும் தடிப்பை ஆக்கிச் சிக்கலில்லாததையும் சிக்கலுக்கு ஆக்கி விடுவதாம்.

**உரை நெறிமுறை**

திருக்குறளுக்குச் சிக்கலில்லா வகையில் உரை காண நாம், நான்கு நெறிகளை வகுத்துக் கொள்ளலாம். அவை :

1. திருக்குறளுக்கு உரைகாணத் தொல்காப்பிய நெறிமுறை அறிவுத் திறம் வேண்டும்.
2. திருக்குறளுக்கு உரைகாணச் சிக்கல் உள்ள இடங்களில் அச்சிக்கல்களைத் தீர்க்கும் தெளிவும் திருக்குறளிலேயே உண்டு என்று கொண்டு முழுதுற ஆய்தல் வேண்டும்.
3. தொல்காப்பிய வழியானும் திருக்குறள் வழியானும் தீராச் சிக்கலுடைய குறள் உண்டாயின், அச்சிக்கலைத் தீர்க்கும் தெளிவு பாட்டு தொகைகளில் உண்டு என்று கொள்ள வேண்டும்.
4. இம்மூன்றனாலும் தீராச் சிக்கல், திருக்குறளில் அரிது. அவ்வாறு உண்டாயின் அதனை அவரவர் பட்டறிவே தீர்க்கும் என்று தெளிதல் வேண்டும்.

இந்நான்கு நெறிகளையும் வரன்முறையே போற்றிக் கொள்வாராயின் **'பொருட்சிக்கல் அமைந்த குறள் ஒன்று தானும் இல்லை'** என்பதைக் கண்கூடாக அறிவர்.

நாம் எடுத்துக் கொண்டு ஆயும் தலைப்பு, **இரண்டாவதாகக் குறித்த கொள்கை விளக்கமாகும்.**

**இறை :**

திருக்குறளில் 'இறை' உண்டு; 'இறைவன்' உண்டு; 'இறைமாட்சி'யும் உண்டு. இறைவன் என்பதற்குக் கடவுள் என்னும் பொருளும், அரசன் என்னும் பொருளும் உண்டு. 'இறை' என்பதும் அவ்விரு பொருளும் தருவதே.

**"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்."** **(338)**

**"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு**
**இறையொருங்கு நேர்வது நாடு"** **(733)**

**"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்"** **(547)**

என்னும் இவற்றால் இச்சொற்களும் இப்பொருளும் குறளில் இடம் பெறுதல் தெளிவாகும். **'இறைவன்'** என்னும் பெயர் கடவுள் வாழ்த்தில் இருமுறை (5,10) இடம்பெற்றுள்ளது. அது அரசனைக் குறிப்பது அன்று.

**உலகு இயற்றியான்:**

இரவச்ச அதிகாரத்தில்,

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்."**

என்று வரும் குறளும், அக்குறளுக்குக்கூறப்படும் உரைச்சிக்கல்களும் ஆய்வாளர்கள் அறிந்தனவே.

"துப்புரவு இல்லாக்கால் இறந்து படாதே, பிறர் மாட்டு இரந்து கொண்டும் உயிர் வாழ்தல் வேண்டு

மாயின், உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த **முதல்வன்** மிகக் கெடுவானாக வேண்டும் என்றவாறு" என்று **மணக்குடவர்** இக்குறளுக்கு உரை வரைந்தார்.

பரிமேலழகர், "இவ்வுலக்கத்தைப் **படைத்தவன்** இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர்வாழ்தலை யன்றி இரந்தும் உயிர்வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானாக என்றவாறு" என உரை வரைந்தார்.

மேலும், "மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாய செய்தொழிலும் **பழவினை வயத்தான் கருவொடு கலந்த அன்றே அவன்** கற்பிக்குமன்றே? அவற்றுள், சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானாயின், அத்தீவினையால் தானும் அத்துன்ப முறல் வேண்டும் என்பதாம்" என்று விளக்கமும் வரைகிறார்.

பரிதியார், "**பிரமன்** திரிந்து கெடுக" என்கிறார்.

காலிங்கர், "இவ்வுலகினைப் படைத்தோன் தான் உயிர்வாழாது பரந்து கெட்டு விடுக; என்பதனால் உலகத்துச் சிலரை உயர்ந்தோராகப் படைக்கும் விதாதா ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பாவதாயின் அவரும் இழந்தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து இவன் படைப்பு" என்கிறார்.

உலகியற்றியான் என்பதற்குப் பிரமனும் உலகமும் பரந்து கெடுவதாக என்று உரைத்தாரும் உளர். உலகும்

இயற்றியானும் என உம்மை விரியாக்கி உரை காண்பது அது. "உலகியற்றியான், **ஆட்சி நடத்தும் அரசன்;** அவன் அழிந்து ஒழியட்டும்" என்று உரைப்பவர்கள் புத்துரை யாளராகப் பலர் ஆயினர்.

உலகியற்றியான் என்பதற்குப் பழைய உரை யாசிரியர்கள் கண்ட உலகப் படைப்பாளன் - கடவுள் என்னும் பொருளைக் கொண்டு, நம்பா மதத் தந்தை பெரியார் முதல் இறையைப் பழித்துரைப்பதற்கும் அக்குறள் இடமாகி நின்றமை பலரும் அறிந்ததே.

உலகியற்றியான், இறைவன் அல்லது கடவுள் என்பதற்குக் கடவுள் வாழ்த்தில் இப்பாடல் இல்லை என்பதை முதற்கண் கருத வேண்டும். கடவுள் வாழ்த்தில் இடம் பெற்ற இறைமைப் பெயரீடுகளுள் 'உலகியற்றியான்' என்னும் பெயர், கடவுள் பெயராக இல்லை என்பதையும் கருத வேண்டும். இது, இரண்டாம் கருத்து. மூன்றாம் கருத்தாக, இப்பாடல் பொருட்பாலில் இரவச்சம் என்னும் தலைப்பில் இடம் பெற்றது என்பதைக் கருதவேண்டும். நான்காவதாக, பானை **வனைந்தான்,** ஓவியம் **தீட்டினான்,** துணி**நெய்தான்** என்பவை போல, உலகப் படைப்பு 'இயற்றுதல்' எனப்படுமா எனத் தெளிதல் வேண்டும். படைப்பு, காப்பு, அழிப்பு என்பதையன்றி, 'படைப்பை, இயற்றல்' என்பது உண்டா? "உலகம் யாவையும் தாமுளவாக்கல்" என்னும் **கம்பர்** மொழியும், "படைத்து அளித்துத் துடைக்கினும் ஓர் எல்லையறு பரம்பொருள்" என்னும் பேராசிரியர் **சுந்தரனார்** மொழியும் கருதலாமே!

"இனி இயற்றுதல், சட்டம் இயற்றுதல் என வழக்கில் ஊன்றியுள்ளதே. இவ்வகையில் தெளிய, விதிமுறை அல்லது சட்டத்தை இயற்றுதல் என்பது தானே பொருந்துகின்றது." என்று நாம் நினைக்கும் போது திருவள்ளுவர் புன்முறுவல் பூத்து,

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு''**

என்னும் **என் இறைமாட்சிக் குறளை எண்ணி, நீங்கள் உரை காணலாமே! சிக்கல் பட வேண்டுவதில்லையே!** என்பது, எத்தகைய இனிப்பாகின்றது!

**வகுத்தான் :**

அவரே, "இயற்றலுக்கு மட்டுமா? **வகுத்தல்** என்பதற்கும் இவ்விறையின் முறை வகுப்பே என்பதை அறியாமல், என்னென்னவோ பொருளில் மயங்கிக் கொண்டுள்ளீர்களே!" என்கிறார். நாம்,

**"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''**

என்னும் குறளையே குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந்து, அதனைப் புரட்டினால் என்ன உரைகள் கிட்டுகின்றன!

"ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும் **தெய்வம் வகுத்த வகையான்** அல்லது நுகர்தல் உண்டாகாது" என்று உரை வகுத்து, "ஓர் உயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின்கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே

வகுத்தலின், **'வகுத்தான்'** என்றார். வெறும் முயற்சி களாற் பொருள்களைப் படைத்தல் அல்லது நுகர்தல் ஆகாது. அதற்கு ஊழ் வேண்டும் என்பதாயிற்று" என விளக்கமும் எழுதினார் **பரிமேலழகர்.**

**காலிங்கர்** "அதனால் முன்னம் செய்தார் செய்த வினைவகையால் துய்த்தல் அல்லது மற்றுக் கோடி பொருள் ஈட்டினார்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது; எனவே, அங்ஙனம் ஈட்டுதற்கு உரியர் தானம் முதலிய நல்வினை முன் செய்து மற்றது கொண்டுதான் நுகர்தற்கு வேண்டும் நல்வினை முன்னம் செய்யாரேல் ஈட்டினரேயாயினும் குறைவறத் துய்த்தல் அரிது என்றவாறு" என்றார்.

"அறவினையும் அறமல் வினையுமாகிய இருவினைப் பயன் செய்தவனையே அணுவும் தவறாது சென்றடையும் முறைமை" எனறே பண்டை உரை யாசிரியரும் பின்னை உரையாசிரியருள் பலரும் கொண்டனர். புத்துரை புரட்சியுரை எனக் கண்டாருள் சிலரும் "கோடிப் பொருள்களைச் சேர்த்து வைத்திருப் போர்க்கும் விதிக்குரியான் (கடவுள்) வகுத்த முறை தவறி நுகர்தல் முடியாது" என்று கூறினார்.

**ஊழ் :**

'ஊழ்' என்பதற்கு **'ஊழ்வினை'** என்று பொருள் கொண்டமையே இதற்குக் காரணமாம். அவர்க்கு "ஊழ் வினை வந்து உருத்தூட்டும்" சிலம்புக் காட்சி முன்னின்று ஏவியதும் காரணமாம்.

'ஊழ்' என்பது கழக நூற் பரப்பில் - பாட்டு தொகைகளில் 53 இடங்களில் வருகின்றது. **ஊழ்க்கும், ஊழ்த்தல், ஊழ்ப்ப, ஊழ்பாடு, ஊழ்மாறு, ஊழ்முகை, ஊழுறு, ஊழுழ்** என்னும் வடிவங்களில் மேலும் 35 இடங்களில் இடம் பெற்றுள. **'ஊழணி தைவரல்'** எனத் தொல்காப்பியத்தில் ஓரிடம் கொண்டது. திருக்குறளில் **'ஊழ்'** ஆறு இடங்களிலும் **'ஊழ்த்தும்'** என ஓரிடத்தும் இடம் பெற்றுள. **இத்தொண்ணூற்றாறு இடங்களிலும் ஊழொடு வினை சேர்ந்து வரவில்லை.** திருக்குறள் ஒழிந்த கழக நூல்களில் ஊழ் என்பதற்கு உரையாசியர் களால் ஊழ்வினைப் பொருளும் தரப்படவில்லை.

தொகை நூல்களில் ஒன்று பரிபாடல். அதற்கு உரை கண்டவரும் **பரிமேலழகரே.** அப்பாடலில் மட்டும் ஊழ் என்னும் சொல் 11 இடங்களில் ஆளப்பட்டுள்ளது. அவ்வுரையில் ஊழ் என்பதற்கு ஊழ்வினை என்னும் பொருள் இல்லை! பரிமேலழகரும் எழுதவில்லை:

ஊழ்வினை என்னும் ஆட்சி, பாட்டு தொகை தொல்காப்பியம் ஆகியவற்றில் இல்லாமல் இருந்தும், திருக்குறளில் இடம் பெறாமல் இருந்தும், உரை யாசிரியர்கள் ஊழ் என்பதற்கு 'ஊழ்வினை' எனப் பொருள் காண்பானேன்?

சிலம்பிலும் மேகலையிலும் ஊழ்வினை உருத்தலும், ஊழ்வினை வருதலும், ஊழ்வினை துரப்பலும், ஊழ்வினை கடைதலும் பெருவழக்காகியதாலும், அவற்றுக்குப் பின் வந்த நூல்களில் ஊழ்வினையாட்சி பெருக்கெடுத்தமையாலும் முன்னூல்களில் காணாத ஊழ்வினையைத் திருக்குறளில் வரும் ஊழுக்குப்

பொருத்தி வள்ளுவர் உள்ளகத்தையும் அவர்தம் ஒளிநெறியையும் சிதைத்து உருக்குலைத்து விட்டனர்.

ஊழ் என்பதன் பொருளைப் பழ நூல்கள் வழியே ஆய்ந்து அத்தடத்தின் வழியே வள்ளுவ ஊழைக் காணல் முறையாகும். அவ்வகையில் ஊழ் என்பதற்கு **முறைமை, மலர்தல், அலர்தல், முதிர்தல், முற்றல், உதிர்தல், செவ்வியழிதல்** அல்லது **பதனழிதல், பொருந்துதல்** என்னும் பொருள்கள் உள்ளமை அறிய வாய்க்கின்றன.

இப்பொருள்களை நோக்கிய அளவால், **ஒருவருடைய விருப்பு வெறுப்புகளுக்கோ, செயற்பாடு களுக்கோ எத்தகைய தொடர்பும் இல்லாமல், இயல்பாகத் தானே நிகழும் நிகழ்ச்சியே ஊழ் என்பது புலப்படும். அவை ஆக்கமாதல் அழிவாதல் என்னும் இருநிலைப் பாடுறலும் புலப்படும்.**

தோன்றலும் அழிதலும் உலகியற்கை; தளிர்த்தலும் உதிர்தலும் உலகியற்கை; விழுதலும் எழுதலும் உலகியற்கை; தீ மேலே கிளர்தலும் நீர் கீழே விழுதலும் உலகியற்கை; கோள்கள் திரிதலும், காஃற்றுச் சுழல் தலும், வெயில் முகிலை உருவாக்கலும், முகில் மழை பொழிதலும், மழை பெருகுதலும், கடலில் சேர்தலும் கடல்நீர் கரித்தலும், ஆவிநீர் கரிப்பு அகல்தலும், எல்லாம் எல்லாம் **'உலகியற்கை. இவ்வியற்கையே 'ஊழ்'** என்பதாகும்.

ஊழாம் உலகியற்கை பொதுவானது. அவர் இவர் என வேற்றுமை காட்ட அறியாதது. அறிந்து செயற்

படும் அறிவும் அற்றது. ஓர் ஆளைத் தேடி வந்து ஆக்கமும் கேடும் சூழ்வதறியாது. தன்னியல்பில் கடன் புரிவது.

அது எல்லாப் பொழுதுகளிலும் எல்லாருக்கும் நன்மை தருவதும் அன்று; அதுபோல் தீமை தருவதும் அன்று. ஒருவர்க்கே நலம் ஆகும் பகுதியும் உண்டு; கேடாகும் பகுதியும் உண்டு. ஒரு மொத்த ஆக்கமும் ஆகலாம்; ஒரு மொத்தக் கேடும் ஆகலாம். ஒவ்வொரு பகுதிக்கு ஆக்கமாகவும் அழிவாகவும் மாறிமாறியும் ஆகலாம்.

**ஊழ்த்தல் ஊழி:**

கற்றிருந்தும் தாம் கற்றதைப் பிறர் உணர விரித்துரைக்க மாட்டாதார் அரும்பு திரண்டு மலர்ந்த பின்னரும் மணம் பரப்பாத மலருக்கு ஒப்பாவர் என்பதைக் கூறும் திருவள்ளுவர்,

**"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற**
**துணர விரித்துரையா தார்."**

என்கிறார். இங்கே **ஊழ்த்தல்** என்னும் சொல், மலர்தல் பொருளில் வருகின்றது.

**"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்**
**காழி எனப்படு வார்"**

என்று வரும் ஊழிக்குக் **'காலம்'** என்னும் பொருள் தருகிறார்.

'காலந் திரிந்தாலும்' என்பது 'ஊழி' பெயர் தலுக்கு அவர்தரும் பொருள். ஒன்றில் இருந்து ஒன்றாக விரிவுறும் இயற்கை இயலை ஊழி காட்டுதல்,

"கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்,
உந்துவளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்,
செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும், அவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத் தூழியும்"

எனவரும் **பரிபாடலால்** விளக்கமாம்.

ஒலிவடிவான வெளி என்னும் ஒன்றாம் ஊழியும், அவ்வெளியில் இருந்து வளி என்னும் ஊழியும், அதன்பின் நீர், தீ, நிலம் எனத் தோன்றிய ஊழிகளும் என ஐவகை ஊழிகளை இப்பகுதி கூறுகின்றது. இயற்கை, முறை முறையே விரிவுறும் இப்பகுதியால் ஊழ் என்பது முறைமைப் பொருள் தருதலும் பண்டே எய்திற்று. உருகெழுதாயம் **ஊழின்** எய்தி" எனப் பட்டினப் பாலையும், "**ஊழ்** மாறு பெயர" எனப் புறநானூறும் (129) கிளிகடி மரபின **ஊழ் ஊழ்** வாங்கி எனக் குறிஞ்சிப் பாட்டும் (44) கூறின.

இனித் திருக்குறள் 'ஊழ்' என்பதனை உலகியற்கை எனக் கூறுகின்றதோ எனின், "**இருவேறு உலகத்து இயற்கை**" என்பது ஊழதிகார நான்காம் பாட்டு.

அறிவறிந்த அமைச்சன் கடமை இவை எனக் குறிப்பிடும் இடத்தில்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்."

என்கிறது (637)

கடலுக்குள் மீன் பிடிக்கக் கட்டு மரமேறிப் போகின்றான் ஒருவன். புயல் உருவாதலைக் காண் கிறான். திரும்பிவிட நினைக்குமுன் புயலுக்குள் சிக்கி மாண்டு போகின்றான். அதே நிலையில் சிக்கிய மற்றொருவன் கையில் கட்டை ஒன்று தட்டக் கரை யேறித் தப்புகின்றான். இவற்றால் ஊழ் வென்றதும் உண்டு. ஊழை வென்றதும் உண்டு. என்பது தெளிவாம். இவ்வுலகியற்கையை உன்னிப்பாகக் காண்பார், **"ஊழிற் பெருவலி யாவுள"** என்னும் நிலையையும் **"ஊழையும் உப்பக்கம் காண்பர்"** என்னும் நிலையையும் மெய்யுறக் காண்பார்.

வள்ளுவர் வழியில், 'உலகியற்கை' என்பதே பொருள் என்றும், ஊழ் என்பதற்கு 'முறைமை' என்னும் பொருளும் உண்டு என்றும், முறை செய்து காப்பான் ஆகிய வேந்தன் 'வகுத்தல்' கடமையுடையவன் என்றும், அரசு வகுக்கும் முறைமையே கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலுக்கு அரிதாம் நிலையை ஆக்க முடியும் என்பதை இன்றும் கண்ணேரில் காணமுடியும் என்றும் உறுதிப்படுத்த வாய்க்கும். இவற்றால் **வகுத்தல்** என்பது, ஊழ்வினை அன்று; இறைவன் ஆணை அன்று **ஆள்வோன் வகுக்கும் ஆணையே** என்பது வள்ளுவர் வாய் மொழியாலேயே உறுதி செய்ய வாய்க்கின்றதாம்.

**தெய்வம் தொழாஅள்:**

**"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை."**

என்னும் குறள் உரைச்சிக்கல் மிக்கதாகக் கெட்டி மேளம் கொட்டும் கொட்டிலும், பெருங்குட்டுப் பட்டும் குறை கூறப்பட்டும் பலர்வாய்ப் படுகின்றது. புகழ்மிக்க இக்குறள் வள்ளுவர் வாய்மொழி வகையால் பொருள் காணப்படாமல் பழிவாய்ப் பட்டும் நிற்கிறது. புத்துரை கண்டாரும் பொருளறியார் என்னும் புறக் கூற்றுக்கும் ஆட்பட்டனர்.

"இக்குறளுக்குத், தெய்வத்தைத் தொழாத வளாகிக், கணவனையே தொழுது கொண்டு எழுபவள் பெய்யென்று சொல்ல மழையானது பெய்யும்" என்பது **தண்டபாணியார்** விருத்தியுரை.

கணவன் உள்ளம் தனக்கும் பிறர்க்கும் பொருள் தேடுதலினும், அப்பொருள் காரணமாகப் பிறர் ஏவல் வழி நிற்பதினும், அருள்வேண்டிப் பெரியாரையும் தெய்வத்தையும் வழிபடுதலினும் இன்னோரன்ன பிறவாற்றினும் சிதறித் திண்மை குன்றும். அவ்வாறு பலபடச் சிதற விடாது தன் உள்ளத்தைத் தன் கணவனை வழிபடுதலினும் அவற்கு ஆகவேண்டுவன செய்தலினுமே ஒருமுகப்படுத்திச் செலுத்துவதால் மனையாள் உள்ளம் திண்மையுடைய தாகின்றது. கணவற்கு ஆவன செய்தலும் வழிபாடே யாகலின், மனையாள் மனம் கொண்டானை வழிபடுதல் என்னும் ஒன்றிலே முனைப்பதாகின்றது ஆகவே, ஞாயிற்றின் கதிர்கள் சிதர்ந்து பரவாமல் நெருப்புக் கண்ணாடி வழியே குவிந்து பாயுங்கால் தீயினை விளைக்குமளவாக ஆற்றலின் மிகுமாறு போல, அவள் உள்ளமும் ஆற்றலின் மிகுமாறு பெறப்படும். அதுபற்றியே மேலும், கற்பென்னும் திண்மை' என்றார்.

"கற்பென்னும் காரணமே திண்மை என்னும் காரியமாக மாறி நின்றது. "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்" என ஆசிரியர் மேற்கூறும் உண்மை யாண்டும் வழுவுத லில்லை யாதலின் கற்பினால் திண்ணியளாய மனையாள் எண்ணிய எண்ணியாங் கெய்தல் ஒருதலை. அற்றாக, அவள் பெய்யெனில் மழை பெய்யுமென் பதும் துணிவேயாம்.

"இடையறாது துயிலினும் விழிப்பினும் தன் உள்ளத்தில் இருப்பது கணவன் வழிபாடே யாதலால் தொழுது கொண்டே எழுதல் இயல்வதாயிற்று. செயவென் எச்சம் தொழுது எனத் திரிந்து நின்றது. **பரிமேலழகரும் மணக்குடவரும்** இவ்வாறே பொருள் கொண்டனர்.

"பிரயோக விவேகமுடையார் இதனை மறுத்து எழுதல் துயிலொழிதலாகலான், எழுந்து தொழு வாளென முன்பின்னாகப் பொருள் படுதலின்றி, நகுபு வந்தான், ஓடிவந்தான் என்பன போலத் தொழா நின்று துயிலெழுதல் கூடாதென்க' என்றார். தொழுது கொண்டு துயிலெழுதல் கூடுவதே எனபது உளவியல் பற்றி உய்த்துணரப் புலனாமாதலின் அம்மறுப்புப் போலி மறுப்பென்க.

"இது கணவனைக் கனவினும் நனவினும் தெய்வ மெனத் தொழுவாள் ஆணைக்குப் பூதங்களும் கீழ்ப் படியு மென்றது' என்ற மணக்குடவர் கருத்துரையும் ஈண்டு நோக்கற்பாலது.

"இக்குறள் தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை என்ற அப், பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்' என்று சீத்தலைச் சாத்தனாரால் மணிமேகலை 22ஆம் காதை 59-60 ஆவது அடிகளில் எடுத்தாளப்பட்டது" என்பது **தண்டபாணியார் விளக்கம். இது பழைய உரையாசிரியர் களின் ஒட்டு மொத்தப் பார்வையை ஒருங்கு விளக்குவது.**

**புதிய பார்வையர் ஒட்டுமொத்தப் பார்வைக்கு ஒரு சான்றாக விளங்குவது பாரதிதாசனார் திருக்குறள் உரை விளக்கம். அது வருமாறு :**

**பொருள் :** தெய்வங்களைத் தொழமாட்டாள். கணவனைத் தொழுதபடியே துயில் விட்டெழுவாள். (அவள் அக்கொழுநனுக்கு) பெய் என்று எண்ணிய அளவில் பெய்தால் ஒத்த பயன்மழை.

**கருத்து :** கண்ணையும் மனத்தையும் கவர்வனவும் மிக்க பயன்விளைப்பனவும் ஆகிய தெய்வம், தன் கணவனைவிட வேறு இல்லை என்று எண்ணும் மனைவி, அக்கணவனுக்குப் பயன்மழை. பெய்யெனப் பெய்யும் மழை என்றது, அளவறிந்து பெய்வதோர் பயன்மழையை ஞாலம் விரும்பிய வண்ணம் பெய்யும் மழைபோல் காதலன் விரும்பியபோது அவன் பெறு மளவு இன்பம் அளிப்பவள் என்று காதல் இன்பத்தை விளக்கினார். இவ்வாறு காதல் இன்பத்துக்கு மழையை உவமித்தார் ஆசிரியர், மற்றோரிடத்தும், அது வருமாறு :

> **"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
> **வீழ்வார் அளிக்கும் அளி"** *(குறள் 1112)*

என்றது காண்க.

"இப்பாட்டிற்கு வேறு வகையால் பொருள் கொண்டார் பிறரெல்லாம். பிறதெய்வங்களைத் தொழாது, கணவனையே தொழுவாள், மழையை நோக்கிப் 'பெய்' எனில் அம்மழை பெய்துவிடும் என்றன்றோ பொருள் கொண்டார்? அது பொருந்தாது. என்னை? மழையை நோக்கிப் 'பெய்' என வேண்டுவாள் எனில், எத்தெய்வத்தையும வணங்காதவள் எனப் பட்டவள் மழைத்தெய்வத்தை வணங்கியவள் ஆவாள் அன்றோ! இது கிடக்க, பன்னாட்கள் விண்ணின்று பொய்ப்பதும் உண்டு. அந்நாட்களிலெல்லாம் கற்புடைப் பெண்டிர் இல்லா தொழிந்தார் என்பதா?

"உலகப் பெண்கள் அனைவரும் கற்பில்லாதவர் எனக்கொள்ளும் மனுவின் கொள்கையுடையார் அவ்வாறு கருதுவது பொருத்தமே யாகும். கற்புடை மகளிராலேயே இவ்வுலகு நிலைபெறுகின்றது எனக்காணும் தமிழர் அவ்வாறு கருதார். வள்ளுவர் உள்ளம் அதுவன்று. மழை இயற்கையின் கொடை. அது மக்கட்குக் கட்டுப்பட்டதன்று.

**"உறற்பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா;**
**பெறற்பா லனையவும் அன்னவாம், மாரி,**
**வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்**
**சிறப்பின் தணிப்பாரும் இல்"**

என்றதால் வாரா மழையை வருவிப்பார், என்றும், எங்கும் இல்லை என்பதையும் உணர்க. அஃதேயும் அன்றி, வந்து அளவின் மிக்குப் பொழிந்து கெடுக்கும் மழையைத் தடுப்பாரும் இல்லை என்பதை அறிந்து கொள்க.

தொழாஅள் - உயிரள்பெடை

**'கற்புடைய பெண் அமிர்து'** *(சிறுபஞ்சமூலம்)*

என்ற அடியோடு இச்செய்யுள் ஒப்பு நோக்கத் தக்கது. கற்புடைய பெண்ணானவள் தன் கணவனுக்கு அமிழ்து என்பது அவ்வடியின் பொருள்."

- குயில் 27.12.60

**ஒப்பாய்வு :**

**பழைய பார்வையர் கருத்து, வள்ளுவர் நோக்கத் திற்கு ஒப்பதா? புதிய பார்வையர் கருத்து வள்ளுவர் நோக்கத்திற்கு ஒப்பதா?** இவ்வையம் அகற்றும் விளக்கத்தைப் பாரதிதாசனாரே தந்து விட்டார். வள்ளுவர், "பெய்யெனப் பெய்யும் மழை" என உவமைப் படவே உரைத்தார் என்பதை, "வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்" என்னும் அவர் வாய்மொழி கொண்டே மெய்ப்பித்தார். மேலும், மாரி வறப்பின் தருவாரும் இல்லை; அதனைச் சிறப்பின் தணிப்பாரும் இல் என்னும் நாலடியார் கொண்டும் இயற்கை யியலைத் தெளிவித்தார்.

மேலும் எண்ணின் வான்சிறப்பில் "கற்பின் நின்றது காலமாரியே"என்னும் கம்பரைப் போல நடைப்படுத்தியவர் அல்லர் திருவள்ளுவர். அவர்,

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை"**

என இயற்கையிலேயே இயம்பினார். கற்பு வலியால் கெடுப்பது இன்றித் தடுத்தமைக்கக் கூடுமெனில், அவ்வியற்கை ஆற்றல் சொல்லப்பட நேராதே.

இனி, 'பெய்'யெனக் கற்புடையாள் ஒருத்தி சொல்லப் பெய்யும் எனின், 'பெய்யாதே' என மற்றொரு கற்புடையாள் சொல்லின் மழை என் செய்யும்? மழைக்குக் கேள்விப் புலனோ, கேட்டுச் செயலாற்றும் அறிவுத் திறனோ உண்டோ?

"கற்பின் சிறப்பை உயர்த்திக் கூறியது இது; அவ்வளவே" என்பார் உளராயின், உண்மை கூறல் உயர்த்திக் கூறலினும் உயர்ந்தது அல்லவோ! அறநூல், உண்மை கூறல்தானே சிறப்பு. புனைந்து இல்லது கூறலினும், மெய்யாய் உள்ளது கூறலே போற்றப் படுதல் முறை என அக்கருத்தைத் தவிர்த்தல் முறையாம்.

இனி, "அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே" எனக் **கலித்தொகையும்**, 'மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம் பெண்டிர்' என **மணிமேகலையும்** கூறும். ஏறத்தாழ, திருக்குறள் அக்கால நூலாதலின் அக்கருத்தை ஒட்டி எழுதிய பரிமேலழகர் உரை சிறப்புடையது" என்று திருக்குறள் **உரைவேற்றுமை** 'முடிநிலை' சுட்டும்.

காட்டிய சான்றுகளையன்றி, மிகப் பல சான்றுகள் உள்ளமை உண்மையே. ஆனால், ஒரு காலத்தவர் கருத்தெல்லாம் ஒன்று பட்டியலும் என்பது தேர்ந்த முடிவு ஆகாது. ஆகின்,

**"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு"**

என்று கூறுவதுடன் தனித்தனி அதிகாரம் வகுத்துக் கண்டித்ததும், புலையும் கொலையும் விலக்கத்தக்கவை என்பதை வலியுறுத்ததும், 'பிறப்பொக்கும்' என்றதும்,

சமயத்தொடும் சார்த்த எவ்வாற்றானும் இடந்தரா ததும், 'ஆண்டார்'க்குப் பெயர்ச் சுட்டுத் தானும் செய்யாமையும் ஆகியவெல்லாம் **வள்ளுவத் தனிப் பொது நெஞ்சமாதலை உணர்ந்து பார்ப்பின் இப்பொதுப் பார்வை வள்ளுவர்க்குப் பொருந்தி வாராது எனத் தெளிவு கொள்ள வாய்க்கும்.** இக்கருத்து இவ்வளவுடன் அமைய மேலே காண்போம்.

"கொழுநற் றொழுதல் என்பதால் பெண்ணை அடிமைப் படுத்தி விட்டார்" என்று உருட்டுவாரும் உளர். அவர் 'வாழ்க்கைத் துணைநலம்' என்றும் பெயரைத் தானும் பொருளறிந்து போற்றாதவராம்!

வள்ளுவர் 'வாழ்க்கைத் துணைவி' என்றா கூறினார்? அவனுக்கு அவள் துணை; அவளுக்கு அவன் துணை என்னும் உரிமை நெஞ்சால் 'துணை நலம்' என்றவர் அவர், ஆதலின் இம்மறுப்பு போலி மறுப்பாதல் விளங்கும். அவளே 'என் துணை' என்று தன் கணவனைக் குறித்தலை அவர் அறியார் என்க. (1234)

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"**

என்பதில் அவளைத் தானே வாழ்க்கைத் துணை என்கிறார் என்பார் உளர். அவர்,

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"**

**"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"**

என அவன் **இல்வாழ்வுத் துணையாக** இருத்தலை அறியாமல் கூறுபவராவர்.

இனித் **'தொழுது எழுதல்'** பெண்ணுக்குப் பெருமையாகுமா? அதனைக் கூறுகிறாரே எனின், அவன் பணிவையும் அப்பணிவால் தன்னை ஆட் கொண்டதையும் அவள் சுட்டுகிறாளே அது ஆணை இழிவு படுத்துதலாகுமா? ஒருவர்க்கு ஒருவர் துணை யாதலும் பணிதலும் மாறிப் புகுந்த நெஞ்சத்தார் மாண்பேயாகும் என்க. **யாம் இரப்ப** நீடுக மன்னோ இரா" என்றல்லவோ வேண்டி நிற்கிறான்.

இனி, எழுந்து தொழுவதா? தொழுது எழுவதா? என்னும் சிக்கலுக்குத் தீர்வு என்ன எனின், சிக்கல் இல்லாததைச் சிக்கல் ஆக்குவார் செயல் இது.

**"துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்த ராவர் விரைந்து''**

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதுவே, சிக்கலைக் கண்டு சிறுநகை நகைக்கிறது! விழிக்கும் போதே நெஞ்சில் இருத்தலாலேதான் 'தொழுது எழுதல்' ஆயிற்றாம். நினைவுதானே வழிபாடு!

"யான் என்னை மறங்குங் காலையே நின்னை மறக்குங் காலம்" என்று புறப்பாடலே புகலும் போது, அகவாழ்வில் தானா இஃது அருமையாகும்?

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்" என்றொரு குறளால் சான்று காட்டப்பட்டதே! பிறந்தார் அனை வருமே வாழத்தானே பிறந்துளர். வாழ்வார் என்பது எவரை எனின், மழையையே நோக்கி வாழ்வார் -

வானம் பார்த்தே வாழ்வார் - எவர்? உழவரேயாம்! மழை பொய்த்தால் மீளாத் துயர்க்கு ஆட்படுபவர் அவரேயாம். பிறரெல்லாம் அவர்க்குப் பிற்படத் துருறு வாரே! இவ்வாழ்வாரை, "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்னும் குறள் உறுதிப் படுத்தி விடுதல் அறிக. திருக்குறளுக்கு உரை திருக்குறளே ஆதலும் தெளிக.

**உண்டென்பது :**

**"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்**
**தலகையா வைக்கப் படும்"** *(850)*

என்னும் குறளுக்கு என்ன உரைகூறுகின்றனர்.

இக்குறளுக்கு மணக்குடவர், "உலகத்தில் அறிவுடையார் பலர் உண்டு என்பதாகிய **ஒரு பொருளை** இல்லை என்று சொல்லுமவன், இவ்வுலகத்தின் கண்ணே திரிவதாகிய பேய் என்று எண்ணப்படுவன்" என்று உரை கூறினார். இவ்வாறும் இதனைச் சார்ந்துமே, பரிப்பெருமாள் பரிதியார் காலிங்கர் உரைகள் அமைந்தன.

பரிமேலழகரோ இவ்வுரையையே ஏற்றுக் கொண்டு உரைப்பாராய் உரைத்தும் விளக்கத்தில், **கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பயனும் முதலாக அவர் உள என்பன** பலவேனும் சாதி பற்றி 'உண்டு என்பது' என்றும் உரைத்தார்.

உண்டென்பது ஒருமையாய் நிற்றலால், பலவற்றைச் சுட்டும் அவர் 'சாதி' பற்றிப் பன்மையை இணைத்துக் கொண்டது கூறினார்.

'உலகத்தார் உண்டு' என்பது பரிமேலழகர் குறிப்பவைதாமா? வள்ளுவர் அதற்கு உரை இன்னதெனக் காண உதவுகின்றாரா?

திருக்குறள் உரை வேற்றுமை பொருட்பால் 1960 இல் வெளிவந்தது. அவ்வெளியீட்டில் இக்குறளுக்கு உரை வேற்றுமை காட்டப் படவில்லை. இதனால், பெரும்பாலும் விளக்கம் தராத சொற்பொருள் உரைகளும், உரை விளக்கம் வரையப் பெற்றிருப்பின் பரிமேலழகர் உரையைச் சார்ந்த உரைகளுமே வெளிவந்தன எனக் கொள்ளலாம்.

திருக்குறளின் **'உண்மைப் பொருள்'** 1986இல் வெளிவந்தது. உரையாசிரியர் சிந்தனைச் செம்மல் **கு.ச. ஆனந்தனார்.** அவருரை விரிவாக இயல்கின்றது.

## பொருள்கோள் :

**"உலகத்தார் வையத்து உண்டு என்பஇல் என்பான்**
**அலகையா வைக்கப் படும்"**

உலக ஒழுங்கு முறைக்கு உட்பட்டவர் இந்த வையத்தில் உண்டு என்று கூறுபவற்றை இல்லை என்பவன் அச்ச உருவெளித் தோற்றத்துடன் (பேயுடன்) ஒன்றாக வைக்கப்படுவான்.

'உண்டு என்ப' தொடரில் 'எது உண்டு என்ப' என்று சொல்லப்படவில்லை. உண்டு என்பதற்குப் பொதுவாக இறைவன் உண்டு, பிறப்பு உண்டு, பிறவிச் சுழற்சி உண்டு போன்ற தத்தமது சமயக் கருத்துக்களை வலிந்து பொருத்துகின்றனர். குறட்பொருளையும்

திரிக்கின்றனர். மாறாக, 'வையத்து உண்டு என்ப' என்று கொள்ளல் வேண்டும். அஃதாவது இவ்வுலகத்தில் நடைமுறை நிலையில் உள்ள நிகழ்ச்சிகள் பொருள்கள் மற்றும் உலகியல் நிலைகள் அனைத்தும் 'வையத்தில் உண்டு' இவற்றை 'மாயை' என்றும், 'பொய்' என்றும், 'அநித்தியம்' என்றும் கூறுபவன் வையத்து உண்டு என்ப இல்லென்பான். அஃதாவது முரண்நிலை கொண்ட புல்லறிவாளன்" என்கிறார்.

சிக்கல் இங்கேயும் தீர்ந்தபாடில்லை. வலிந்த பொருள்கோளும், உரை விளக்கமும் அமைந்த தன்றி மெய்ம்மை புலப்படவில்லை. மெய்ப்பொருள் காண வள்ளுவரே உதவுகிறார் :

உலகம் எதனால் வாழ்கிறது?

**"பண்புயைடார் பட்டுண் டுலகம்"**

என்பது அது (996)

உலகத்தார் உண்டு என்பது, பண்புடையவர்கள் இருப்பதால் உலகியல் அழியாமல் உள்ளது என்பதாம். இவ்வுள்ளதாம் இயல்பை இல்லை என்பான் ஒருவன் உளனாயின் அவன் மாந்த நிலையன் அல்லன். உயிர் வாழும் மாந்தப் பேயன் அவன்!

பண்புடையவர்கள் போலவே சான்றோர்களும் உலகியல் அழிந்து படாமல் காப்பவர்களே ஆவர். ஆதலால்,

**"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை"**

என்றும் கூறினார் (1990). இவையும் அன்றி,

"பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற் றுலகு"
என்றும் குறித்தார் (874). இக்கருத்திற்கு,

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான"

என்னும் தொல்காப்பியமும்,

"உலகத் தோடு ஒட்ட ஒழுகல்"

"உலகத் தோடு அவ்வ துறைவது"

"உலகந் தழீஇயது ஒட்பம்"

என்னும் திருக்குறள்களும் அணிவகுத்து நின்று ஆக்கம் புரிகின்றனவாம்.

"உண்டால் அம்ம இவ்வுலகம்"

என்னும் புறநானூறோ, பண்பாட்டைப் பலபடப் பகர்ந்து நிலைநாட்டும் செப்பேடாகத் திகழ்கின்றது. "பண்பாடு அழிந்தால் பாரும் அழியும்" என்பதே உயர்ந்தோர் உண்டு என்பதாம் என வள்ளுவர் வாய்மொழி கொண்டு உறுதி செய்தல் முறைமை தானே!

**பகை :**

இனி,

"உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்"

என்னும் உட்பகைக் குறளை எண்ணலாம் (883).

இதற்கு **மணக்குடவர்,** "உடனேவாழும் பகைவரை அஞ்சித் தன்னைக் காக்க. அவர் தமக்குத் தளர்ச்சி

வந்தவிடத்து, குயவன் **கலத்தை அறுக்கும் கருவி** போலத் தப்பாமல் கொல்லுவர் என்றவாறு" என்றார். மட்பகை, தான் அறுக்குங்கால் பிறர் அறியாமல் நின்று அறுக்கும் என்று விளக்கமும் வரைந்தார். இவ்வுரையையே ஏற்றுக் கொண்ட **பரிமேலழகர் "மண்ணைப் பகுக்கும் கருவி மட்பகை"** எனப்பட்டது. பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின் கெடுதல் தப்பாது என்பதாம் என விளக்கம் வரைந்தார். **பரிப்பொருள்** உரையும் விளக்கமும் இவையே. **பரிதியார்,** "மேலே மட்கலத்தைக் கீழே அறுக்கிற ஊசி" என்றார். **காலிங்கர்,** "கரைபடக் கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம் போல்" என்றார். மண்ணுக்குப் பகை நீர்ப் பெருக்கு என்பது அவர் கருத்தாம். "மண்பகை என்றது நீர் வெள்ளம்" என்கிறார். அறுக்கும் வனைவுக் கருவியோ, ஊசியோ 'மட்பகை' யாகுமா? நீரும் மண்ணும் பகைமைப் பட்டனவா? பகைமைப் பட்டவை எனின் மண்ணைக் குழைத்துக் கலம் வனைய உதவுமா?

"மட்பகை என்பது மண்ணை அறுக்கும் கருவிக்குப் பெயராய் வழங்கிற்றுப் போலும். அதற்கு வெள்ளம் எனக் கொள்ளும் காளிங்கர் உரைப் பொருளும் சிறந்ததே. இகு பெயல் மண்ணின் ஞெகிழ்வு (அகம். 32) என்பதை ஒப்பு நோக்குக" எனத் திருக்குறள் **உரைவேற்றுமை**யார் முடிநிலைக் குறிப்பு அமைந்துளது. அத் தொகுப்பிற்கு முப்பதின்மர் உரைகள் பயன்பட்டமையை அறிய வாய்க்கின்றது. பின்னே

வந்த உரைகளும் குயக்கலம் அறுத்தெடுக்கும் கருவி யிலேயே அமைந்தன. ஆனால், எம் வாழ்வியல் உரை,

"உட்பகை உடையவர்க்கு அஞ்சி விழிப்பாக இருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். ஒரு சோர்வுண்டாகியபோது அளற்று **மண்ணாகிய** (புதை சேறாகிய) **பகையினும்** (அது உள்வாங்கி) மிக அழிக்கும்" என்று வெளிப்பட்டது. திருக்குறளுக்கு உரை திருக்குறளிலேயே உண்டு என்ற நோக்கின் பயனாகும் அது.

உட்பகையாவது, கேள்போல் பகை; ஒன்றியார் கண் ஒன்றாமைப் படல்; கூடினும் கூடாதது; பாம்போடு உடனுறைதல் என்று கூறப்படும் செய்தி களை நோக்கின் ஒரு தெளிவு பிறக்கிறது.

நம்பத்தக்கதாக இருந்தும், பொருந்தியதாக இருந்தும், வெளிப்படத் தோன்றாமல் இருந்தும், கெடுப்பது உட்பகை என ஒரு பொது விளக்கம் கிட்டுகிறது.

அளறு என்பது சேறு; அது சில இடங்களில் ஆழ்ந்து புதை சேறாகக் கிடக்கும். அவ்விடங்களில் சிக்கிக் கொண்டார் வெளிவரரார் என்பது விளங்கும். மேலும், அழுந்தும் அளறு (835) ஆழும் அளறு (919) எனவும் குறிக்கப்படும். அளறுக்குக் 'களர்' என்பதொரு பெயர். அது 'காலாழ் களர்' (500) எனக் குறிக்கப்படும்.

**"காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாழ் முகத்த களிறு"** (500)

என்னும் குறளால் களிற்றையும் செயலறச் செய்யும் களரின் இயல்பு புலப்படும்.

புறத்தே புலப்படாமல் அழிக்கும் பகை உட்பகை. ஆதலால், உள்வாங்கும் அளறும், புதை மண்ணும், புதை மணலும், ஆகியவை மண்ணே பகையாய் - உள்வாங்கும் கேடாய் இருந்து தப்ப இயலா வகையில் அழித்தலால் மட்பகை ஆயிற்று. அதறகு மண்ணாகிய பகை என்.பதே நேரறி பொருளாம். இப்பொருளைக் காண வள்ளுவர் வாய்மொழியுடன், வாழ்வியற் சா்ன்றுகளும் அறிய வாய்க்கின்றன. பல இடங்களில் " 'புதை மணல்' போகாதீர்" என்றுள்ள பலகைகள் இருத்தலும், அதனைப் பொருட்டாக எண்ணாமலும் அறியாமலும் புகுந்து ஆவி இழந்தார் செய்திகளும் காணப்படுவனவும் கேட்கப் படுவனவுமே ஆகும். ஆதலால் வள்ளுவர் வாய்மொழி வழியாலும், வாழ்வியல் நடைமுறைக் காட்சிகளாலும் காணப் பெறும் மெய்ப்பொருள் ஈதாகிச் சிறக்கின்றதாம்.

## நினைக்கப்படும்

அழுக்காறாமை அதிகாரத்தில்,

**"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்''**

என்பதொரு குறள் (169)

இதற்கு "அழுக்காற்று நெஞ்சத்தானுடைய ஆக்கமும் செவ்விய நெஞ்சத்தானுடைய கேடும் விசாரிக்கப் படும்" என்ற அளவில் மணக்குடவர் உரை அமைந்தது

"கோட்டத்தினைப் பொருந்திய மனத்தை உடையவனது ஆக்கமும் ஏனைச் செம்மையுடைய வனது கேடும் உளவாயின் அவை ஆராய்ப்படும்" என்று உரை கூறி, "ஆக்கக் கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கு ஏதுவாகிய பழவினையாதென்று ஆராயப்படு தலின் 'நினைக்கப்படும்' என்றார்.

'இம்மைச் செய்தன யானறி நல்வினை, உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித், திருத்கு மாமணிக் கொழுந்துடன் போந்தது' (சிலம்பு அடைக். 91-93) என நினைக்கப் பட்டவாறறிக" எனறு விள்க்கம் வரைந்தார் பரிமேலழகர்.

"அழுக்கு மனத்தன் பெற்ற ஆக்கமும் நல்ல மனத்தன் பெற்ற கேடும் இமைப்பிற் கெடும்" என்றார் பரிதியார்.

காலிங்கரோ, "அழுக்காறாகிய உட்கோட்டம் கிடந்த நெஞ்சத்தானது ஆக்கமும், மற்ற கோட்ட மில்லாத செவ்வியானது கேடும் என்னும் இவை இரண்டும் விசாரிக்க, அவனுக்கு ஆக்கம் இல்லை. இவனுக்கு ஒரு கேடும் இல்லை என்பதூஉம் பொருளா யிற்று" என்றார்.

இக்கருத்துகளை ஆயும் **உரை வேற்றுமையார்,** "நினைக்கப்படும் என்பது வைக்கப்படும் (50) அஞ்சப்படும் (824) உணரப்படும் (1096) எனக் குறளிற் பயின்று வரும் சொல்லாட்சி போல, ஒரு சொல்லாகவே தோன்றுகிறது. அதனை, நினைக்க, படும் என இரு

சொல்லாகப் பிரித்து இமைப் பொழுதிற் கெடுமெனவும், விசாரிக்க அழுக்காறுடையானுக்கு ஆக்கமில்லை செவ்வியானுக்குக் கேடுமில்லை எனவும் உரைப்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

"அவ்விய நெஞ்சத்தானுக்கு ஆக்கம் அழுக்காறு காரணமாகத் தான் வந்ததா? செவ்வியனுக்குக் கேடு செம்மை காரணமாகத்தான் வந்ததா? என்ற நெறி ஆராயப்படும் எனக் கூறுகின்றார்.

"நினைப்பின், அவ்விய நெஞ்சத்தான் பெற்ற ஆக்கம், முயற்சி முதலிய பிற பண்புகளால் வந்திருக்குமென்றும், செவ்வியான் எய்திய கேடு முயற்சியின்மை முதலிய தீய பண்புகளால் வந்திருக்கும் என்றும் புலப்படும் என்பது கருத்து" என்றார்.

திருக்குறள் **உண்மைப் பொருள்** உரையும் விளக்கமும் நான்கு பக்க அளவில் விரிகின்றது.

"நல்லவர் கேடுறுவதற்கும் அவ்வியர் ஆக்கம் பெறுவதற்கும் மாந்த வாழ்க்கை எல்லைக்கு அப்பாற் பட்ட வெளி ஆற்றல்கள் எவையும் காரணமல்ல. சமுதாயத்தில் இருக்கும் சில தன்னல மனிதர்களும், அவர்கள் உருவாக்கிய முறையற்ற சமுதாய அமைப்பும், நெறியற்ற பொருளியல் நிறுவனங்களும், அவற்றை நடைமுறைப்படுத்துகிற கோல் கோடிய அரசுகளும், அவற்றைப் பற்றிக் கொண்ட கோணல் விதிகளும், இவற்றின் கலப்புத் தொடர்பால் விளைந்த பல சீர்கேடுகளும், அச்சீர் கேடுகளை முறையோடு அணுகி அறிவுடன் தீர்க்கப்படாததும் சமயவாதிகள் விதி,

பழவினை என்று தந்த பொய் விளக்கங்களும் அடிப்படைக் காரணங்களாயின என்பது திருவள்ளுவத்தால் பெறப்படுகிறது என அவற்றை மேலும் விரிக்கின்றது அவ்வுரை விளக்கம்.

இக்குறளில் "பொறாமையன் கொண்டுள்ள ஆக்கத்தையும் நல்லோன் கொண்டுள்ள கேட்டையும் எண்ணிப் பார்க்க. எண்ணிப் பார்ப்பின் உண்மை புலப்படும்" என்கிறார் வள்ளுவர். அவ்வாறு எண்ணி அறிந்து சிக்கலைத் தீர்க்கும் குறிப்புகளை நூலில் வைத்துள்ளாரா எனின், அடுத்த குறளிலேயே,

**"அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதில்லார்**
**பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்"**

என்கிறார் (170) அழுக்காற்றைச் செய்து செல்வத்தால் பெருக்கமுற்றாரும் இல்லை, அவ்வழுக் காற்றைக் கொள்ளாமையால் செல்வப் பெருக்கத்தை ஒழிந் தாரும இல்லை என்கிறாரே.

அழுக்காறுடையாரிடம் செல்வப் பெருக்கு உள்ளமையை நாம் காண்கிறோமே, பொறாண்மை யில்லா நல்லோரிடமும் வறுமைத் துயர் உள்ளமையை நாம் அறிகிறோமே எனின், "எண்ணிப் பார்க்க" என்கிறார் திருவள்ளுவர்.

பொறாமையாளன் தான் கொண்ட செல்வத் தால் தன்னைச் செல்வனென எண்ணுகின்றானா? எவ்வளவு தேடினும் பொறாமையாளன் செல்வம் 'போதாது போதாது' என்னும் வறுமைக்கே ஆட்படுத்தும்.

நல்லவர்க்கு வறுமை என்பதோ இல்லை. அவர்க்கு வறுமை எனப்படுவது பிறர்க்கு உதவ முடிய வில்லையே என்னும் ஏக்கமே யாம்! (218-220)

**"நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர**
**செய்யாது அமைகல வாறு"**

என்னும் குறளை நோக்குக (219)

ஒழுக்க முடைமை அதிகாரத்தில் அழுக்காறு உவமைப்பட அமைந்து வள்ளுவர் வாய்மொழி யாலேயே இச்சிக்கல் தீர்க்கப்படுகின்றது. அது,

**"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு"**

என்பது (135)

அழுக்காறுடை_யானிடத்து ஆக்கமில்லாமை போல, ஒழுக்கமில்லானிடத்து உயர்வு இல்லை என்பது தெளிவுபடுத்துகின்றது அல்லவா!

நம் பார்வையில் செல்வமாகத் தோன்றுவது செல்வமும் இல்லை. வறுமையாகத் தோன்றுவது வறுமையும் இல்லை. அவர்கள் உளப் பார்வையால் உண்மை உணர்க என்பது குறிப்பு மொழியாம்.

செல்வம் நல்லோர் அல்லோர் எனப் பார்த்துப் பெருகுதலும், சிறுகுதலும் இல்லை; அவரவர் முயற்சி யான் வருவது என்பது வள்ளுவம். குணக்கேட ரிடத்தும் செல்வம் உண்டு என்பதைப் "பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" என வள்ளுவம்

கூறும் (241) பொருள் மிக்காராய் இருந்தவரும் இல்லாராகவும், இல்லாராய் இருப்பவர் இருப்பவர் ஆவதும் கண் கூடே என்பதை,

**"பொருளற்றார் பூப்பர் ஒருகால்"**

என்றும்,

**"கேடும் பெருக்கமும் இல்லல்ல"**

என்றும் வள்ளுவம் வழங்கும்.

**நிறைவைத் தாராத செல்வம் செல்வம் அன்று**
**குறைவைத் தாராத வறுமை வறுமை அன்று**

நிறைவும் குறைவும் அவற்றை உடையாரைப் பொறுத்தவை என்று முடிப்பது வள்ளுவர் உள்ளமாம்.

**அவியுணவு :**

கேள்வி அதிகாரத்தில்,

**"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
**ஆன்றாரோ டொப்பர் நிலத்து"**

என்னும் பாடல் பல்வேறு உரை விகற்பங்களைக் கொண்டுள்ளது.

"செவிக்கு உணவு போன்ற கேள்வியை உடையவர் நிலத்தின் கண்ணே இருப்பினும், அவியை உணவாக வுடைய தேவரோடு ஒப்பர்" என **மணக் குடவர்** பொருள் கண்டார். இதன்மேல் விளக்கமாக, "அவியுணவு (அவியாகிய உணவு) தேவர்க்கு வேள்வித் தீயில் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான்

ஆன்றார் என்றும் துன்பமறியாமையால் தேவரோடு ஒப்பர் என்றும் கூறினார்'' என்றும் **பரிமேலகர்** வரைந்தார்.

**பரிதியார்** செவியுணர்வின் எனறு பாடம் கொண்டார். "செவியாற் கேள்வியுள்ள பேர் பூலோகத் திலே இருந்தும் தேவரோடு ஒப்பாவார் அஃது எப்படி என்றால் தெய்வலோகத்திலே இருந்தும் பூலோகத் திலே அவிப்பாகங் கொள்ளும் முறைமைபோல'' என்று உரை வரைந்தார்.

**நாமக்கல்லார்,** "செவியுணவாகிய கேள்வியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் உலகத்திலுள்ள மனிதர்களே யானாலும், அவித்துச் சமைக்கப்பட்ட உணவுகளில் தேவர்களுக்கு ஒப்பானவர்கள்.

தேவர்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகள் அவர்களால் உண்ணப்படாமல் பரப்பப் பட்ட படியே இருக்கின்றன. அதுபோல, கேள்வியில் ஈடுபட்டார் மனம் கேள்வியை விட்டு உணவின் மீது செல்லாது. அதனால் அவர்கள் இவ்வுலகத்தில் உள்ளவர்கள் ஆனாலும் வானுலகத்திலுள்ள ஆன்றோருக்கு ஒப்பா கிறார்கள்" என்று உரையும் விளக்கமும் வரைந்தார்.

**குழந்தையார்** "செவியுணவாகிய கேள்வியினை யுடையவர் குறைந்த உணவினையுடைய நிறைந்த அறிவுடையவரை ஒப்பர். அவிதல் - குறைதல். ஆன்றோர்கள் நிறையுணவினை விரும்பாது குறையுண வுண்டு புலனடக்கிப் புத்தொளி பெறுவர் ஆகையால் அவியுணவின் ஆன்றோர் என்றார் என்று உரையும் விளக்கமும் வரைந்தார்.

அவிசொரிந்து வேட்டல், இந்திரன் முதலிய குறளிடைவரும் குறிப்புகளை நோக்கின் அவியுணவின் ஆன்றோர் என்பது தேவரையே குறிக்கலாம் எனத் தோன்றுகிறது. அவியுணவைத் தவிர பிற உணவைத் தேவர் விரும்பார். கேள்வியுடையாரும் செவியுண வைத் தவிர பிற விரும்பார். இருவர்க்கு முரிய இப் பொதுத் தன்மையை ஆசிரியர் அடைமொழிகளில் வைத்தே புலப்படுத்தியுள்ளார் எனக் கோடல் பொருந்தும் என **உரை வேற்றுமையார்** முடிநிலையில் மொழிந்தார்.

கேள்வியுடையார் செவியுணவைத் தவிர பிற விரும்பார் எனின், "சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்பதற்கு மாறாம்.

கேள்வி வேட்கைக்கும் உணவு வேட்கைக்கும் ஒப்புக் காட்டி உரைக்கும் இக்குறள்,

**"பருகுவான் அன்ன ஆர்வத்த னாகி**
**செவிவா யாக நெஞ்சு களனாகக்**
**கேட்டவை கேட்டவை விடாது உளத் தமைத்து"**

என்னும் கற்றுக் கோடல் (கல்வி) இயலைக் காட்டுவதாம்.

"பருகுவார் போலினும்" என்பதற்கு (811), "பருகுவ அன்ன அருகா நோக்கமொடு" என்னும் பொருநராற்றுப் படையை எடுத்துக் காட்டுவார் பரிமேலழகர்.

ஊணில் பெரு வேட்கையாளர் அதனைத் தேடித் தேடி உண்பது போல, கேள்வி வேட்கையரும்

தேடித் தேடிப் பெறுவர் என்பதாம். அவர் அவியுண வின் ஆன்றோர்; இவர் செவியுணவின் ஆன்றோர். ஆன்றோர் என்பது அகன்றோர். விரிந்தோர் பெருகினோர் என்னும் பொருள் தருவதாம். அகன்றார், (பொருளால்) பெருகினார் என்பது நாம் கண்டதேயாம். *(170)*

அவியுணவு, அவித்து ஆக்கப்படும் உணவே, அதில் பேரார்வம் கொள்வாரைத் திருவள்ளுவர் "கழிபேரிரையான்" என்றும் "தீயள வன்றித் தெரியான் பெரிதுண்பான்" என்றும் கூறுவார்.

கழிபேரிரையானையும் பெரிதுண்ணியையும் கேள்வி வேட்கையர்க்கு உவமை காட்டலாமோ எனின், ஆர்வப் பெருக்குக்குக் காட்டிய உவமையே அன்றி ஆளுக்குக் காட்டியதில்லையாம்.

"புல்லைக் காட்டினால் அதனைத் தேடி ஓடும் மாடு போல், பொத்தகத்தைக் காட்டினால் யான் தேடி ஓடுகின்றேன்" என்ற **சாக்ரடீசர்** உவமைச் சொல்லை எண்ணலாமே!

மண்ணுலகில் கண்ணேரில் காணும் காட்சியை விடுத்துக் கண்டறியாததும் காட்ட அறியாததுமாம் ஒன்றைக் காட்டிக் கருத்து மயக்கம் செய்வானேன் என்பதை எண்ணுதல் தெளிவு செய்யும்.

இவை திருக்குறளுக்கு உரை திருக்குறளிலேயே உண்டு என்பதற்குச் சான்றாக எடுத்துக் காட்டப்

பட்டவை. இன்னவை முற்றாக எடுத்துக் காட்டி முடிக்கப் பட்டவை அல்ல. இன்றும் தேடுவார் தேடிக் காணத் திருக்குறள் விரித்து வைத்த நூலாகவே திகழ்கின்றது.

திருக்குறளில் ஏற்படும் உரைச் சிக்கல்களை விலக்க உரையாசிரியர்களையோ, உரை காண் பாரையோ காட்டிலும் மூல நூல் முதல்வர் வள்ளுவர் வாக்கையே நம்பித் தேடிக் காணல், வளப்புதையல் வைப்பைக் காட்டி. உண்மையும் உறுதியும் பயப்பதாய் அமையும். அந்நெறி ஆய்வார்க்கு அகச் சான்றாம் நன்னெறியாம்.



# 2. திருக்குறளில் வரலாற்றுப் புதையல்

திருக்குறளில் வரலாற்றுப் புதையல் என்னும் இத் தலைப்பு, ஆய்வாளர்களை ஆழ்ந்து நோக்க வைக்கும் விருந்தாகும் "விருந்தே புதுமை" என்பது தானே இலக்கணம்.

**வரலாறு :**

திருக்குறளில் வரலாற்றுப் புதையல் உண்டா? அதன் வரலாறோ, அதன் ஆசிரியர் வரலாறோ, அதன் கால வரலாறோ அறிதற்கு அரிதாக இருக்கவும் அதில் வரலாற்றுப் புதையல் உண்டு என்பது வியப்பும் திகைப்பும் ஏற்படுத்தக் கூடியதே ஆகும். ஆயினும் திருவள்ளுவர் அருளிய 'நுண்மாண் நுழை' புலத்தொடு புகுந்து ஆய்ந்தால் 'அறிதோறும் அறியாமை' கண்டு

மகிழும் பேறு கிடைத்த வண்ணமாகவே அமை கின்றது.

வரலாறு என்பது வரும்வழி, வரும் முறை என்னும் பொருளது. ஆறு வருகின்ற வருகையை "யாறு வரலாறு" என்கிறது. **பரிபாடல்** *(6:42)* அதன் பழைய உரை, "இவ் யாறு வருகின்ற வாறு" என உரை தருகின்றது.

வரலாறு 'வரன்முறை' என்பதுமாம். வரன்முறை எனவரும் தொல்காப்பியத் தொடர்க்கு (எழுத். 137) 'வரலாற்று முறைமை' எனறு உரைவிரித்தார். உரையாசிரியர். **இளம்பூரணர்.**

## புதையல் :

திருக்குறளில், திருக்குறள் என்னும் நூற்பெயர் தானும் இல்லை. திருவள்ளுவர் என்னும் நூலாசிரியர் பெயர் தானும் இல்லை. நூலுள் இடம்பெறாத அவை, நூன்முகப்பில் இருந்தமை கொண்டே, அவற்றை அறிய வாய்த்தமை புலமையாளர்களால் அறியக் கூடியவையே.

புரவலர் முதலாம் குறிப்புகள் தாமும் இடம் பெறாத் திருக்குறளில் வரலாற்றுப் புதையல் உண்மை கண்டு கொள்வது, ஒளி வெள்ளம் பாய்ச்சி உவகை தருவதாம்.

ஆசிரியர் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவர் எனப்பெறும் **பனம்பாரர்** தொல்காப்பியத் திற்குப் பாடி அருளிய பாயிரம் அந்நூல் வரலாற்றுப்

புதையலாய் அமைவது. அப்படியொரு பாயிரம் நம் பொய்யா மொழிக்கு வாய்த்திலதே என்னும் ஏக்கம் ஏற்படுவது ஒருதலை. ஆனால் அத் தொல்காப்பியப் பாயிரம், திருக்குறளில் வரலாற்றுப் புதையல் இருக்கும் இடங்களுள் ஈதொன்று என்று காட்டி நிற்கின்றது. அது,

**"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து"**

என்னும் தொடராகும்.

## அவையம் :

புலமை மிக்கார் கூடிய அவையில் நூல் அரங்கேற்றம் செய்தல் அந்நாள் வழக்கம் என்பதும், எவரால் அவ் வவை கூட்டப்பட்டதோ அவர் பெயரால் அவ்வவை சுட்டப் பட்டது என்பதும் இத் தொடரால் விளக்கமாகும். அன்றியும், அறிவறிந்த பெருமக்கள் கூடிய கூட்டமே 'அவையம்' என வழங்கப்பட்டது என்பதும் தெளிவுறும்.

தொல்காப்பியப் புறத்திணை இயலில்,

**'எட்டு வகை நுதலிய அவையம்'**

என்று சுட்டப் படுதல் எண்ணத் தக்கது.

அவையம் என்பது இளம்பூரணர் உரையில், **'அவையகம்'** என்னும் பாடமும் கொண்டு விளங்கு கின்றது. "எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையக மும்; எட்டு வகை குறித்த அவையகம் என்றமையான், ஏனைய அவையின் இவ்வவை மிகுதியுடைத்து

என்றவாறு. அவையாவன : **குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை** என்பன'' என உரைவரைகின்றார் அவர்.

எட்டு வகை இயல்புகள் இவை என்பதை விளக்கும் முறையால்,

**"குடிப்பிறப் புடுத்துப், பனுவல் சூழ**

**விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு, காமுற**
**வாய்மை வாய் மடுத்து மாந்தித், தூய்மையின்**
**காதல் இன்பத்துள் தங்கித், தீதறு**
**நடுவுநிலை நெடுநகர் வைகி, வைகலும்**
**அழுக்கா றின்மை அவாஅ வின்மையென**
**இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்**
**தோலா நாவின் மேலோர் பேரவை**
**உடனமர் இருக்கை ஒருநாட், பெறுமெனின்**
**பெறுகதில் அம்ம யாமே, வரன்முறைத்**
**தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து**
**நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது**
**நிலையழி யாக்கை வாய்ப்பஇம்**
**மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே''**

என்னும் **ஆசிரிய மாலைப்** பாடலைக் காட்டுகிறார்.

நன்னன் சேய் நன்னனைப் பற்றிய பாட்டு **மலைபடு கடாம்** அப்பாட்டில் நன்னன் கொண்டிருந்த அவையம்,

**"நல்லோர் குழீஇய நாநவில் அவையம்''**

எனச் சிறப்பிக்கப்படுகிறது. அதன் பணித்திறம்,

**"வல்லார் ஆயினும் புறமறைத்துச் சென்றோரைச்**
**சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி**
**நல்லிதின் இயக்கும்"**

பெற்றியது எனப்படுகிறது. இதற்குத்,

"தாம்கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினையுடையோர் திரண்ட, தன் அவைக்களத் திடத்தே, சென்ற அறிவுடையோரைத் தாம் கற்றவற்றை மனங்கொள்ளக் கூறமாட்டார் ஆயினும், மாட்டாமையை மறைத்துத், தாம் பொருளைச் சொல்லிக் காட்டி, அதனைத் தப்பின்றதாக எல்லார் மனமும் கொள்ளும்படி அறிவித்து நன்றாக நடத்தும்" என்பது **நச்சினார்க்கினியர்** உரை.

அவையில் இருப்பார், அவையேற வருவாரையும் அரவணைத்து அவைக்குத் தக்காராக்கும் அருமை பெரிதும் போற்றிக் கொள்ளத் தக்கதாகும். கொள்ளவே, அவைச் சிறப்பு நன்கு விளங்கும். இனி **நல்லவை** யாது என்பதை,

**"நல்லவை என்பது நாடுங் காலை,**
**எத்துறை யானும் இருவரும் இயம்பும்**
**அத்துறை வல்லோர் அறனொடு புணர்ந்தோர்**
**மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர்**
**கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர்**
**செற்றமும் சினமும் சேரா மனத்தோர்**
**முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர்**
**இனிய முகத்தோர் இருந்துறை கேட்போர்**
**வேந்தன் ஒருவர்க்குப் பாங்கு படினும்**

**தாந்தாம் ஒருவர்கட் பாங்கு படாதோர்**
**அன்னோர் முன்னர்க் கூறிய பொழுதில்**
**தொலையு மாயினும் தொலைவெனப் படாஅது**
**வெல்லு மாயினும் மிகச்சிறப் புடைத்தே''**

என யாப்பருங்கல விருத்தியுரை தருகின்றது. மேலும்,

**"நிறையவை என்பது நினையுங் காலை,**
**எல்லாப் பொருளும் தம்மகத் தடக்கி**
**எதிர்வரு மொழிகளை எடுத்துரைப் பதுவே''**

என்று நிறையவை பற்றியும் அது கூறும் (ஒழிபு.3)

மக்களுக்கு, **உரிமை** வகையாலும் **குற்ற** வகை யாலும் சிக்கல்கள் உண்டாகும்போது அவற்றைத் தீர்த்துக் கொள்ள **முறை மன்றங்களை** நாடுதல் இன்றுள்ள நடைமுறை. இம்முறை பண்டே இருந்தமை '**அறங்கூறவையம்**' என்பதால் விளங்கும். அவர்கள் சான்றாண்மையும் நடுவுநிலைமையும் விளங்க, அவ் அவை,

**"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்**
**செற்றமும் உவகையும் செய்யாது காத்து**
**ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்**
**சிறந்த கொள்கை அறங்கூ றவையம்''**

என்று **மதுரைக் காஞ்சியில்** குறிக்கப்படுகின்றது (489-92) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை **மாங்குடி மருதனார்** பாடிய பாட்டு இது.

கரிகாற் பெருவளத்தானைக் **கருங்குழவாதனார்** பாடிய புறப்பாட்டில் (224)

"அறமறக் கண்ட நெறிமாண் அவையம்"

என இவ் வவை பாராட்டப் படுகின்றது.

அறங் கூறவையத்தில் முறையறியும் திறனிலானை நாட்டுதல் தீமையை,

"அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தல்"

என்று **ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்** வஞ்சினப் பாட்டு மொழிகின்றது (புறம் 71)

**ஊர்** எனப்படுவது **உறையூர்** என்பதொரு பழமொழி. அவ்வுறையூர் **உறந்தை** எனப்படுதல் பண்டே உண்டு. அவ்வுறந்தையில் திகழ்ந்த அவையம் **'உறந்தை அவையம்'** எனப் பாடு புகழ் பெற்றது.

"கெடுவின்று,
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று" *(புறம். 39)*

என்றும்,

"அறம் துஞ்சும் உறந்தை" *(புறம். 58)*

என்றும்,

"ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை யுறந்தை" *(அகம். 93)*

என்றும்,

**"மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து**
**அறங்கெட அறியா வாங்கு''** (நற். 400)

என்றும் இன்னவாறு வருவன உறந்தை அவையப் பெருமைக்கு உரிமைப் பட்டயங்களாம்.

**தமிழாயும் அவையும், முறையாயும் அவையும்** வேந்தரவையங்களாக இருந்தமையால், அவ்வேந்தரும் அவ்வவைக்குத் தக்காராகத் திகழ்ந்த பேறும் வாய்ந்திருந்தனர் என்பது வெளிப்படை.

உரிமை வழக்கு, தண்ட வழக்கு என்பவை அன்றி, அறவழக்கு என அந்நாள் கருதப்பட்ட **காதல் வழக்கும்** முறை மன்றம் ஏறுவதுண்டு என்பது,

**"முறையுடை அரசன் செங்கோல் அவையத்து**
**யான்றற் கடவின் யாங்காவது கொல்''**

என்னும் **குறுந்தொகையால்** (276) அறிய வரும்.

சான்றோரை நோக்கி,

**"சான்றவிர் வாழியோ சான்றவிர் என்றும்**
**பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி அறனறிதல்**
**சான்றவர்க் கெல்லாம் கடனானால் இவ்விருந்த**
**சான்றீர் உமக்கொன் றறிவு றுப்பேன்''**

என்றும்,

**"இருளுறு கூந்தலாள் என்னை**
**அருளுறச் செயின்நுமக் கறனுமா ரதுவே''**

என்றும் வரும் கலித் தொகைப் பாடல்களும் (139, 140) சான்றோரை அழைத்து, அறமுறை புரிய வேண்டியவையாம்.

இவற்றால் தமிழாயும் அவையும் முறையாயும் அவையும் சிறந்து விள்ங்கியமையும், அவ் வவைக்கண் ஆன்ற அறிவரும் சான்ற பண்பரும் திகழ்ந்தனர் என்பதும் அவர்களே மொழிநலக் காவலராகவும், வழி நலக் காவலராகவும் திகழ்ந்தனர் என்பதும் புலப்படும். **இவ் வவைக்கண் இடம் பெறுதல் என்பது எய்தற்கு அரிய பேறாக மதிக்கப்பட்டது என்பதும் அப்பேறு வாய்க்கப் பெற்றோர் ஓங்கிய புகழராக விளங்கினர்** என்பதும்,

**"வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்"**

என்னும் புறப்பாட்டால் (239) விளக்கமுறும்.

இப்பழந்தமிழர் அவையங்களைப் பற்றிய அகன்ற நோக்கொடு அவையறிதல் அவையஞ்சாமை என்னும் அதிகாரங்களை ஓதுதல் வேண்டும். இவற்றிற்குத் தலைமணியாகத் திகழ்வதும் பெற்றோர் கடமையாகக் கவினுவதம் ஆகிய,

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**

என்னும் குறள் மணியில் பொதிந்துள்ள 'அவையத்தின் மாண்புச் சீர்' பளிச்சிட்டுப் புதுப் பெரிய பழம் பொருளைக் கையிற் கவின்மணியாகக் காட்டிப் பண்டை வரலாற்றுப் பொதிவைப் புதையலாகக் காட்டுதல் புலப்படும்.

மேலை நாட்டுக் கலைக் கழகங்களிலும், அறிவியல் கழகங்களிலும், உலக ஆட்டக் கழகங்களிலும், அரசாளுமைக் குழுக்களிலும இடம் பெறுதல் எத்தகு

பெருமைக்குரியதாகக் கருதப்படுகின்றதோ அத்தகு பெருமையை அன்று அவ்வயைத்து இடம் பெறுதல் தந்ததாம் என்று நோக்குதல் சாலும் என்க.

அவையம் என்பதற்குக் கற்றாரவை என்று பரிமேலழகரும், சான்றோர் அவை என்று காலிங்கரும், 'ஆஸ்தானம்' என்று பரிதியாரும் உரை கண்டனர். இவ்வரலாற்றுப் பார்வையால், இப்பொருள்களின் மூல விளக்கங்கள் காணக் கிடைக்கின்றனவாம்.

**சான்றோன் :**

அறிவறிந்த மக்கட் பேறு பாராட்டுக்குரியது.

பழிபிறங்காப் பண்புடைய மக்கள் வழிவழிச் சிறப்புக்குரியர்.

பெற்றோர் கடமை எய்தற்கரிய பேரவையங்களில் தம் மக்களை முன்னவராக இருக்கச் செய்தல்.

தம்மினும் தம் மக்கள் அறிவாளராகத் திகழ்வதால் உலகுக்கு நலமெய்தும் - என்னும் பெரு வட்டங்களில் பார்வையைச் செலுத்தும் வள்ளுவ நோக்கைத் திரட்டிப் பார்த்த பார்வையோடு,

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**

என்னும் குறளின் வரலாற்றுப் புதையலைக் காண்போம்.

"தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான்

பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும்" என்று உரை கூறிய பரிமேலழகர், கேட்ட தாய் என்பதற்குப் **பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்டதாய்** எனவும் கூறினார் என்று விளக்கமும் வரைந்தார்.

மக்கட் பேறு என்னும் அதிகாரப் பெயர் தானும், புதல்வரைப் பெறுதல் என்று கொண்டவர் என்பது பலரும் அறிந்தது. புதல்வன், புதல்வி, என்பவற்றின் பொதுப்பன்மைப் பெயர் புதல்வர் ஆதலால், அப்பாடத்தால் பெண்பாலைத் தாழ்த்தினார் என்பது ஆகாது. இவ்வுரையில் வரும்' பெண்ணியல்பால் தானாக அறியாமை' என்பதால் அக்குறைக்கு உரியவரானார் அவர்.

இக்குறளில் வரும் **'சான்றோன்' 'கேட்ட தாய்'** என்பவற்றால், ஓர் அரிய வரலாற்றுப் புதையலாக இக்குறள் அமைந்திருத்தல் வெளிப்படும்.

சால்பின் அடிப்படையில் வருவது சான்றோன் என்னும்சொல்.சால்புஎன்பதுநிறைவுஎன்னும்பொருளது. பண்பின் நிறைவு பற்றியே பெரிதும் குறிக்கும் இச்சொல் 'பெருமிதம்' எனப்படும் வீரத்தின் நிறைவை யும் குறிப்பதாயிற்று. இவ்விருபொருள்களிலும் போர்த் திணைப் பாடலும் பண்பியல் பாடலும் மிடைந்து புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் வருதல் கண்கூடு.

**"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''**

என்னும் புறப்பாடலில் வரும் **சான்றோன்** வீரனாதல் புலப்படும். வேற் கருவி, களிறெறிதல் என்பவை போர்ப் பொருளவாதல் தெளிவு. ஆதலால் சான்றோன் என்பதற்கு 'வீரன்' என்னும் பொருள் காண்பதே முறைமை.

இனி,

**''பொன்னும் துகிரு முத்து மன்னிய**
**மாமலை பயந்த காமரு மணியும்**
**இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து**
**அருவிலை நன்கலம் அமைக்கும் காலை**
**ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்**
**சான்றோர் பால ராப**
**சாலார் சாலார் பாலரா குபவே''**

எனவரும் **கண்ணகனார்** பாடல் *(புறம். 218)* பண்பின் நிறைவு காட்டும் சிறப்பினதாம். கோப்பெருஞ் சோழனுடன் வடக்கிருந்த பிசிராந்தையாரைக் கண்ட கண்ணகனார் பாடல் ஆதலும், வடக்கிருந்த பிசிராந்தையாரைக் கண்ட கண்ணகனார் பாடல் ஆதலும், வடக்கிருக்க வந்த பொத்தியார் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் ஆகியோரும் கூடியிருந்த நிலையில் பாடிய பாடல் இஃது ஆதலும், **பண்பின் நிறைவு புலப்படுத்துவதாம்.**

**''கொலக்கொலக் குறையாத் தானைச் சான்றோர்''**

ஈபதும் *(பதிற். 82)*

"**சான்றோர் மெய்ம்மறை**"

என்பதும்(பதிற். 14; 58) வீரர் என்னும் பொருள் தருவனவாம்.

"**ஈண்டுச் சான்றோர் என்பது போரில் அமைதி யுடைய வீரரை.** மெய்ம்மறை - மெய்புகுகருவி; மெய்ம் மறை என்றது அச்சான்றோர்க்கு மெய்புகு கருவி போலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலின்.

இச்சிறப்பு நோக்கி இதற்குச் 'சான்றோர் மெய்ம்மறை' என்பது பெயராயிற்று" என்பது **பழைய உரை.**

'சான்றோன்' என்னும் சொல் வீரப் பொருள் தருவதும் பழமைப் பட்டதே என்பதை இச்சான்று களால் உறுதி செய்யலாம்.

தாய், 'சான்றோன்' எனத் **தன் மகனைப் பிறர் கூறக் கேட்டு மகிழ்தற்** சான்றுகளைக் காணலாம்.

**"மீனுண் கொக்கின் தூவி யன்ன**
**வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**
**களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்**
**நோன்கழை துயல்வரும் வெதிரத்து**
**வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே"**

இப்புறப் பாட்டு (277) **பூங்கண் உத்திரையார்** என்னும் பெண்பாற் புலவர் பாடியது. இது தும்பைத் திணையில் **'உவகைக் கலுழ்ச்சித்'** துறையது. 'உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே' என்பதைக் கருதுக.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

என்னும் இப்புறப்பாட்டு *(278)* **காக்கை பாடினியார் நச்செள்ளையார்** பாடியது. அதே தும்பைத் திணையும் அதே உவகைக் கலுழ்ச்சித் துறையும் அமைந்தது. பலர் கூறக் கேட்டாள்:- அமரில் புறமுதுகு காட்டினான் எனப் பொய்யுரை புகன்றனர் அவர். அவள் அவ்வாறாயின் பெற்ற தன்னைத் தானே அழித்துக் கொள்ள வாளொடு சென்றாள். அவனோ, மார்பில் புகழ்ப் புண்ணேற்றுப் புகழுலகு எய்தியிருத்தல் கண்டாள். ஈன்ற பொழுதினும் பெரிது உவந்தாள்.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் என்னும் இக்குறண் மணியின் வீர வரலாற்றுப் புதையல்கள் அல்லவோ இப்புறப் பாடல்கள்! வரலாறு மட்டுமா, வாய்ச் சொற்களும் அல்லவோ திகழ்கின்றன.**

**கேட்டதாய் :**

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்

புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே''

என்னும் **காவற் பெண்டின்** பாடலையும் *(புறம் - 86)*

''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே!
மூதின் மகளிர் ஆதல் தகுமே;
மேனாள் உற்ற செருவிற் கிவள்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே''

என்னும் **ஒக்கூர் மாசாத்தியார்** பாடலையும் *(புறம். 279)* பார்த்துவிட்டும், சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெருந்தகு திறங்களைக் கண்டு விட்டும், 'பெண்ணியல் பால் தானாக அறியாமை' என எழுதிய **பரிமேலழகர் பார்வை தமிழியல் தழுவாததாகி விடுகின்றதாம்.**

**புலவர் :**

புலமைத் தொழிலையே தொழிலாகக் கொண்ட புலவர்களும் சங்க காலத்தில் வாழ்ந்தனர். புலமைத் தொழிலோடு துறைத் தொழிற் மேற்கொண்டு வாழ்ந்தோரும் இருந்தனர். முன்னவர் நிலை, கொடை

யாளர்களை நாடி வாழும் வாழ்வாகவே இருந்தது. பின்னவர் வாழ்வு பொருளியற் சிக்கல் இல்லாததுடன் நிலைபெறு வாழ்வாகவும் அமைந்தது. இவற்றைப் பண்டைப் புலவர்களின் பாடல்களைப் பயின்ற அளவானே கண்டு கொள்ளலாம்.

புலவர்கள் பொதுமக்களாலும் புரவலர்களாலும் நன்கு மதிக்கப்பட்டனர். எத்தகு பெருவேந்தன் எனினும் 'அவன்' என்னும் ஒருமைச் சுட்டாலேயே வழங்கப் பட்டான். எத்தகு வறுமையர் எனினும் புலவர் 'அவர்' எனப் பன்மைச் சுட்டாலேயே குறிக்கப் பட்டார். 'அவனை அவர் பாடியது' என்னும் துறைக் குறிப்பால் இது விளங்கும்.

புலவர்கள் தங்களைப் பற்றி அப்புலவர் பாத் தொகுப்பில் அவ்வாறு அமைத்துக் கொண்டனர் என்று எண்ணந் தோன்றுவதும் பொருந்தாது. அரங் கேறிய மன்னர்கள் வளாகத்திலேயே செய்யப் பட்டவை அத்தொகை நூல்கள் என்பவை யெல்லாம் வெளிப்படை உண்மைகள்.

புலவர்களை மதித்துப் போற்றிய மாண்பு தனிச் சிறப்பினது.

> **"புலவர் பாடும் புகழுடையயோர் விசும்பின்**
> **வலவன் ஏவா வானஊர்தி எய்துப"**

என்னும் **உறையூர் முதுகண்ணன் சாத்தனார்** பாடிய பாட்டு, புலவர் பாடும் பாடலை அவாவி நின்ற புரவலர்தம் ஆர்வப் பேற்றைக் காட்டும். (புறம். 27)

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகா சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"

என்னும் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** வஞ்சினப் பாட்டு புலவர்தம் எஞ்சாப் புகழை எடுத்துரைக்கும் *(புறம். 72)*

"மலிபுகழ்,
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும் மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை"

என்று **ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்** பாடிய பாட்டு *(புறம். 71)* புலவர் தம் புணர் கூட்டை வியப்புற வெளிப்படுத்துவதாம்.

புலவர்தம் புணர் கூட்டுப் பெற்றோர் பெறும் பேறும், அதனைப் பெறாக் கால் எய்தும் பாடும்/

"சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலரி நிரைகண் டன்ன
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே"

என்னும் **முதுகண்ணன் சாத்தனார்** பாடற் பகுதியால் விளங்கும் (புறம் - 27) பாட்டும் உரையும் பெற்றோர் மலரிதழ் அன்ன மாண்பினர்; அவற்றைப் பெறார் இலையென மாய்வோர் என **ஒரு கொடி உறுப்புகள் இரண்டனைக் கொண்டே ஒரு குடிப்பிறந்தோர் வாழ்வும், மாய்வும் சுட்டியமை தனியுயர் புலமைச் சிறப்பினதாம்.**

புலவர்கள் வாழ்க்கை கரவற்றதாய், கயமையற்ற தாய்த் திகழ்ந்த பேறு தமிழ் மண்ணுக்கு உண்டு. வறுமைப் புலவரும் குறைவிலா நிறைவு அமைந் தாராகத் திகழ்ந்த பேறும் உண்டு.

இளந்தத்தன் என்பார் ஒரு புலவர். அவர் சோழன் நலங்கிள்ளியின் இடத்தில் இருந்து உறையூர் எய்தினார். அவ்வுறையூர், காரியாற்றுத் துஞ்சிய நெடுங் கிள்ளி என்பான் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அக்கிள்ளி அப்புலவரை, ஒற்றர் எனக் கருதிக் கொல்லப் புகுந்தான். அந்நிலையில் ஆங்கிருந்த புலவர் கோவூர் கிழார், 'புலவர் வாழ்வு' இத்தகைய தெனச் சொல்லோவியம் படைத்துக் காட்டினார். அது,

**"வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளிற் போகி,**
**நெடிய என்னாது சுரம்பல கடந்து,**
**வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்,**
**பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,**
**ஓடியாது உண்டு, கூம்பாது வீசி,**
**வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை**
**பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே;**
**திறம்பட,**

**நண்ணார் நாண அண்ணாந் தேகி**
**ஆங்கினி தொழுகின் அல்லது ஓங்குபுகழ்**
**மண்ணாள் செல்வம் எய்திய**
**நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே''**

என்பது (புறம். 47)

வேடந்தாங்கலுக்கு எத்தனை நாட்டுப் பறவைகள் எய்துகின்றன. அவை குடியுரிமை பெற்றனவா? கடவுச் சீட்டோ, புகவுச் சீட்டோ பெற்றனவா? அவற்றுக்குக் கரவு இல்லை; கறை இல்லை; காட்டிக் கொடுக்கும் கயமை இல்லை; காவு வாங்கும் கன்மனம் இல்லை! ஆதலால், கண்டு கண்டு களிப்புறக் காத்துக் கிடப் பாரையும், அவ்வாறு கண்டு களிக்க ஊக்கும் ஆட்சி யரையும் கண்ணேரில் காண்கின்றோம்! **புள்ளிற் போகி** என்கிறாரே புலவர் செலவினை! இன்னும் புலமை யரின் புகழ் நலங்களை இப்பாடல் கொண்டு விரிப்பின் எத்தகு விரிவுக்குரியதாம்! விரித்துக் கண்டு கொள்க.

புலவர் வாழ்வு புரவலர் வாழ்வு போன்றது என்று புகழ்கிறாரே! இஃது இல்லது புனைதலா? உள்ளது புகழ்தலா? இல்லை இல்லை! உள்ளது புகல்தலே?

**"நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்**
**பன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழ நின்**
**நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்**
**இன்னோர்க் கென்னாது என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே**

பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே''

என்னும் பெருஞ்சித்திரனார் பாடலைத் தமிழறிந்தார் நன்கனம் அறிவர். இப்பெருஞ்சித்திரனார் வறுமைப் பாடு எத்தகைய பாடு? இப்பாடுதானே வழக்கு உலகில், **'சித்திரவதை'** என்னும் மரபுத் தொடரை உலாவ விட்டது. பெருஞ்சித்திரனார் பட்ட வறுமைத் துயர வார்ப்புத்தானே இது. இதனை அவரே உரைக்கிறாரே!

**'என்னுயிர் போகாதா, இன்னும் வாழ்கிறேனே'**

என்று ஏங்கும் **தாய்!**

**கோலே காலாகக் கூனிக் குறுகுதலும்**
**நூலிழைத் தொங்கலெனக் கன்னத்தின் தோல்**
**சுருக்கமும்,**
**முற்றத்திற்கும் செல்ல இயலா முடியாமையும் உடைய தாய்**
அவர்.

**பச்சை உடலர்; படரும் நோயர்;**
**சுற்றிச் சூழும் மக்கள்; சப்பியும் பால்சுரவா மெலிவர்;**
**குப்பைக் கீரையின் புதுப் புதுத் தளிரைக் கொய்து**
**உப்பும் இல்லாமல் வேகவைத்து ஊட்டித் தான்**
**உண்டும் உண்ணாதும் வாடும் தன்மையர்; பீறல்**
**உடையர்;**
**ஆயினும் கொண்ட கணவன் உவகைச் சுரப்புக்கு**
**ஊற்றானவர் - இல்லக் கிழத்தியார்!**
**ஊண் இல்லாமையால் வீட்டை மறந்து திரியும்**
**மக்கள்!**

**ஓரொருகால் உள்ளே எதுவும் இல்லாத கலத்தை நோக்கி**
**அழூங் குழந்தையை அமர்த்தி வைக்கப் புலியையும்,**
**அம்புலியையும் காட்டியும் தீராப் பசியைத் தீர்க்க இயலாக் கொடும் வறுமை!**

குமணன் கொடுத்த கொடையைப் பெற்றதும் அவன்வழங்கிய கொடைமையை அவன் வழங்கிய தெனவே வள்ளன்மையால் உற்றார் உறவு சுற்றத் தார்க்குப் பெருஞ்சித்திரனார் வழங்கினார். தாம் வழங்கியது போலவே தம் துணைவியாரும் வழங்க ஏவினார். இதனை 'நீயும், கொடுமதி' என்பதால் எவ்வளவு அருமையாக விளக்கி விடுகிறார் புலவர் பெருஞ்சித்திரனார்! வறுமைப் புலவரா பெருஞ்சித்திர னார்? வள்ளற் புலவர் அல்லரோ!

இதோ ஒரு புலவர் கபிலர்; பாரியின் தோழராகிய அவர் தொடர்பு பாரியொடு முடிந்ததா? பாரியைத் தொடர்ந்து பெரும் பிரிவு கொள்ளத் துணிந்த அவரைத் தடுத்து நிறுத்தியது பாரியின் மக்களைக் காத்தோம்பும் காவல் கடமை அல்லவோ! அக்காவல் கடமையை ஓராற்றான் முடித்த பின்னர் வாழவும் கருதினாரோ?

திருக்கோவலூாரைச் சார்ந்து செல்லும்.

பெண்ணையாற்றின் இடைக்குறை மலைத் திட்டினைக் **'கபிலக் கல்'** என்று வழங்குதல் இன்றும் உள்ளதே. அக்கல்லின் சிறப்பினை,

**"வருபுனற் பெண்ணைத்**
**தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது;**
**மொய்வைத் தியலும் முத்தமிழ்க் கபிலன்**
**மூவரின் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்**
**பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை**
**அலைபுனல் அழுவத் தந்தரி க்ஷம்செல**
**மினல்புகும் வீடுபே றெண்ணிக்**
**கனல் புகும் கபிலக் கல்லது"** *(செந்தமிழ். 4: 232)*

எனவரும் திருக்கோவிலூர்க் கல்வெட்டு, புரவலனும் நண்பனுமாம் பாரிக்கும் கபிலர்க்கும் இருந்த உயிர் நட்பு உயர்வற உயர்ந்ததாம். அதனால் அவர்காலப் புலவர்களாலும் அடுத்திருந்தோராலும்,

**"நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்"** *(பதிற்.85)*

**"வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்"** *(புறம்.53)*

**"பொய்யா நாவிற் கபிலன்"** *(புறம். 174)*

**"புலனழுக் கற்ற அந்த ணாளன்"** *(புறம். 126)*

என்றெல்லாம் பாடப்பட்டார்.

'கபில பரணர்' எனப் பிரித்துக் கூறாப் பெருமைப் புலவர் இரட்டையராகத் திகழ்ந்த இவ்விருவருள் பரணரும், "இன்றும் **பரணன்** பாடினன் மற்கொல்" என **ஔவையாரால்** பாராட்டப் படுகிறார் (புறம். 99)

கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவர் **ஆதனுங்கன்** என்னும் வள்ளலை நோக்கி,

**"எந்தை வாழி ஆத னுங்க என்**
**நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே**

**நின்னியான் மறப்பின் மறக்குங் காலை**
**என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்**
**என்னியான் மறப்பின் மறக்குவென்''**

என்று கூறிய கெழுதகைமை யடிகள் நெஞ்சம் நெகிழ்விக்கும்.

வையாவிக் கோப் பெரும் பேகன் இல்லந்துறந்து இனியதுணை வாட நல்லூரரை நண்ணி வேறு வாழ்வு கொண்டானாகவும், "குழல் இனைவது போல் அழுதனள்" "அருளாய் ஆகலோ கொடிதே" "அரும் படர் களைமே" "நெடுந்தேர் பூண்கநின் மாவே" "இன்று பெயரின் அதுமன் எம் பரிசில்" என்று முறையே கபிலரும், பரணரும், அரிசில் கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் பாடிய பாடல்கள் (புறம். 143-147) நாடாள்வோன் தன் குடி நலங்காத்தலில் தலையாயது தன் குடும்ப நலன் காத்தல் என வலியுறுத்திக் கூறியது வாழ்வியல் வாய்மையாம். இத்தகு புலவர்களின் சீர்த்திமை வரலாற்றுப் புதையல்களை உள்ளடக்கி ஒன்று திரட்டிப் பார்க்கும் பார்வை ஒன்றால்தான்,

**"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்''**

என்னும் குறளின் அருமைப் பாட்டை அறிய முடியும்.

இத்தகு வரலாற்றுப் பின்னணிகளை அல்லது நிகழ்வுகளை எண்ணி ஒரு குறளின் பொருளைப் பார்த்தல் முறையாமோ என்பார் உளராயின் அவர், "நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம்" என்னும் வள்ளுவர் வாய்மொழியையும், "எல்லா நூல்களினும்

நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பாகலின்" என்னும் பரிமேலழகர் உரையையும் *(322)*

**"ஓதற் கெளிதாய் உணர்தற்கு அரிதாகி"**

என்றும்,

**"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால்"**

என்றும்,

**"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு**
**தெரிந்து திறம்தொறும் சேரச் – சுருங்கிய**
**சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச்**
**வல்லாரார் வள்ளுவரல்லால்" (சொல்லுதல்**

என்றும் வரும் திருவள்ளுவ மாலைப் பாடல்களையும் அறிதல் தெளிவு செய்வதாம்.

**சாதலின்பம் :**

**ஈகை** அதிகாரத்தின் நிறைவுப் பாடல்,

**"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை"**,

என்பது. ஈவதற்கு முடியாத நிலையில் அம்முடியாமையை எண்ணித் துன்புற்றுக் கிடப்பதனினும் இறத்தலும் கூட இன்பமாய் அமையும் என்னும் இப்பாடல் உலக நிகழ்வொடு பொருந்துவதோ என்னும் ஐயம் எழலாம்.

"இரந்து வந்தவன் இனிய முகத்தைக் காணும் அளவும், இரக்கப் படுதலும் துன்பமாகவே இருக்கும்" என்று வண்மையர் உண்மையியலை வள்ளுவர் சுட்டுதலை அறிந்து கொள்ளல் (224) பயன் செய்யும்.

பெருந்தலைச் சாத்தனார், தலைக் கொடை யாளனாகத் திகழ்ந்த குமணனைக் காணச் சென்றார். அவனோ தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடேகி யிருந்த காலம் அது.

காணச் சென்ற வேந்தன் காடுறை வாழ்வினன் என்பதை அறிந்து கொண்ட பின்னரும், அவனைத் தேடிக் காண ஏவுகின்றது புலவர் வறுமை. அவன் பொருள் நிலை எண்ணாராய்த் தம் வறுமை நிலை உந்துதலால் எடுத்துரைக்கத் துணிந்தார்.

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅல் இன்மையில் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉம்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக் கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை அறிந்தனை யாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே"

எனப் பாடினார். தம் வறுமையைக் கூறிய அளவில் நின்றாரா? "என் நிலை அறிந்தனையாயின், இந்நிலைத் தொடுத்தும் கொள்ளாது அமையலென்" என்று மொழிகின்றார். "வளைத்தாவது வருத்தியாவது கொள் ளாமல், திரும்ப மாட்டேன்" என்னும் வன்கொடும் துணிவில் நிற்கிறார் புலவர். அவர்தம் வறுமையினும், குமணன் கொடைப் பெருமை வழங்கிய துணிவே அஃதாம்.

அவ்வள்ளல் உள்ளம் உருகியது! இப்புலவன் துயரைக் களைதல் என் கடன். அதற்கு எவ்வழியும் இல்லை. ஆனால், ஒரோ ஒரு வழி இருப்பது மகிழ்வா கின்றது. தலைக்கு விலை வைத்த தம்பியுள்ளான் ஆகலின் தலையைத் தந்து இவர் வறுமையை ஒழிப்பேன் என நொடிப் பொழுதில் முடிவு செய்து தன் தலையைக் கொய்து செல்லுமாறு சாத்தனார் கையில் வாளைத் தந்தான்.

வாளைப் பெற்ற அளவில் புலவர் வறுமை ஓடிப் பறந்தது. அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பதற்கு எடுத்துக் காட்டாக இதனினும் ஒன்று உண்டோ உண்டோ? "அன்பிலார் எல்லாம் தமக் குரியர்" என்பதற்கே உரிய எடுத்துக் காட்டாக இருப் பான், தலைக்கு விலை வைத்தான் அன்றி எவனே இருக்கமுடியும்? என எண்ணி அவ் வன்பிலானை அடுத்துச் சென்றார். நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறினார்: இரும்பினும் வலிய நெஞ்சிலும் ஈரம் வெளிப்பட அவர்தம் பாடல் எழுந்தது. அது:

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே;
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களில் தொடர்பறி யலரே;
தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே''

என்பது *(புறம். 165)*

"விரும்பிக் கொடுத்த கொடைமைய மீட்டும் தருக என்று கேட்பதைக் காட்டிலும், துயரமாவதோ இனிய உயிரை இழப்பது" என்னும் பொருளமைய,

''கொடுத்தவை தாஎன் சொல்லினும்
இன்னா தோநம் இன்னுயிர் இழப்பே''

என்று குறுந்தொகைப் பாட்டுக் கூறும். ஒருசார், இக்கருத்தும் ஒத்தியல்வதேயாம்.

## குலனுடையான் ஈதல்

**"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள"**

என்பது ஈகைச் சிறப்புக் கூறுகள் பலவற்றை உள்ளடக்கிய குறள் ஆகும். இதற்கு, "யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறன்கண் சொல்லாமையும், அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் இவை இரண்டும் உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே" என்று உரை கூறுகிறார் பரிமேலழகர்.

இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் என்பதற்கு "அவ் இளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல்" எனவும், "அதனைப் பின்னும் பிறன் ஒருவன் பால் சென்று அவன் உரையா வகையால் கொடுத்தல்" எனவும், "யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேன்" எனவும் உரைப்பாரும் உளர் என்கிறார்.

பரிசில் கடாநிலை, பரிசில் விடை, பரிசில் துறை எனவரும் புறத்துறைப் பாடல்களைத் திரட்டிப் பார்ப்பின் இப்பாடல் விளக்கம் தனிச்சுவடியாகும் தன்மையதாம்.

**"சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"**

**"முன்னூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்"**

**"கொடைமடம் படுதல் அல்லது படைமடம்**
**படாஅன்"**

"மறுமை நோக்கின் றவன்வண்மை பிறர்
வறுமை நோக்கின்று"

"நாளன்று போக்கிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர்"

"தேற்றா ஈகையும் உளதுகொல்

"போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே
"செல்வத்துப் பயனே ஈதல்"

இன்னவாறு வரும் தொடர்களை மேலோட்டப் பார்வையாகப் பார்ப்பினும் இலனென்னும் எவ்வம் உரையாமைக் குறளின் பரப்புப் புலப்படும். மேலும்,

"முன்னம் முகத்தின் உணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே"

என்பதும் (புறம். 3) பதிற்றுப் பத்தின் பதிகங்களும் பட்டினப் பாலை அரங்கேற்றக் கொடையும் எண்ணின் சாலும்.

## உண்டு என்பது

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்பது பண்புடைமைக் குறள். இதனொடு

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை"

என்னும் சான்றாண்மைக்குக் குறளும் கருதத் தக்கது.

பண்பாளர் பண்பாலேயே உலகியல் பண்பாடு நிலைக்கும் என்னும் இக்கருத்து பெருவிரிவினதாம். அவ்விரிவு, கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய புறப்பாடலால் பெரிது விளங்கும் (182) அது,

**''உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்**
**அமிர்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''**

என்பது.

திருக்குறள், சீத்தலைச் சாத்தனாரால்,

**''பொய்யில் புலவன் பொருளுரை''**

என்று போற்றப்பட்டது. அவர்க்கு முன்னே பொருள் மொழிக் காஞ்சித் துறையில் திருக்குறளின் விரிவு விளக்கம் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியார் பாடலில் காண வாய்த்துளது.

திருக்குறளுக்கு அறம் என்பதோர் பெயர் உண்மை எவரும் அறிவர். அறத்துப் பால் மட்டுமோ அறம்? பொருள் வரவும், செலவும் அறவழிப்பட்டமையே குறளியம்; அறத்தான் வரும் இன்பமே இன்பம் என்பதும் குறளியம். குறளியப் பார்வை எங்கும் அறமே; எல்லாம் அறமே; அவ்வறம் மனத்துக்கண்

மாசிலாமையில் தொடங்கி வியனுலகாக விரியும் பெற்றியது. ஆதலால் அதன் பெயர் பலவாயினும், 'அறம்' என்னும் பெயரே என்றும் தனிமாமணிப் பெயராய்த் திகழ்கின்றதாம்.

இதோ ஒரு பாடல் :

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென,**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென**
**அறம்பா டிற்றே ஆயிழை கணவ**
**...............**
**எங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்**
**பீடுகெழு நோன்தாள் பாடே னாயின்**
**படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்**
**யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்**
**சான்றோர் செய்த நன்றுண் டாயின்**
**இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்**
**கொண்டல் மாமழை பொழிந்த**
**நுண்பஃ றுளியினும் வாழிய பலவே"**

இருபத்து மூன்று அடிகளைக் கொண்ட இப்பாடலின் ஈரடிகளில் ஒருகுறளும், 'அறம்' என்னும் பெயரும் இருத்தல் அடிப்படை வரலாற்றுச் சிந்தனை யைத் தூண்டுவதாம்.

ஆளைப் பாடாமல் அறம் பாடுவதுதான் திருக்குறள். ஆனால் அவ்வறத்தைப் பாடுங்கால் அதன்

உள்ளுள்ளாக வரலாற்று வரிச்சட்டங்கள் வள்ளுவர் உள்ளத்துள் பொதுளி இருக்கவே செய்யும். முந்து நூல்கள் அவர் உள்ளத்துள் பதிவுற்றவை. போலவே முந்து நூல்கள் அவர் உள்ளத்துள் பொதுளி இருக்கவே செய்யும். முந்து நூல்கள் அவர் உள்ளத்துள் பதிவுற்றவை போலவே முந்தை வரலாற்றுப் பதிவுகளும் நிகழ்கால வரலாற்றுப் பதிவுகளும் நிழலாடிப் பதிவுகளைப் பதித்திருக்கவே வேண்டும். அப்பதிவின் ஆக்கப் பதிவு வரலாற்றை வெளிப்படக் காட்டா விடினும் அப்பதிவுகளுக்கு அடிமூல வரலாறுகள் இருந்திருக்கவே செய்யும். அவை தமிழ் மண்ணின் மணத்தொடு கலந்த மாட்சியவையே என்பதை அறுதியிட்டுரைக்க உதவும்.

இனி இவ்வகையின் வரலாற்றுப் பின்புலங்கள் அனைத்தையும் திரட்டித் தருதல் இப்பொழிவு அளவில் நிறைவுறாது. அது மிக விரிவுடையது. எண்ணிலாக் குறள்களுக்கு வரலாற்றுப் பதிவு உண்மையை வெளிப்படுத்துவது அவ்வகையில், அகழ்ந்து பார்க்கும் பார்வையைச் சோற்றுப் பதமாகச் சுட்டியதே இவ்வாய்வு ஆகும். இதன் விரிவை ஆய்வுலகம் கொள்ளுமாக.

*



# 3. தொல்காப்பியர் வழியில் திருவள்ளுவர்

## ஒப்பாய்வு

தமிழ் மொழிக்கு அரணாக வாய்த்த நூல் **தொல்காப்பியம்.** தமிழர் வழிக்கு அரணாக வாய்த்த நூல் **திருக்குறள்.** இரண்டு நூல்களும், தமிழர் தம்மிரு கண்களாகக் காக்க வேண்டிய இணையிலா ஒளி நூல்கள்.

தொல்காப்பியம் செந்தமிழ் மொழியின் காவல் நூல்; அப்பொருள் படவே 'தொல்காப்பு இயம்' எனப்பட்டது. பழமையான மொழி மரபுகளைக் காக்கும் நூல் என்பதே அதன் பொருள்.

திருக்குறள் அயல்வழக்குகளும் அயல்நெறிகளும் அலைத்துக் குலைக்காமல் தமிழர் நெறி ஈதென நாட்டுதற்கு எழுந்த மறை - பாதுகாப்பு நூல்.

முன்னது தமிழ்ப் பரப்பளவில் எண்ணி எழுதப்பட்ட நூலே என்பது,

**"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத்த"து**

என வரும் அதன் பாயிரத்தால் தெளிவாக விளங்கும். ஆயினும், மொழிப்பரப்பின் பொது இலக்கணம் அனைத்தும் கொண்டதுடன், வாழ்வியல் இலக்கணமாகிய "பொருள்" பற்றியும் புகல்வது அது. பின்னது தமிழ் மண்ணில் தோன்றினாலும், உலகளாவிய ஒருமைப் பாட்டுப் பார்வையில் உயர்ந்து விளங்கும் வகையில் திட்டமிட்டுச் செய்த செப்ப நூலாகும். தொல்காப்பியம் திருக்குறள் ஆகிய நூல்களின் உள்ளுறை எவ்வாறு ஒத்து இயல்கின்றன, ஒன்றை ஒன்று எவ்வாறு தழுவி நடையிடுகின்றன என்பவற்றை விளக்குவதே இவ்வாய்வு ஆகும்.

தமிழ்த் தொல்காப்பியத்திற்கும், உலகக் குறளுக்கும் உள்ள ஒப்புமை, ஆய்வுப் பொருளாக முன்னரே சிலரால் மேற்கொள்ளப்பட்டுள. ஆயினும், அவற்றின் நோக்கும் போக்கும் வேறானவை ஆதலால் இவ்வாய்வு மேற்கொள்ளப் படுகின்றதாம்.

## பெயர்

திருக்குறளின் பெயர் **'குறள்'** என்பதே. அது திருவென்னும் அடையுற்றே திருக்குறளாயிற்று.

திருவுக்கு உயர்வும் மங்கலமும் பேறும் பிற பிறவும் வளர்நிலையால் வாய்க்கப் பெற்றவையாம்.

யாப்புகள் சிலவற்றுக்குத் திருவிருக்குக் குறள். திருச்சந்தம், திருத்தாண்டகம், திருவாசிரியம் இன்ன பலவாறாக வழங்கப் பெற்றபின்னை வழக்காக அமைந்தது 'திருக்குறள்' என்னும் பெரீடு ஆகும். திருவள்ளுவமாலையிலும் 'குறள்' 'இன்குறள்' 'குறள் வெண்பா' 'குறும்பா' என்பதையன்றித் 'திருக்குறல் என்னும் பெயர் இல்லை. ஏனெனில், யாப்பின் உண்மைப் பெயர் உலகறிய வேண்டும் என்பதேயாம்.

தொல்காப்பியர் 'குறவெண்பாட்டு' என்பது பற்றிக் கூறுகிறார். அதனினும் நெடிய நெடுவெண் பாடலையும் குறிப்பிடுகிறார். (செய்.156) குறட்பாவால் அமைந்த நூல் **'குறள்'** எனப்பட்டது. பாக்களுள் முதற்பா வெண்பா; அவ் வெண்பாவில் முதற்பா, குறள் வெண்பா. அவ்வெண்பாவால் அமைந்த நூலை இயற்றியவர்க்கு என்ன பெயர் சூட்டினர்? 'முதற் பாவலர்' என்றனர்.

## முதற்பாவலர்

முதற்பாவலர் வள்ளுவர் அல்லர்; அவர்க்கு முன்னரே பல்லாயிரம் புலவர்கள் விளங்கிய மண் தமிழ் மண். ஆதலால் அவரை முதற்பாவலர் என்பது, முதற்பாவாகிய குறள் வெண்பாப் பாடுவதில் வல்லார் என்னும் பொருள் கொண்டேயாம். இப்பெயர் தொல்காப்பிய வழியில் வந்தது என்பதும் 'குறள்'

என்னும் பெயர் நூலுக்கு வந்ததும் அவ்வகையிலேயே என்பதும் தெளிவுதானே.

## வாயுறை

இனித் திருக்குறளுக்கு 'வாயுறை வாழ்த்து' என்பதொரு பெயருண்டு என்பதும் அறிந்ததே. இப்பெயரிய வாழ்த்தின் இலக்கணம் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. அது,

**"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**
**வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்**
**தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்**
**றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"**

செய்.108

என்பது. வேம்புபோல் கசப்புச் சொல் இருத்தல் கூடாது. கடுவைப் போல் நச்சுச் சொல் (வசைச் சொல்) புகுதல் ஆகாது. வழிவழியே சிறப்புறத் தக்க பாதுகாப்புச் சொல்லைச் சொல்லுதல் வேண்டும். இது வாயுறையின் இலக்கணமன்று. வாயுறை வாழ்த்தின் இலக்கணம்.

வாயுறை வாழ்த்து முன்னே நின்று முறையொடு வாழ்த்தும் வாழ்த்தாம். திருக்குறள் வாயுறை கூறுவது. இடித்தக் கூறுவது; அறைந்து கூறுவது; எனினும் காவற் குழவி பேணுவார் போன்ற தாய்மைக் கனிவுடன் வழிவழி நன்மை பயக்கக் கூறுவது. அடித்து அறம் கூறினும் ஆக்கம் கருதியே கூறுவதாகலின் பின்னையோர் வாயுறை வாழ்த்தெனப் பெயரிட்டு வழங்கினர் என்பது.

## நூல் நெறி

நூல் வகைகளைக் கூறும் தொல்காப்பியர். முதல்நூல், வழிநூல் என இரண்டாகப் பகுக்கிறார். வழிநூல் வகை நான்கு எனவும் சுட்டுகிறார். அந்நூல் வகையில் முதல் வகையாகிய 'தொகுத்தல்' வழிப் பட்டது திருக்குறள். இது,

**''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''** *(322)*

என்னும் குறளால் தெளிவுற விளங்கும். அன்றியும் இக் குறளின் விளக்கத்தில் உரையாசிரியர் பரிமேலழகர்,

**''எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு''**

என்று கூறுவது கருதத் தக்கதாம்.

நல்லன தொகுத்துக் கூறினார் எனினும் அல்லன கடிதலும் கொண்டார் வள்ளுவர் என்பது எதிர்மறைப் பெயரீட்டால் வழங்கும் அதிகாரப் பெயர்களே வெளிப்படக் காட்டும்.

இனித் தொகுத்தலே யன்றி விரித்தலும் தொகுத்தும் விரித்தும் கூறலும் வள்ளுவத்தில் உண்டு. தமிழியற்கு மாறுபட்டனவற்றைக் கடிந்து கூறுதலை நோக்க, அயலார் கொள்கை மறுப்பும், அயலார் அறநெறி மயக்க மறுப்பும் வள்ளுவர் மேற்கொண்டார் என்பது நூலோதுவார் நன்கு அறிந்தவை. ஆதலால் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்னும் வழிநூல் வகையையும் வள்ளுவர் மேற்கொண்டார் என்பது விளங்கும். விளங்கவே,

''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி
மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனைமர பினவே''
*(மரபு - 98)*

என்னும் வழிநூல், நூல்நெறி நான்கும் போற்றிப் பொலிவுறச் செய்யப்பட்ட புகழ்நூல் திருக்குறள் என்பது நன்கனம் விளங்கும்.

## நுண்சிறுகுறள்

இனித் திருக்குறளின் சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் பின்னையோர் பலரையும் வயப்படுத்தி யமையால் அவர்கள் தத்தம் நுழைபுலம் விளங்க உவமை வகையால் வெளிப்படுத்தினர்.

அவ்வகையில் வெளிப்பட்டனவே,

''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்''

என்னும் இடைக்காடர் பெயரால் விளங்கும் வள்ளுவமாலைப் பாடலும், "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறிந்த குறள்" என்னும் ஒளவையார் பெயரால் விளங்கும் வள்ளுவ மாலைப் பாடலும் (54, 55) ஆகும்.

அன்றியும், வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா விரி,

''தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்''

என்கிறது கபிலர் பெயரால் அமைந்த வள்ளுவ மாலைப் பாடல் (13)

குறள் வடிவில் வந்த மால், ஈரடியால் மூவுலகும் அளந்த உவமையை விரித்துக் கூறும் வள்ளுவமாலைப் பாடல்களும் (6.14) இவ்வகையினவே. "ஆல் அமர் வித்தின் அருங்குறள்" என்னும் கம்பர் இரட்டுறலும், திருவண் பரிசாரத் திருக்கோயில் இறைவன் பெயர் 'குறளப்பன்' என்பதும் இணைத்து நோக்கத் தக்கன.

"சுருங்கிய சொல்லால் பரந்த பொருள்" வழங்க வள்ளுவர்க்குத் தூண்டலாக இருந்தது யாதாகும் என்னின், தொல்காப்பிய நூற்பா இலக்கணமேயாம். அது,

**''சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்**
**சொல்லுங் காலை உரையகத் தடக்கி**
**நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்**
**துளக்கல் ஆகாத் துணைமை எய்தி**
**அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்**
**பல்வகை யானும் பயன்தெரி வுடையது**
**சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்''**

என்பது (மரபு - 101)

## முப்பால்

திருக்குறளுக்கு 'முப்பால்' என்பது பெருவழக்குப் பெயர். சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார். நாகன் தேவனார், கோதமனார், முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார்,

கீரந்தையார், உருத்திர சன்மனார், உறையூர் முதுகூற்ற னார், களத்தூர் கிழார், அக்காரக்கனி நச்சுமனார், ஆலங்குடி வங்கனார் என்பார் பெயரிலுள்ள வள்ளுவமாலைப் பாடல்கள் அனைத்தும் 'முப்பால்' என்றே மொழிகின்றன.

**"இன்பம் பொருள் அறம் வீடு"** என்றும்,

**"அறமுதல் நான்கும்"** என்றும்

வள்ளுவமாலை *(33, 38)* கூறுவதும்,

"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன" என்று பரிமேலழகர் உரைப் பாயிரம் கூறுவதும் தமிழ் நெறி அன்றாம். தொல் காப்பியமோ, திருக்குறளோ கூறா நெறியுமாம். **தொல்காப்பியம் முப்பால் மொழிவதே யன்றி நாற்பால் மொழிவது அன்றாம்.** அவ்வழியே வழியாய்க் கொண்டது வள்ளுவமாம். களவியல் முதல் நூற்பா,

**"இன்பமும் பொருளும் அறமும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை"**

என்கிறது. செய்யுளியல் நூற்று ஐந்தாம் நூற்பா,

**"அறமுதலாகிய மும்முதற் பொருள்"**

என்கிறது. புறநானூறும் இம்முப்பாற் கொள்கையை யுடையதே.

**"அறமும் பொருளும் இன்பமும் ஆற்றும் பெரும"**

என்பது நலங்கிள்ளியை முதுகண்ணன் சாத்தனார் பாடிய பாட்டு *(28)*

**"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல**
**இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை"**

என்பது அந்நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடிய பாட்டு *(31)*

இவற்றால் பழந்தமிழர் முப்பால் கொள்கையர் என்பதும், அவ்வழியே வழியாய் வாழ்வு நூல் இயற்றியவர் வள்ளுவர் என்பதும் விளங்கும்.

## காமத்துப் பால்

முப்பால் முறையை அறம் பொருள் இன்பம் என்றும், இன்பம் பொருள் அறம் என்றும் இருவகைப் படுத்திக் கொள்ளல் பழ வழக்கே என்பது மேலே சுட்டிய தொல்காப்பிய நூற்பாக்களால் புலப்படும். களவியலில் இன்பத்துக்கு முதன்மை தருதலும், செய்யுளியலில் அறத்துக்கு முதன்மை தருதலும் இடமறிந்து வழங்கும் இயல்நெறி எனப் போற்றுதல் நேரிதாம். இத்தகைய வைப்பு முறையே அறிஞர் மு.வ.வை **"இன்பம், பொருள், அறம்'** எனக் கொண்டு திருக்குறள் அல்லது வாழ்வியல் விளக்கம் என எழுதத் தூண்டிற்றாம். நரிவெரூஉத் தலையார் பெயரால் விளங்கும் வள்ளுவமாலைப் பாடல் *(33)*,

**"இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்"**

என்று எண்ணியதை முன்னரே சுட்டினோம். திருக்குறளில்,

"அறம் பொருள் இன்பம்" *(501)*

"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" *(754)*

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்
கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு" *(760)*

இன்னவாறு முப்பால் முறையைச் சுட்டும் இடங்கள் மேலும் பலவாதல் அறியலாம்.

முப்பால் முறையில் 'இன்பம்' என்று சுட்டியிருப்பவும் காமத்துப் பால் எனப் பெயராட்சி கொண்டமை வள்ளுவரே கருதி வைத்த வைப்பாமோ என எண்ணல் முறைமை. மூன்றாம் பாலில் இன்பச் சொல் ஈரிடங்களில் மட்டுமே இடம் பெற்றது. அவ்விடங்களிலும் காமச் சொல்லுடன் இணைந்தே பெற்றது (1160, 1330) ஆனால் காமம் என்பதோ 39 இடங்களில் விளங்குகின்றது. 'காமன்' என்பானும் ஓரிடத்தில் ஆளப் பெறுகின்றான். (1197)

இன்பம் என்பதோ பொதுப் பெரு வழக்குச் சொல். காதற் காம நுவற்சிக்குக் 'காமம்' என்னும் ஆட்சியே தனிச் சிறப்பாட்சியாகும். அரும்பி முகிழ்த்து மணம் பரப்பும் 'காம' இயல் விளக்கும் ஆட்சி அது. அதனைத் தொல்காப்பியம்,

"கமம் நிறைந் தியலும்"

என்று கூறும் (உரி.57) 'கமம்' முதல் நீண்டு 'காமம்' ஆதல் சொல்லியல் முறை. அம்முறையில், காமக் கூட்டம்,

காமஞ்சான்ற, காமத்திணை, காமநிலை, காமப் பகுதி, காமப் புணர்ச்சி, காமம் சாலா எனப் பல்வேறு ஆட்சிகளைப் பெறுதல் தொல்காப்பியம் காட்டும்.

இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் பொதுவானது. ஆனால் காமமோ முருகி வளர்ந்து முழுதுறத் திரண்டு மாந்தரிடத்து மட்டுமே ஓங்கி உயர்வது (தொல். பொருளியல். *29*) ஆதலால் இன்பம் என்பதனினும் காமம் என்பதே பொருந்தியமை காண்க.

இனிக் காமத்துப் பாலை 'காம சூத்திரம்' என்னும் நூலின் வழியது எனப் பெயர் மயக்கம் ஒன்றே மயக்கமாகி உரைத்தார் உளர். அவர்தம் பொருந்தாப் பொய்ம்மையைத் தொல்காப்பியம் விளங்கக் காட்டும்.

உரிப்பொருள்கள் இவை எனக் கூறும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா *(14)*

**"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"**

என்று கூறும்.

அகப் பொருளுக்குரிய முப் பொருள்களாகிய முதல், கரு, உரிப் பொருள்களுள் உரிப்பொருளே தனிச் சிறப்பினதாம். உரிப்பொருட் சிறப்புக்குத் துணை யாவனவே முதல், கருப் பொருள்களாம். இதனை,

**"முதலிற் கருவும், கருவில் உரியும் சிறப்புடையன"**
என்பார் நச்சினார்க்கினியர் (அகத் - *3*)

அடியளவால் சுருங்கிய திருக்குறளில், முதல் கருப் பொருள்களை விரித்துக் கூற அத்துணை வாய்ப்பு இல்லை. ஆகலின், சிறப்பமைந்த உரிப்பொருளைக் கூறுதலையே வள்ளுவர் கொண்டார். ஆகலின், உரிப்பொருள் ஐந்துக்கும் ஐந்து ஐந்து அதிகாரமாய் இருபத்து ஐந்து அதிகாரங்களைப் பாடி, தொல் காப்பியம் வைத்துள்ள புணர்தல், பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் முறையே முறையாய் நிலைப் படுத்தினார். ஐந்து அதிகாரங்களிலும் நடு அதிகாரம் உரிப்பொருள் அமைவாகவும் முன்னிரண்டும் பின்னிரண்டுமாம். அதிகாரங்கள் அதன் நிமித்தங் களாகவும் (சார்பு நிலை) வைத்தார். இதனைக் கீழே வரும் அடைவில் காண்க :

## 1. புணர்தல்

*1.* தகையணங்குறுத்தல், *2.* குறிப்பறிதல், *3.* **புணர்ச்சி மகிழ்தல்,** *4.* நலம் புனைந்துரைத்தல், *5.* காதற் சிறப்புரைத்தல்.

## 2. பிரிதல்

*6.* நாணுத் துறவுரைத்தல், *7.* அலர் அறிவுறுத் தல், *8.* **பிரிவாற்றாமை,** *9.* படர் மெலிந்திரங்கல், *10.* கண்விதுப் பழித்தல்.

## 3. இருத்தல்

*11.* பசப்புறு பருவரல், *12.* தனிப்படர் மிகுதி, *13.* **நினைந்தவர் புலம்பல்,** *14.* கனவு நிலையுரைத்தல், *15.* பொழுது கண்டிரங்கல்,

## 4. இரங்கல்

*16. உறுப்பு நலன் அழிதல், 17. நெஞ்சொடு கிளத்தல், 18.* **நிறையழிதல்,** *19. அவர்வயின் விதும்பல், 20. குறிப்பறிவுறுத்தல்.*

## 5. ஊடல்

*21. புணர்ச்சி விதும்பல், 22. நெஞ்சொடு புலத்தல், 23.* **புலவி,** *24. புலவி நுணுக்கம், 25. ஊடலுவகை.*

இவற்றால், காமத்துப்பால் தொல்காப்பியக் கட்டளைக் கல்லாய் இயங்குதல் தெளிவாம். அவர் கூறிய கூற்று வகையாலேயே காமத்துப் பால் இயலலும் காணத் தக்கதாம்.

## அறத்துப் பால்

அறத்துப் பால் இல்லறம் துறவு என்னும் இரு பகுதிகளைக் கொண்டமை எவரும் அறிவர். காமத்துப் பால் 'களவியல்', 'கற்பியல்' எனப் பெயரீடு பெற்றமை யைத் தொல்காப்பியக் களவியல் கற்பியல்கள் வெளிப் படக் காட்டும். ஆனால் அதனைப் போல் அறத்துப்பால் காட்டிற்றில்லை எனத் தோற்றம் தரக் கூடும். ஆழ்ந்து ஆராய்ந்தால் இல்லறம் துறவு என்னும் இயற்பெயர் களும் தொல்காப்பிய வழிமைய என்பது புலப்படும்.

அறம் என்பது யாது எனின், வள்ளுவம், "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்று கூறும். அறத்தை அகத்தொடு நிலைப்படுத்திய வள்ளுவப் பெருந்தகை. "அகந்தூய்மை வாய்மையாற் காணப்

படும்” எனச் சொல்லறம் கூறினார். இனி ஒழுக்க அறம் அல்லது கடைப்பிடி அறம் யாது எனின் “உள்ளத்தால் பொய்யா தொழுகல்” என முக்கரண ஒருமைப் பாட்டை உரைப்பார். இதற்கு மூல முழக்கம் எங்கே உள்ளது எனின், தொல்காப்பியத்து வரும் ‘அறத்தொடு நிலை’ காண்க. அக அறமே, பிற அறங்களிற் சான்றது என்பதை மெய்ப்பிக்கும் செய்தியாம் இது.

இனி, இல்லறம் சொல்லிய திருவள்ளுவர் துறவையும் அடுத்தே வைத்ததும் இரண்டையும் அறத்தின் கண்ணேயே வைத்ததும் தொல்காப்பிய வழிய என்பது தெள்ளத் தெளிவினதாம்.

**“காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”**

என்னும் கற்பியல் நூற்பா (51) இதனைத் தெளிவிக்கும்.

இல்லற வாழ்வு வாழ்ந்தார். தம் மக்களுக்குச் செய்ய வேண்டும் செயல்களை யெல்லாம் செவ்விதின் முடித்து, தம் மொத்த சுற்றத்தொடும் கூடியமைந்து ஒப்புரவு எனப்படும் உலக நலக் கடமைகளைப் புரிதல் வேண்டும். அதுவே இவ்வில்லறப் பயனாகும் என்கிறார். தொல்காப்பியரின் இவ்வாணைப்படியே இல்லறம் துறவு ஆகியவற்றை வள்ளுவர் வகுத் துள்ளார். இல்லற மேல் வளர்நிலையே துறவன்றி, அது தனியன்று என்னும் தொல்லாசிரியர் கருத்தோடு இணைந்தே அறத்துப் பாலுள் வைத்தார். கல்லூரிக்

கல்வி தேர்ந்தார் பல்கலைக் கழக ஆய்வில் புகுவார் போன்ற உயர்வும், உயர்வில் உயர்வுமே இவை என்க.

**பாயிரம்**

இனித் திருக்குறள் முதல் நான்கு அதிகாரங் களையும் பாயிரம் என்பாரும், பாயிர இயல் என்பாரும் உண்டு. பாயிர இலக்கணம் அதன்கண் இல்லை என்றும், வள்ளுவர் பாடியதன்று என்றும் மறுப் பாரும் உண்டு.

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**

என்பது புறத்திணை இயல் நூற்பா (33)

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பவை மூன்றும் வடுவிலாச் சிறப்பின. இம்மூன்றும் கடவுள் வாழ்த் தொடு பொருந்தி வருவன என்பது இந்நூற்பாவின் திரட்டுப் பொருள்.

**கொடி** என்பது வளைவு வட்டப் பொருளது; சுழற்சியும் அதுவே. "மின்னுக் கொடி" என்பது சிலப்பதிகாரம். பரவிப் படர்ந்து மின்னொடு முழங்கி வளஞ்சுரக்கும் வான் சிறப்பே கொடி நிலையாகும்.

**கந்து** என்பது பற்றுக்கோடு; கந்து அழிபற்றை அழிப்பது; பற்றற்ற நீத்தார் பெருமை அது.

**வள்ளி**யாவது வளத்தால் வாய்வது; அது அறன் வலியுறுத்தல்.

இம்மூன்றும் கடவுள் வாழ்த்தைச் சார்ந்து முறையே வருதல் கருதத் தக்கதாம். ஆகலின் இந்நான்கு அதிகாரங்களும் தொல்காப்பிய வழிப்பட்டனவேயாம்.

"நீடு வாழ்வார்" நெறி ஈதெனக் காட்டும் நூல் திருக்குறள் (3,6) வாழ்த்துதல் வழியால் பிணக்கம் நீங்கி இணக்கம் காண வழியுரைக்கும் நூல் திருக்குறள் (1312, 1317) வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் தெய்வ நிலையர் எனத் தெளிவிப்பது திருக்குறள் (50). இவற்றுக்கு ஏற்ப வாழ்த்து வகையால் நூலைத் தொடங்கி நுவல்வது திருக்குறள் என்பதற்குத் தக்க அமைதியுண்டு. அவ்வமைதிக்கு வழிகோலி நிற்கும் வண்மை நூல். தொல்காப்பியமாகும்.

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ என்பன வாழ்த்து, வகைகளாம். (செய். 110) இவ்வாழ்த்து வகைக்கு ஏற்ப முறையே கடவுள் வாழ்த்தும், வான் சிறப்பும் நீத்தார் பெருமையும், அறன் வலியுறுத்தலும் அமைந்துள்ளனவாம். இவ்வாழ்த்து வகை இலக்கணத்தொடு (செய். 111-113) திருக்குறள் முதல் நான்கு அதிகாரப் பொருள்களையும், உட்பொருளாக வரும் பல அதிகாரங்களையும் ஒப்பிட்டுக் காண்பார் உணர வாய்க்கும்.

## முதலும் முடிவும்

திருக்குறளின் முதல் எழுத்து 'அ'கரம் ஆதலும், முடிவு எழுத்து 'ன'கரம் ஆதலும் பலரும் சுட்டுவதே. இதற்கு மூலம் என்ன?

**"எழுத்தெனப் படுப,**
**அகர முதல் னகர இறுவாய்"**

எனத் தொல்காப்பிய நூன்மரபு முதல் நூற்பா எனல் தகுமே.

'தமிழ்' என்பது 'அகப்பொருள்' என்னும் பொருள் தருதல் குறிஞ்சிப் பாட்டாலும் இறையனார் களவியலாலும் அறிய வரும்.

ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப் பாடப்பட்டது குறிஞ்சிப் பாட்டு என்னும் குறிப்பும், இறையனார் களவியல் உரை இது தமிழ் கூறிற்று என்பதும் காண இவ்விளக்கம் பெறலாம். அவ்வகையில் தமிழ் அகப் பொருள் கூறும் திருக்குறள் காமத்துப் பால், 'அணங்கு கொல்' என 'அ'கரத்தில் தொடங்கி 'ன'கரத்தில் முடிதலும் எண்ணி மகிழத் தக்கதாம்.

## உலகம்

திருக்குறள் முதல் முழக்கம் உலக முழக்கம்; அதன் நோக்கும் வாக்கும் நீக்கமற உலகம் தழுவியவை. அவற்றை விரிப்பில் பெருகும்.

**"நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"**

என்பது தொல்காப்பியம் (மரபு 90)

நிலம், நீர், வளி, விசும்பு என்பன ஐம்பூதங்கள். இப்பூதங்களால் படிமான வளர்ச்சியில் உருக்

கொண்டதே உலகம். உலகுக்கு மூலமாம் பூதங்களே பொறிகளுக்குப் புலனாகிப் புலமை சேர்ப்பன. அப்பூதங்களின் கூட்டமைப்பே உடல் என்பன வெல்லாம் ஆய்வுலகம் காண்பன.

இவற்றின் அடிப்படையில்,

**"சுவை ஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்**
**வகையறிவான் கட்டே உலகு"**

**"கண்டுகேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே உள"**

**"முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம்**
**வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு"**

**"பொறிவாயில் ஐந்தவித்தான்"**

**"ஐந்தவித்தான் ஆற்றல்"**

என்றெல்லாம் வள்ளுவம் விரிப்பதுடன்,

**"வஞ்சு மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்"**

என்றும் கூறும்.

**"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான"**

என்பதும் தொல்காப்பியம். இவ்வாணையொடு,

**"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்"**

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு"

"எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு"

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்"

இன்னவாறு வரும் குறள்களை எண்ணின் இரண்டின் இணை நடை இனிது புலப்படும்.

## மொழி

"முன்னோர் மொழிபொருளே யன்றி
அவர்மொழியும்
பொன்னே போல் போற்றுவம்"

என்பது நூனெறி.

அந்நெறியை வள்ளுவர் பற்றிக் கொண்டமை அறிந்து மகிழத் தக்கதாம்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்பது தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா (176).

இக்கருத்துக்கு உடன்படும் திருக்குறள்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்கிறது. ஒருதாயின் இரட்டை மகவெனத் தோற்றம் தருவன அல்லவோ இவை.

மொழி பொருள் வகையால் ஒத்துச் செல்லுதல் முன்னே காட்டப்பட்டவற்றுள் உள எனினும் மேலொன்று காட்டலாம் :

**"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"**

என்பது தொல்காப்பியம் (மெய்ப். 27)

இதற்கு "மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணானும் செவியானும் உணர்தல் என்பது என்னை எனின் மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம் பற்றி முகம் வேறுபடுதலும், உரை வேறுபடுதலும் உடைமையின் அவை கண்ணானும் செவியானும் உணர்ந்து கோடல் அவ்வத் துறைபோயினாரது ஆற்றல் என்பது கருத்து" என்பது பேராசிரியர் உரை விளக்கம்.

குறிப்பறிதல் எனப் பொருட்பாலில் ஒன்றும், இன்பத்துப் பாலில் ஒன்றும் குறிப்பறிவுறுத்தல் என இன்பத்துப் பாலில் இன்னொன்றும் ஆக மூன்றதிகாரங்கள் வள்ளுவத்தில் இடம் பெற்றமை இத்திறம் பற்றியே யாம். (71,100,128)

**"கூறாமை நோக்கிக் குறிப்பறிதல்"**

**"ஐயப்படாது அகத்தது உணர்தல்"**

**"குறிப்பிற் குறிப்புணர்தல்"**

**"முகம் நோக்கி நிற்க அமையும்"**

**"கண்ணின் வகைமை உணர்வார்"**

என்பது பொருட்பால் குறிப்பறிதல்.

இன்பத்துப்பால் குறிப்பறிதல் பத்துப் பாட்டில் ஒன்பது பாடல் நோக்குப் பற்றியவை. ஒன்று செவி (சொல்) பற்றியது.

**“உண்கண் உரைக்கல் உறுவது”**

**“நகை மொக்குள் உள்ள தொன் றுண்டு”**

**“கண்ணினால் காமநோய் சொல்லி இரவு”**

**“தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி அஃதாண் டவள்செய் தது”**

என்பவை குறிப்பறிவுறுத்தல்.

இனிக் **“கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை”** என்பது புறத்திணைச் செய்தி (21) வாகைத் திணை சார்ந்தது.

அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவு நிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை என்பவற்றைக் கட்டமை ஒழுக்கத்தனவாகக் காட்டுகிறார் இளம் பூரணர். இவை யெல்லாம் திருக்குறள் 13, 14, 12, 18, 19, 21, 17, 16 அதிகாரப் பெயர்களாம். இவ்வதிகாரம் ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொரு குறளை எடுத்துக் காட்டுகிறார் இளம்பூரணர்.

அவ்வாறே “பொருளொடு புணர்ந்த பக்கம்” என்றும் வாகைத் திணைத் துறைக்கு மெய்ப்பொருள் உணர்ந்த பக்கமும் என உரை கூறும் இளம்பூரணர்,

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு" *(354)* எனவும்,

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" *(351)*

எனவும் வரும் என்கிறார். "இன்னும் பொருளொடு புணர்ந்த பக்கமும் என்றது, அறம் பொருள் இன்பம் மூன்றிலும், அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொரு ளொடு பொருந்திய பக்கமும் என்றுமாம். பொரு ளாவது, நாடும் அரணும் பொருளும் அமைச்சும் நட்பும் படையும்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்பதாலும் கொள்க" என்றும் கூறி ஆறற்கும் ஆறதி காரக் குறள் ஒவ்வொன்றை எடுத்துக் காட்டுகிறார்.

பக்கம் என்றதால் ஒற்று, தூது, வினைசெயல் வகை , குடிமை, மானம் என வருவன வெல்லாம் கொள்க என்கிறார்.

'அருளொடு புணர்ந்த அகற்சி' என்பதற்கு அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பவற்றைப் பொருந்துதலாம்" எனக் கூறி எடுத்துக் காட்டுகளைத் தருகிறார்.

இவற்றை நோக்கத் தொல்காப்பியப் புறத்திணை யியல் ஒழுகலாற்றைத் திருக்குறள் தழுவிச் செல்லு

மாற்றினை முதல் உரையாசிரியரே நிறுவிக் காட்டுதல் தெள்ளிதின் விளங்கும்.

அதிகாரம் அதிகாரமாகத் தொல்காப்பியர் வழியில் திருக்குறள் செல்லுதல் உரையாசிரியரை வயப் படுத்தியமையால்தான் உறுதி பெறக் கூறினார் என்க.

தொல்காப்பியக் களவியல் "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (2) என்றும், "சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப" (3) என்றும்,

**"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்**
**காட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்"**

என்றும், (5) வருவனவற்றின் விரிவாக்கமே, தகையணங் குறுத்தல், குறிப்பறிதல் என்பனவாம்.

**"கொல்லே ஐயம்"**

என்பது தொல்காப்பியம் (இடை 20) 'கொல்' என்னும் ஐயமுணர்த்தும் சொல்லை,

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"**

எனக் காமத்துப் பால் முதற் குறளில் வைத்து மும்முறை ஓதியமை தொல்காப்பிய வழிமையை ஒல்காது விளக்கும்.

**"இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்"**

என்பது மெய்ப்பாட்டியல் மொழி (24) புலவி நுணுக்கப் பத்தும் இவற்றின் விளக்கமாகவே அமைதலைக் காண்க.

1. "பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் (பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

2. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

4. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

6. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் (என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

7. வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
எம்மை மறைத்திரோ என்று.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

10. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

*இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல் அன்றி இப்பத்தில் ஒன்று தானும் உண்டோ? தொல்காப்பியம்*

வாழ்விலக்கணம். வள்ளுவம் வாழ்விலக்கியம் என்பதை மெய்ப்பிப்பன அல்லவோ இவை.

**"அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே"**

என்னும் கற்பியல் நூற்பாவிற்கு *(21)* உரைவரையாமல்,

**"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
**நீராக நீளுமிந் நோய்"** *(1146)*

எனவரும் என்கிறார் இளம்பூரணர்.

'அலர் அறிவுறுத்தல்' என்னும் அதிகாரப் பத்துமே இந்நூற்பாவின் விரிவுரையே எனல் சாலும்.

சொல்லா மரபின சொல்வது போலவும், கேளாமரபினை கேட்பன போலவும் சொல்லுதலைச் செய்யுளியலில் சொல்வர்ர் தொல்காப்பியர் *(199)* பொருளியலிலும் குறிப்பிடுவார் *(2)* 'உண்டற் குரிய அல்லாப் பொருளை உண்டன போலக் கூறலும் மரபே' எனவும் அப்பொருளியலில் உரைப்பார் *(19)* இவற்றுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் திருக்குறட் பாடல்கள் பல. சான்றாகக் காண்க :

**"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன் நெஞ்சே**
**நீஎமக் காகா தது"** *(1291)*

**"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே (இவையென்னைத்**
**தின்னும் அவர்க்காண லுற்று"** *(1244)*

**"கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் (பெண்டகைப்**

**பேதைக் கமர்த்தன கண்."** *(1084)*

**"உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு"** *(1200)*

## சொல்லாட்சி

தொல்காப்பியச் சொல்லாட்சிகளை வள்ளுவர் நனி சிறப்பொடு போற்றுதல், ஆய்வார்க்குப் பளிச்சிடுதல் ஒருதலை. உவமை தோன்றும் நிலைக் களங்களைத் தொல்காப்பியர்.

**'சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப'**

என்று கூறி, அதன்மேல்,

**"கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்"**

(உவமை 4.5)

என்பார். இதில் கிழக்கு என்பது 'கீழ்' என்றும் பொருளது. இப்பொருளில் திருவள்ளுவர்,

**"செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை"**

என ஆள்வார் *(488)* இத்தகைய பிறவும் உள.

திருக்குறளின் உரைத் தெளிவிற்குத் தொல்காப்பியப் புலமை இன்றியமையாததாம்.

சிறந்த ஒன்றைச் சொல்லுங்கால் 'இழும்' என்னும் மொழி பயிலச் சொல்ல வேண்டும் என்கிறார்

தொல்காப்பியர். அதற்குச் சான்று அதுவே என்பார் போல, "இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்" என்கிறார் (செய் 236) எண்வகை வனப்புகளில் தோல் என்பதன் இலக்கணம் ஈதெனக் குறிக்கிறார்.

''குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்''

என்பவற்றைச் சிறப்பு 'ழ'கரம் பயிலும் இழுமென் மொழியமையப் பாடியது அறிக.

பாவியச் சுவையூட்டுவதில் தனிச்சிறப்புடயது வண்ணம் ஆகும். வண்ணங்கள் இருபது என்று எண்ணி விளக்கங் கூறினார் தொல்காப்பியர். அவ்வண் ணங்களுள் பலவற்றுக்குத் திருக்குறளில் எடுத்துக் காட்டு உள்ளமை அறிந்து மகிழத் தக்கதாம்.

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை''

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

இன்னவை வல்லிசை வண்ணம்.

''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு''

இன்னவை நெடுஞ்சீர் வண்ணம்.

''வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்
நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்''

என்பவை தொல்காப்பிய இலக்கணம்.

வண்ணங்களை இடத்தொடும் இயைய வள்ளுவர் இயற்றி வைத்தலை "அணங்குகொல்" என்னும் மெல்லிசை வண்ணத்தை வைத்து அடுத்த பாடலிலேயே, "நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்" என வல்லிசை வண்ணம் வைத்தமையால் அறிக.

தொல்காப்பியத் தேர்ச்சி திருக்குறள் பொருள் தெளிவுக்கு கட்டாயம் வேண்டத் தக்கது. இதற்கொரு சான்று காண்க.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.''

என்பது திருக்குறள். பெருமை என்பதற்கு மிகுதி எனப் பொருள் கண்டனர். "நிலையாமை மிகுதியுடைத்து" என்றும், "இந்நிலையாமையே உலகின் மிக்கது" என்றும் பரிமேலழகர் உரையும் விளக்கமும் வரைந்தார்.

"நேற்று இருந்தவன் இன்று இல்லை என்பது பெருமையாமோ சிறுமை யல்லவோ" என்று

கருதினார், 'மங்கல வழக்காகப் பெருமை என்றார்.' என்றனர். ஆனால், தொல்காப்பியமோ இப்பெருமை என்னும் ஆட்சிக்குரிய மூலத்தைச் சுட்டுகின்றது. அது, 'மாற்றரும் கூற்றம் சாற்றிய **பெருமை**'' என்பது. "மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப் பட்ட **பெருங்காஞ்சி**'' என இதற்கு உரை கூறினார். உரையாசிரியர் (புறத். 19) பெருமை 'பெருங்காஞ்சி' என்னும் பொருள் கொண்டு நிற்றல் தொல்காப்பிய வழியே அறிய வாய்த்தல் ஆழமான செய்தியாம்.

தொல்காப்பியச் சொல்லாட்சிகளும் இலக் கணங்களும் திருக்குறளில் அமைந்துள்ளவற்றை விளக்கின் அது விரிவு மிக்கதாம். வேண்டுமளவால் ஆய்ந்து கொள்க என்று அமைதலே தகவாம்.

## விலக்கு

தொல்காப்பியர் வழியிலே திருக்குறளை இயற்றினர்ர் எனினும். விலக்குவ விலக்கினார் என்பதை மறவாது போற்றல் வேண்டும்.

> **"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
> **திருநீக்கப் பட்டார் தொடர்பு''**

என்னும் ஒரு குறளில் மூன்று விலக்குகளைப் குறிக் கிறார் திருவள்ளுவர். "பெண்ணிற் பெருந்தக்கது 'இல்'' என்னும் திருவள்ளுவர், ஒருமை மகளிரைப் போல வாழ்வானுக்கே பெருமை உண்டு என்று கூறுகிறார்

பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் என்ப வற்றைக் கூடா ஒழுக்கமாக்கி விலக்குகிறார்.

கள்ளுண்ணலையும் கவறு ஆகிய சூது ஆடலை யும் கடுமையாகக் கண்டிக்கிறார். தொல்காப்பியத் திலும் சங்க நூல்களிலும் கூறப்படும் இவற்றை ஒதுக்கித் தள்ள ஓங்கிக் குரல் கொடுத்தவர் வள்ளுவர் என்பதைக் கருதின் அக்கால வழக்கத்தைக் குறிப்பிடும் அளவில் நில்லாமல், அவ்வழக்கம் மாசற்ற மணியெனத் திகழ வேண்டும் என்று வள்ளுவர் கருதிய கருதுகோள் தெளிவுறப் புலப்படும்.

இனிக் கொல்லாமை, புலால் உண்ணாமை (புலால் மறுத்தல்) என்பவற்றையும் அருளுறு நோக்குக் கொண்டே உரைக்கிறார். இவை புரட்சிப் பார்வை வழியவாம்.

## விடுப்பு

அகத்திணை இயல் முதல் நூற்பாவில் தொல்காப்பியர்,

**“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப”**

என்கிறார். அவரே அடுத்த நூற்பாவில் கைக்கிளை பெருந்திணை என்பவற்றுக்கு நிலமில்லாமையை உரைத்து, நடுவண் ஐந்திணையென்றும் அன்பின் ஐந்திணை என்றும் சுட்டப்படும் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பவற்றை எடுத்துரைத்து,

இறுதியிலே கைக்கிளை பெருந்திணை இலக்கணங் களை உரைக்கிறார்.

## நிறைவு

தொல்காப்பியர் வழியில் நூல யாத்தவர் வள்ளுவர் எனினும். உலக நலக் குறிக்கோள் ஒன்றனையே முன் வைத்து வேண்டுவ கொண்டு வேண்டாதன விலக்கி அறநெறி காத்தார் என்பது மகிழ்ந்து பாராட்டவும் போற்றவும் தக்கவையாம்!



# 4. திருக்குறளும் கலைச்சொல்லாக்கமும்

திருக்குறள் "மாந்தர் வாழ்வாங்கு வாழ்வதற் காகவே" அருளப் பெற்ற நூல். அத் தலைமை நோக் கால் அருளப் பெற்ற நூலிலே அமைந்து கிடக்கும். இலக்கிய நயங்கள், கலைச் சிறப்புகள், நாடக உத்திகள், சொல்லாக்கத் திறங்கள் அறிவியற் கூறுகள் இன்னன பலப் பலவாம். இந்நாளில் இன்றியமையாததாக வேண்டத் தக்கதாக அமைந்துள்ள கலைச் சொல்லாக்கத்திற்குத் திருக்குறள் எவ்வெவ்வாறு பயன்பட்டுள்ளது என்பதைச் சுட்டுவது இவ்வாய்வு. இச் சுட்டுதல், திருக்குறளையும் மற்றைப் பழந்தமிழ் நூல்களையும் கலைச் சொல்லாக்க வைப்பாக்கிக்

கொள்ளுதற்குத் தூண்டுதலாக அமைய வேண்டும் என்னும் நோக்கில் எழுந்ததாகும்.

## அகராதி

அகராதி என்பது, அகர முதலாகஅமைந்த அடங்கல் முறைப்படி சொற்களை அமைத்து, அவற்றுக்குப் பொருள் கூறும் நூல் என்பது எவரும் அறிந்ததே. அகரத்தை ஆதியாகக் கொண்டு இயல்வதால் அகராதிப் பெயர் பெற்றது என்பது வெளிப்படை.

அகராதிகள் பலப்பல இக்காலத்துக் காணப் பெறுகின்றன. 'சதுரகராதி' தமிழ் கண்ட முதலகராதி எனினும். அதற்கு முன்னரே நிகண்டு நூல்கள் விளங்கின. தொல்காப்பிய இலக்கண நூலிலும் அகராதியின் முத்திரையுண்டு. நிகண்டுகளிலே அகராதி நிகண்டு என்பது அகராதிப் பெயரை முதற்கண் வழங்குகின்றது. அதற்கு முன்னரே தொல்காப்பியம், "அகர முதல் னகர இறுவாய்" என்றும், திருக்குறள், "அகர முதலஎழுத்தெல்லாம்" என்றும் அகர முதன்மையைத் தலைப்படக் காட்டின. திருக்குறள் ஆட்சியில் தோய்ந்தவர்களுக்கு, "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்னும் முதற்குறள் வழியே, 'அகர' 'ஆதி'ச் சொற்களும் அவற்றின் இணைப்பாகிய 'அகராதி'யும் கைவந்துவிட்டன.

## அகர முதலி

இந்நாளில் அகராதி 'அகர முதலி' என வழங்கப் பெறுகிறது. அதனை வழக்குப் படுத்திய செம்மல்

மொழிஞாயிறு பாவாணராவர். அவர் 'அகர முதலி' என்பதற்கு அடியாக அமைந்ததும் மேலே கூறிய இரு தொடர்களேயாம். 'அகர முதலாக அமைந்த நூல்' 'அகர முதலி' ஆயிற்று. ஆகலின், தேர்ச்சி மிக்க புலமையாளர் இயல்பாக வழங்கும் சொற்களும் கலைச் சொற்களாகக் கமழ்கின்றன என்று கொள்ளலாம்.

## நிறைகோல், சமன்கோல்

நிறை காண்பதற்கு ஒரு கோல் பயன்படுகிறது. அதனை நிறைகோல் என்பது வழக்கு. அதனைத் தூக்கி எடை பார்த்தலால் 'தூக்கு, தூக்குக் கோல்' என்பதும் வழக்கு. தன் கண்வைத்த பொருளைச் செவ்வையாக நிறுத்துக் காட்டலின் 'சமன்கோல்' என்றும் கூறினர். சமன்கோல் 'ஞமன் கோல்' எனவும் ஆளப் பெறும். இச் சமன் கோல் என்னும் கலைச் சொல் எப்படிக் கிடைத்து? "சமன் செய்து சீர் தூக்கும் கோல்" என்றார் திருவள்ளுவர். சமனும் கோலும் இணைந்து 'சமன் கோல்' எனக் கலைச் சொல்லாக்கம் பெற்றது.

## சீரை

இனிச் சமன் கோலுக்குச் 'சீரை' என்றொரு பெயரும் உண்டு. 'சீரை' என்பது செம்மைக்கு அல்லது சீர்மைக்குச் சான்றாக அல்லது அளவீடாக அமைந்தது என்பது பொருள். இச்சீரை என்னும் கலைச்சொல் எப்படி வாய்த்தது? 'சீர் தூக்கும் கோல்' என்றாரே திருவள்ளுவர். சீர் தூக்குவது சீரை ஆயிற்று. 'சீரை புக்க தூயோன் சிபி' எனப்பாடு புகழும் பெற்றான்.

## எழுதுகோல்

எழுதுகோல் இந்நாளில் பெருக வழங்குகிறது. முந்து எழுத்தாணி, ஊசி என்பவையே வழங்கின. இக்காலஎழுதுகோல் என்னும் கலைச் சொல் எப்படிக் கிடைத்தது? "எழுதுங்கால் கோல் காணாக் கண்ணே போல்" என்னும் திருக்குறள் எழுது கோலைத் தந்து விட்டது. காலை ஒதுக்கிக் கோலொடு ஒட்டிவிட்டார்கள். 'எழுது கோல்' எனக் கலைச்சொல் ஆகிவிட்டது.

## அளவுகோல்

இன்னொரு கோலும் திருவள்ளுவர் வழங்கு கிறார். அளவு கோல் என்னும் நீட்டல் அளவைக் கோல் அது. எப்படிக் கிடைத்தது அது? வறுமைப் போழ்து கூட நலத்தக்க - ஏன்? நயத்தக்க போழ்துதான்! ஏனெனில், உண்மையான உறவாளர் எவர் என்பதை உறுதிப் படுத்தித் தருவது அந்த வறுமைப் போழ்தே என அறங் கூறவரும் திறவோர் வள்ளுவர், "கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல்" என்கிறார். இதில் வரும், 'நீட்டியளப்பதோர் கோல்' இடைவிட்டும் செறிந்தும் இயைந்தும் நீட்டல் கோலையும், அளவு கோலையும் தந்துவிட்டதே! 'அளக்குங் கோல்' என்றும் குறிக்கிறார் வள்ளுவர். (710)

## நாட்காட்டி

நீட்டியளக்கும் கோல் நிற்கட்டும். காட்டி அளக்கும் காலக்குறி ஒன்றுள்ளதே. அதற்கு 'நாட் காட்டி' யெனப் பெயர் வைத்து அழைக்கிறோமே!

இந்நூற்றாண்டின் கொடைதானே தாளைக் கிழித்து, நாளைக் கழித்த கணக்கைஅறிவது. நெட்ட நெடுங் காலத்தின் முன்னர் வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை அல்லரோ 'நாட்காட்டி' என்னும் கலைச் சொல்லை வழங்கினார்.

**"நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்"**

என்னும் குறளில் 'நாளென ஒன்றுபோற் காட்டி'யதைத் தானே 'நாட்காட்டி'யாகக் குறுக்கி வைத்துக் கொண்டோம்? இந்நாளில் நாட்காட்டி மட்டுமோ வழங்குகின்றது? 'நாட்குறிப்பு'ம் நம் கையில் தவழ் கின்றதே! நாட்சரி (தினசரி) கூட நடக்கின்றதே! 'நாட் படி'க்கு இருக்கும் மதிப்பும் வேட்கையும் நாமறி யாதனவா? அரசுத் துறையில் கூட 'நாட்கூலி' வேலை உள்ளதே!

## மகப்பேறு

குடும்பத் திட்டமும் குடும்பக் கட்டுப்பாடும் பேசாத நாள் உண்டா?விளம்பரப்படாத சுவர் உண்டா? நாடு உண்டா? மருத்துவமனைகளிலோ பொது இடங்களிலோ முதற்கண் காட்சி வழங்குபவை இவ்விளம்பரங்கள் தாமே. வள்ளுவர் மக்கட்பேறு என்று ஓர் அதிகாரம் வகுத்துள்ளார் அல்லரோ! மக்கட் பேறும், மகப்பேறும் ஒன்றுதானே. மகப்பேற்று மருத்துவமனைகள் நகர்ப்புறவாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாயிற்றே இப்பொழுது!

## வாழ்க்கைத் துணை

காதல் இருபாலுக்கும் பொது; மகப்பேற்றுக் கடமையும் மனை வாழ்வும் இருபாலும் இயைந்த ஆக்கமேயாம். ஆனால் இவ்விருபாலுள் இயற்கை, ஆண்மைக்கே முதன்மை தந்தது. காதல் கிளர்ந்து அரும்பி முகிழ்ப்பவர் ஆகட்டும் - கடிமணத்திற்கு முற்பட நின்று ஏற்பாடு செய்பவர் ஆகட்டும் - மணவறையில் முதற்கண் அமர்த்தப் பெறுபவர் ஆகட்டும் - ஆடவரே அல்லரோ! அவர் கொடை வழங்கப் பெறுதற் குரியவரும், உடை வழங்கப் பெறுதற் குரியவரும் ஊறுவந்த காலையில் உதவப் பெறுதற்குரியவரும் மகளிரே அல்லரோ! பெரும் பாலும் மென்மையாய் அமைந்த பெண்மையைப் பேணிப் போற்றுதல் கடமையாம் என்று கொண்டே யன்றோ - பண்டுமுதல் இருபாலுக்கும் ஒத்த உரிமை கண்ட தமிழகம் - 'வாழ்க்கைத் துணை' என்றது. அவ் வாழ்க்கைத் துணை நலம் மட்டுமோ பேசினார்? 'வாழ்க்கைத் துணை' என்னும் கலைச் சொல்லையும் அல்லவோ வழங்கினார் வள்ளுவர்.

வாழ்க்கைத் துணை எனப்பட்டவர் பெண்ணா? ஆணா? இருவருமா? ஒருவருக்கு ஒருவர் துணை என்ற தெளிவால் தானே துணை என்றார். துணைவி என்றோ துணைவன் என்றோ சொன்னார் அல்லரே. இருவரும் ஒருவருக் கொருவர் துணையாதல் வள்ளுவ வாய்மையாம்.

திருகுறளில் அமைந்துள்ள சில தொடர்கள், இடையிடையே சில சொற்களை விடுத்து அமைத்துக்

கொண்ட கலைச் சொற்கள் குறித்து இதுகாறும் கண்டோம். இனி, முழுதுறு கலைச் சொற்களாகவே வள்ளுவரால் அமைக்கப் பெற்றுள்ள சொற்கள் சிலவற்றைக் காணலாம்.

## மனைமாட்சி

"மனைமாட்சி" என்று தொலைக்காட்சியில் காண்கிறோமே அதன் மூலவர் எவர்? மங்கலம் என்ப மனைமாட்சி" என்ற வள்ளுவர் தாமே அவர்.

## முற்பகல் பிற்பகல்

ஒரு நாளை இரவு, பகல் என இரண்டாகப் பகுத்து, அவற்றுள் பகலை, முற்பகல், நண்பகல், பிற்பகல் என்பது நம்மவர் வழக்கமாக உள்ளது. பகல்என்றாலே நண்பகலைக் குறிக்கும் வழக்கமும் உண்டு. முற்பகல் பிற்பகல் என்பவை AM; PM என நாம் வழங்குவதற்கு மொழிபெயர்ப்புப் போலவும் அமைந்துள்ளன.

ஆங்கிலவர் ஆட்சியின் பின்னர் வந்து வழங்குவன Anti Meridian (A.M.) Post Meridian (P.M.) என்பன. இவை இலத்தீன் வழிச் சொற்களாம். இனி Fore noon, After noon என்பனவும் வழக்கில் உள்ள ஆங்கிலச் சொற்களே.

இவ்விரு வகைச் சொற்களுக்கும் ஏற்பப் பண்டே படைத்து வைத்தாற்போல வழங்குபவை முற்பகல் பிற்பகல் என்பவையாம்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பது வள்ளுவம். இவ் வள்ளுவச் சொல்லாட்சியில் உள்ளம் பறிகொடுத்த இளங்கோவடிகளார்,

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்"

என்றார் *(21:3-4)*

## பொருள் வைப்புழி :

கருவூலம் என்பது நிதியறை, பொக்கிசம் என்பவற்றைக் குறிக்கும் கல்வெட்டுச் சொல். அச்சொல் *Treasure* என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற கலைச் சொல்லாக விளங்கி வருகின்றது. *Sub - Treasure* என்பதற்குச் சார்நிலைக் கருவூலம் என்னும் ஆட்சியும் வழக்கில் உள்ளது. இக்காலத்தில் அரசுடைமை வங்கி, தனியார் வங்கி என இருதிற வங்கிகளும் கடமை புரிகின்றன. *Bank* என்பதை வள்ளலார் 'பங்கி' என்று ஆண்டுள்ளார் 'பாங்கு' என்று இந் நாளில் பலர் குறிக்கின்றனர். வங்கியில் பாதுகாப்புப் பெட்டக வாய்ப்பும் *(Safety Locker)* ஏற்பட்டுள்ளது. இவற்றை நோக்க *Treasury* என்பதற்குக் கருவூலம் என்னும் சொல்லைத் தேர்ந்து கொண்டதுபோல, *Bank* என்பதற்கு வள்ளுவர் வழியில் 'பொருள் வைப்புழி' என்பதனைக் கொள்ளலாம். இதனையே 'வைப்பகம்' எனச் சுருக்கிக்கொண்டால் ஆட்சிக்கு எளிமையும் இயல்புமாய் அமைந்துவிடும். அக்குறள்,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி"**

என்பது, 'வைப்புழி' வைக்கப் பெற்ற இடமாகும்.

## அருளாட்சி

அருளாட்சியும் பொருளாட்சியும் திருக்குறளில் தங்காங்கு போற்றப் பெற்றுள்ளன. வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையை வகுக்கும் வள்ளுவப் பெருந்தகை, இவ்விரண்டையும் இணைத்துக் காட்டியும் இயம்புகிறார். அத்தகு குறள்களுள் ஒன்று,

**"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி**
**ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு"**

என்பது.

இதில் வரும் 'அருளாட்சி' இக்காலத்தில் கலைச் சொல்லாகக் கிளர்ந்து விளங்குகிறது. அருளாட்சிக் கழகம் என்றோர் அமைப்பும், அருளாட்சிக் கொடி என்றோர் கொடியும் 'அருளாட்சி' என ஊரும் திகழ்வதை நாடறியும். இவ் வருட்கொடை வள்ளுவ வழியில் வந்ததாம்.

## தக்கார்

திருக்கோயில் பணிகளைச் செவ்விதின் நடாத்துதற்குப் பண்டுதொட்டே அறங்காவலர் குழுக்கள் உண்டு. இக்காலக் குடியரசிலும் அம்முறை போற்றப் பெற்று வருதல் கண்கூடு. அறங்காவலர் குழு யாதேனும் ஒரு கரணியத்தால் கலைக்கப்படுமாயின்

திருக்கோயிலாட்சியைக் கண்காணிப்பதற்குத் தக்கார் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அறங்காவல் பொறுப்பை அவர்மாட்டு வைப்பதுண்டு. அத் தகவாளர்க்குத் 'தக்கார்' எனப் பெயர் வழங்கப் பெறுகின்றது. இத் தக்கார் என்னும் கலைச் சொல் "தக்கார் தகவிலர்" என வரும் குறள் வழியில் வாய்க்கப் பெற்றதேயாம். அன்றியும்,

> **"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
> **செல்வரும் சேர்வது நாடு"**

என்றும் தக்காரைச் சுட்டுவார் வள்ளுவர்.

## செல்வாக்கு

செல்வாக்கு என்னும் சொல்லாட்சி இக்காலத்தில் பெரு வழக்காக ஊன்றியுள்ளது. செல்வாக்கு இல்லாரும். செல்வாக்கால் செல்வாக்காளராகத் திகழ்வதும் நாடறிந்தது. "செல்வமும் வாக்கும் சேர்ந்தால்தான் செல்வாக்கு உண்டாகும்; வெறும் சொல்வாக்கு செல்வாக்கு ஆகிவிடுமா?" என்பாரும் உளர். செல்வாக்கு என்பது பிறர் செவிக்கண் புகுந்து செயலாண்மைப் படுத்தவல்ல வாக்கேயாகும். ஒருவர் ஓரிடத்துச் சொல்லும் வாக்கு அதன் தகவாலும் சொல்வார் தகவாலும் உலகோரால் ஆணைச் சொல் போல ஏற்கப்படும் பெருமையடைவதே செல்வாக்காகும். செல்வாக்கை அதன் பொருள் வெளிப்பட விளங்குமாறு வள்ளுவர் பல்கால் வலியுறுத்துகிறார்; 'செலச் சொல்லல்' என்பது அவர் வழங்கும் கலைச் சொல். மேலும், 'செலச் சொல்லி' *(424, 686, 726)*

என்றும், 'செலச் சொல்வார்' (719) என்றும் 'செலச் சொல்லாதார்' (730) என்றும் குறிப்பிடுகிறார். செல்வாக்கு பெந்த வகை இது.

## குறியெதிர்ப்பு

ஒரு காலத்தில் பண்டமாற்று முறையே உலகமெலாம் இருந்தது. இப்பொழுது பணமாற்றும், தாள் மாற்றும் வழக்கில் உள்ளன. கைம்மாற்று, கைகண்ட வழிகளுள் ஒன்று. "கடன் உடன்" வாங்குதல் என்பதில் 'உடன்' என்பது கைம்மாற்றாகும். வள்ளுவர் பண்டமாற்றுக் காலத்தில் வாழ்ந்தவர். அவர் 'குறியெதிர்ப்பு' என்னும் ஒரு வகைப் பண்டமாற்றைக் குறிப்பிடுகிறார்.

**"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து"**

என்பது அவர் வாக்கு.

குறியெதிர்ப்பு என்பது நாட்டுப்புற நடைமுறைச் செய்தியே. அது 'குறியாப்பு' என இன்றும் வழக்கில் உள்ளது. அண்டை வீடு அடுத்த வீடுகளில் தங்களுக்கு வேண்டும் உடனடித் தேவைக்காக அரிசி, உப்பு, எண்ணெய் முதலியவற்றை ஓர் அளவிட்டு வாங்கிக் கொள்வதும், அவ்வளவை மீண்டும் தந்து விடுவதும் குறியெதிர்ப்பு எனப் பெறுகிறது. குறியாவது அளவிட்டுத் தரும் பொருள். எதிர்ப்பாவது மீண்டும் தருதல். இவ்விரண்டன் இயைபே குறியெதிர்ப்பாக வழங்குகின்றது. அருகிய இக் கலைச் சொல்லாட்சி யைப் பெருக்கத்திற்குக் கொண்டு வரலாம்.

நெடுங்காலம் கழித்துத் தரும் குறியெதிர்ப்பும் உண்டு என்பதை 'நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்' என்னும் பெருஞ்சித்திரனார் வாக்கால் (புறம். 162) அறியலாம். உயிரை மீட்டுத் தருதலின் அருமையை நினைந்து "உயிர்க்குறி எதிர்ப்பைப் பெறலருங் குரைத்தே"என்றார் மலையனார் (நற். 93)

"குறியெதிர்ப்பையாவது, அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது" என்னும் பரிமேலழகர் விளக்கம் எண்ணி இன்புறத் தக்கதாம். (திருக். 221)

## செம்பாகம்

செம்மை என்பது நேர்மை. நடுவு நிலைமை, சரிபாதி முதலிய பல பொருள் தரும் சொல்லாகும். திருவள்ளுவர். சரிபாதியைச்செம்பாகம் என வழங்குகிறார்.

**"கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தின்**
**செம்பாகம் அன்று பெரிது"** (1092)

என்பது அது. பகுக்கப் பெறுவது பாகம்; அதனைச் செவ்வையாகப் பகுப்பது செம்பாகம். எள்ளுக்காய் பிளந்தாற்போல என வழங்கும் உவமை செம்பாகத் தைக் குறிப்பதாம். சரிபாதியைச் செம்பாகமென ஆட்சிக்குக் கொண்டுவந்தால் சீரியகலைச் சொல் லாகத் திகழும், 'செம்மை', 'செப்பம்' என்பன நடுவு நிலைமைப் பொருளன என்பதும் எண்ணத் தகும். 'செங்கோல்' என்பதும் கருதுக.

**கூம்பு**

குவிதல் பொருள் தருவது, கூம்புதல் என்னும் சொல். மலர்தலும் குவிதலும் நீர்ப்பூக்களின் இயற்கை. குவிதலைக் கூம்புதலாக ஈரிடங்களில் வள்ளுவர் காட்டினார்.

**“உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு”**

**“கொக்கொக்க கூம்பும் பருவத்து”**

என்பவை அவை.

கூம்புதல் கூப்புதலும் ஆகும். கூப்பும் கையைப் பார்த்தே அறியலாம்; கை கூப்பல், கைகுவித்தல் என்னும் வழக்கும் புலப்படும். அகன்று விரிந்து மேலுயர்ந்து கூர் நுனைபோல் அமைந்துள்ள ஒரு மலை, ‘கூமாச்சி மலை’ என முகவை மாவட்டச் சேற்றூர்ப் பகுதியில் உள்ளது. வட்டக் கூமாச்சி என்றொருமலை மதுரை மாவட்டத்து வருசநாட்டுப் பகுதியில் உள்ளது. இக்கூம்பு, ‘வடிவக் கணக்குக்’ கலைச் சொல்லாகிய ‘கூம்பு’ என்பதை வழங்கி யுள்ளமை அறியத்தக்கதாம்.

**ஒடுக்கம்**

‘அடக்கம் ஒடுக்கம்’ என்னும் இணைச்சொல் எவரும் அறிந்தது. ஒடுங்குவது ‘ஒடுக்க’ மாகும். எவற்றையும் தன்னுள் ஒடுக்கும் இறையை - அல்லது எல்லாமும் தன்னுள் ஒடுங்குவதற்கு இடமாக இருக்கும் இறையை - ‘ஒடுங்கி’ என்பார் மெய்கண்டார்.

திருவள்ளுவர் ஒடுங்குதலையும் ஒடுக்கத்தையும் ஆட்சி செய்துள்ளார்.

**"தொழுதகையுள்ளும் படையொடுங்கும்"**

என்பதும்,

**"ஊக்கமுடையான் ஒடுக்கம்"**

என்பதும் அவை.

இவ் வொடுக்கம் என்னும் சொல்லாட்சி இந்நாளில் துறவியர் இயற்கையுறுதலையும் இயற்கையுற்று அடக்கி வைக்கப் பெற்ற இடத்தையும் குறிப்பதாய் விளங்குகின்றது. சிற்றூர் பேரூர்களிலும் துறவியர்கள் ஒடுக்கங்கள் இருத்தல் கண்கூடு.

## உயிர்நிலை

உடல், யாக்கை என்பவை பொருளொடு பொருந்தி வழங்கும் சொற்கள். இவ் வுடம்பிற்குப் புதியதொரு சொல்லை வழங்குகிறார் திருவள்ளுவர். அஃது உயிர் நிலை என்பதாம். உயிர், நிலை பெற்று இருப்பதற்கு இடமாகி இருப்பது எதுவோ அது, 'உயிர் நிலை' என ஆளப்பெறுகிறது.

**"அன்பின் வழியது உயிர்நிலை"**

**"உண்ணாமை உள்ளது உயிர்நிலை"**

**"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை"**

என்பவை உயிர்நிலைபெறுந் தன்மையையும் உடலையும் குறிப்பனவாம். நீர்நிலை, அஞ்சல் நிலையம் இன்னவற்றைக் கருதுக.

## முதுக்குறை

முதுவர் என்பது அறிவாளரையும், முதுக்குறைவு என்பது அறிவு நிரம்புதலையும் குறிக்கும். கண்ணகியரைச் 'சிறுமுதுக்குறைவி' என்பார் இளங்கோவடிகளார். இனி, முதுக்குறைதல் என்பது பூப்படைதலைக் குறிக்கும் என்பது, "முதுக்குறைத்தனளே முதுக்குறைத் தனளே" எனவரும் பழம்பாடலால் விளங்கும். பூப்புறு தலைப் புரிவறிதல், அறிவடைதல், பெரியவள் ஆதல், சமைதல் என வழங்கும் வழக்காறுகள் முதுக்குறைவின் வேர்ப்பொருளொடு தொடர்புடுத்தி வியப்புறுத்து வனவாம்.

**''முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்''**

என்பது முதுக்குறைக் குறள். பூப்பு நீராட்டு 'முதுக்குறை நீராட்டு' ஆதற்கும் உரிய கலைச் சொல் வளமாம். முதுக்கு + உறை = முதுக்குறை. இளமையிலேயே பேரறிவு வாய்த்தல்; எ-டு சிறுப்பெரியார் (நம்மாழ்வார்)

## காடி

புளித்துப்போன பழங்கஞ்சி 'காடி' எனப்பெறும். "காடிக் கஞ்சியானாலும் மூடிக்குடி"என்பது பழமொழி. காடிப்பானை என ஒரு மிடாப்பானை உழவர் குடும்பங்களில் உண்டு. வடிநீர், பழங்கஞ்சி, ஊறல் முதலியவெல்லாம் அப் பானையில் விட்டுப் புளிப்பேற்றப்பெற்று நுரைத்திருக்கும். அதனை நீரொடு கலந்து வைத்தால் மாடுகள் மண்டிக் குடிக்கும்.

இப் புளிங் 'காடி' அறிவியல் கலைச்சொல் ஆகத் திகழ்கிறது. துப்புர வில்லார் 'துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று' என்னும் நல்குரவுக் குறளில் (1050) இக்காடியைக் குறிக்கிறார் வள்ளுவர்.

## தேற்றம்

தேற்றம் என்பது தெளிவு என்னும் பொருட்டது. "அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை" என்று எண்ணுவார் திருவள்ளுவர். "அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்" என்று தேற்றத்தின் அருமையை விளக்குவார். இத்தேற்றம், முற்றத் தெளிந்து உறுதிப் படுத்தப் பெறுதலைக் குறிக்கும் கலைச் சொல்லாக அமைந்துள்ளது. முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் 180 பாகைகளை உடையது என்னும் கணக்கீடு மாறாமை 'தேற்றம்' எனப்பெறும். மாற்றமில்லாமையைத் தெளிந்து நிறுவப் பெற்ற தாகலின், தேற்றம் என்னும் சொல் 'தியரம்' *(Theorem)* என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பெயர்ப்பாகிய கலைச் சொல்லாகி விளங்குகின்றது.

## துச்சில்

தம் இல்லிருத்தல், தமது பாத்துண்ணல் என்பவை வள்ளுவ வாழ்வின் வலியுறுத்தல். ஆனால் 'தம்மில்' இருக்க இக்காலப் பரபரப்பும் வறுமைக் கோடும் பணிநிலையும் புதுப்போக்கும் இடந்தரு மாறில்லை. குடிக்கூலி இடந்தேடிக் குடியிருக்கும் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. அம்மட்டோ?

ஒட்டுக்குடி, ஒண்டிக்குடி என்றநிலையிலும் அடுத்து வாழும் நிலைமை அமைந்துவிடுகின்றது. இச் சூழலில், "பெற்றேம் யாம் என்று பிறர் செய்த இல்லிருப்பாய் கற்றதிலை மன்ற காண்" என்று இடித்துரைக்கும் முல்லைக் காதலியர் முகிழ்த்தல் அரிதாம் (கல். 111) ஒட்டுக் குடித்தனம் ஒண்டிக் குடித்தனத்திற்கு ஒரு சொல் வேண்டுமே! அவரவர் கட்டி வாழும் இல்லத்தைப் 'புக்கில்' என்பது வள்ளுவம். ஒட்டுக் குடியைத் 'துச்சில்' என்பதும் வள்ளுவம்.

**''புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு''**

என்பது அது.

## கொள்கலம்

கிண்ணம், ஏனம், தட்டம், கலம், குவளை முதலியவை, பொருள்களை வைத்துப் பேணற்கு உரியவை. பேழை, நிலைப்பேழை, அட்டளை முதலியவையும் அத்தகையவற்றுள் பரியவை. பொருள்களைத் தன்கண் வைத்துப் பேணும் அவற்றின் பொருள் அறிந்து 'கொள்கலம்' எனப் பெயரிட்டனர். "அணி, ஆடை, சாந்து முதலியன பெய்கலமும் பிழாவும் பிறவும் 'கொள்கலம்' என்று அகரமுதலிகள் கூறும். இக்கலைச் சொல்லை வள்ளுவர்,

**''இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ**
**குற்ற மறைப்பான் உடம்பு''** (குடும்பத்தைக்

என்று ஆட்சி செய்தார். பொருள்களைக் கொள்ளும்

கலமாகச் சுட்டப்பெற்ற கொள்கலம், பண்பின் கொள் கலம், சால்பின் கொள்கலம், அன்பின் கொள்கலம் எனப் பண்பியல் சுட்டுவதாகவும் வழக்கில் ஊன்றியுள்ள து.

## உலகம், வியனுலகம்

'உல்' என்னும் வேரில் இருந்து உலம், உலகு, உலகம், உலா, உலவுதல் முதலிய சொற்கள் பிறக்கும். வட்டம், வட்டமிடல், உலாவுதல், உருண்டை என்னும் பொருள்களில் இவ் 'வுல்' பல சொற்களைத் தரும். அவ்வகையில் உருண்டையானதும், சுழல்வதுமாகிய உலகப் பெயர் தனிச்சிறப்புடைய அறிவியல் சொல்லாகவே திகழ்கிறது. இன்னும் இச்சொல் ஞாலம் என ஆளப்படும்போதும் தொங்கிக் கொண்டிருத்தல் என்னும் அறிவியல் பொருளே தருகின்றது. மேலும் தன் கண் வைத்திருக்கும் அரும்பெரும் வளங்களைக் குறிக்கும் வகையால் 'வையகம்' 'வையம்' 'வைப்புழி' என்னும் பெயர்கள்ளைப் பெறும்போது மேலும் பல கலைச்சொற்களைப் பெற வாய்க்கிறது.

உலகம் என்பது அதன் பெருகிய எண்ணரும் பரப்பைக் குறிக்கும் வகையில் 'யுனிவர்சல்' எனப் படுவதற்கு ஒப்ப "வியனுலகு" எனத் திருக்குறளில் ஆளப்படுதல் சீர்மை மிக்கதாம். வான்சிறப்பில் வியனுலகம் என்றும் (19) 'விரிநீர் வியனுலகம்' என்றும் (13) கூறுகிறார். வியன்ஞாலம் என்றும் சுட்டுகிறார். (1016)

உலகம், ஞாலம், வையகம், வியனுலகம், என்பனவெல்லாம் கலைச் சொற்களாதல் அறிந்து மகிழத் தக்கதாம்.

## உழையர்

மருத்துவ மனைகளில் மருத்துவர்க்கு உதவியாம் பணிபுரிபவர் உளர். அவர்கள் செவிலியர் என வழங்கப் பெறுதல் உண்டு. செல்வச் செவிலி என்பது வள்ளுவர் வாக்கே. மருத்துவ உதவியர் மதிப்புறும் நெருக்க மாண்பு புலப்பட அவர்களை "உழைச் செல்வார்" என்கிறார் வள்ளுவர். 'உழையர்' என்னும் கலைச் சொல்லை உருவாக்க இஃது உதவும்.

**"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து''**

என்பது அது *(950)*

திருக்குறளில் வழங்கும் சொற்கள், கலைச்சொற் களாகத் திகழும் முறையைக் கண்டோம். இன்னும் இத்தகு சொற்கள் பலவாதலின் இவ்வளவில் நிறுத்திப், பிறமொழிச் சொற்களுக்குத் தக்க பழஞ்சொற்களாகத் திகழும் சிலவற்றைக் காண்போம்.

## முந்நாடி

நாடிகளை நாடி, மருத்துவம் செய்வது தமிழ் மருத்துவத் தனிச் சிறப்பாகும். இந்நாடிகள் மூன்று என்றும், அவை வாதம், பித்தம், சிலேட்டுமம் என்றும் குறிப்பர். வாதம் பித்தம் சிலேட்டுமம் என்பவற்றை முறையே ஊதை, பித்தம், கோழை எனத் தமிழில் கூறுவர். திருவள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டு மருத்துவம் தமிழ்க்கலைச் சொற்களையே கொண்டு நடந்தமையால் அவர்,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று''

என்றார். இதில் 'வளிமுதலா எண்ணிய மூன்று' என்பது ஊதை, பித்தம், கோழை என்பவற்றையேயாம். ஊதை, 'வளி' எனப் பெற்றது. கோழையை 'ஐ' என்றும், 'ஐயம்' என்றும் கூறுவர். 'வளி' அல்லது 'ஊதை' என்பதும், 'கோழை' அல்லது 'ஐ' என்பதும் வழக்கொழிந்து வாதம் சிலேட்டுமம் என்பவை வழக்கூன்றி விட்டனவாம்.

## அறல்

அறல் என்பது அற்றுப் போதல் என்னும் பொருட்டாம். உணவு செரித்தலைத் திருவள்ளுவர், 'அறல்' என்பார். செரித்த பின் எஞ்சியவை கீழ் இறங்குவதால் செரித்தலை 'இழிவு' என்றும் திருவள்ளுவர் கூறுவார். "உண்டது அறல் இனிது", "அற்றது அறிந்து"; "அற்றால் அளவறிந்து" என்றும், "இழிவு அறிந்து உண்பான்" என்றும் இச் சொற்கள் அவரால் ஆளப் பெற்றுள்ளன. ஆனால் அறல், இழிவு என்னும் சொற்கள் ஆட்சியில் வீழ்ந்துபோயின. பிற்காலத்தில் தோன்றிய செரித்தல், செரிப்பு, செரிமானம் என்பவும் அருகிய வழக்காகவே உள்ளன. இவற்றின் இடத்தை 'சீரணம்' பற்றிக் கொண்டது. 'அசீரணமும்' மிகுந்து விட்டது. அம்மட்டோ! அவர் சொல்வதைச் சீரணிக்க முடியவில்லை என்னும் வகையில் சீரணவழிப் பொருளும் கிளைத்து விட்டது. அறலும் இழிவும் வழக்குக்கு வரவேண்டிய கலைச்

சொற்களாம். எரிப்பு என்பது சகரமெய் பெற்றுச் செரிப்பு என வழங்குதலும் தக்கதாம்.

## மறை

மறை என்பது கமுக்கம் ஆகும். நாட்டுப்புற வழக்கில் கமுக்கம் என்பது இன்றும் நடைமுறையில் உள்ளது. ஆனால், எங்கும் 'இரகசியம்' 'பரமரகசியம்' என்பவை பெரு வழக்காக உள்ளன. கமுக்கம் என்பதைத் திருக்குறள் 'மறை' என்னும் சொல்லால் குறிப்பிடும். 'புறப்படுத்தானாம் மறை' 'அருமறை', 'தாம் கேட்ட மறை', 'மறையிறந்து', 'மறைபெறல்' என்புவை திருக்குறளாட்சியில் உள்ளவை. மறையும் கமுக்கமும் ஆட்சிப்படுத்த வேண்டியவை. இவற்றுள் கமுக்கம் என்னும் வழக்குச் சொல் பாவாணரால் நடைமுறைப் படுத்தப் பெற்றதாம். 'மந்தணம்' என்பதும் 'மறை' என்னும் பொருளில் வழங்கப் படுகின்றது.

மறை என்பது களவொழுக்கமாம். மறையோர் ஆறு என்பது களவொழுக்கத்தவர் முறை. அதனை உரைகாரர் மாறிப்பொருள் கொண்டனர்.

## ஆக்கமும் கேடும்

பொருள் ஆவதும் கெடுவதும் கண்கூடு. இதனை வெளிப்படுத்தும் ஆட்சிகள் 'அழிவதும் ஆவதும்', 'கேடும் பெருக்கமும்', 'ஆக்கமும் கேடும்' என்பவை. இத்தகைய இனிய சொல்லாட்சிகள் இருந்தும் இவை போற்றப்பெறாமல் இக்காலத்தில் 'இலாப நட்டம்' ஆட்சியில் பயின்று போயிற்று.

**"ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்"**

என்று வள்ளுவர் குறிக்கும், ஆக்கமும் கருதாராய் முதல் இழக்கும் செய்வினையில் தமிழர் ஊக்கி நிற்ப தற்குச் சான்றாயிற்று, 'இலாப நட்டம்'.

## வழிமுறை

வழிமுறையாவது, வாழையடி வாழையென வருவது. இவ்வழிமுறை

**"தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும்"**

என்று குறளில் வந்துள்ளது. வழிமுறையே அன்றி 'வழி' என்பதும் அதே பொருளைத் தரும் என்பது.

**"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்"**

என்னும் குறளால் விளங்கும். மரபுவழி, கொடிவழி, கால்வழி, வழிவழி என்றெல்லாம் சொற்கள் இருந்தும் இந்நாளில் பாரம்பரியம், பரம்பரை, சந்ததி என்றெல் லாம் வழக்கூன்றிவிட்டன. 'இராசபாரம்பரியம்' கலிங்கத்துப் பரணி விரிக்கும், சந்ததி, சந்தானமாகிச், 'சந்தான உவமை'யென அணியிலக்கணம் சுட்டும். வழி முறை முதலியவற்றைத் தமிழ் ஆர்வலர் ஆட்சிக்குக் கொண்டு வந்தால் எளிதாக நிலைத்துவிடும்.

## பொதுவுண்ணல்

குலம், குடி, சமயம், இனம் இன்ன பலவும், செயற்கையான் அமைக்கப் பெற்ற அமைப்புக்களே பிறப்பொடு இவை வருவன அல்ல. ஆகலின்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றார் வள்ளுவர். இடைக்காலத்தே கிளர்ந்து,இக்காலத்தே புற்றீயலாக வெளிப்பட்டுப் புன்மைக்கு இடமாக்கி வைத்துக் கொண்டிருப்பது சாதிப் பிரிவு. அது வெறியாகி வெடிப்பதால், ஏச்சு, பேச்சு, பகை, பாழ், வெட்டு, குத்து எனத் தலைவிரித்தாடவும் ஆயின. கண்டால் தீட்டு, தொட்டால் தீட்டு என்பவர் 'உடனிருந்து உண்ணல்' என ஒரு கடைப்பிடியைக் கொள்ள அரசு ஆங்காங் குள்ள அலுவலர் பொதுமக்கள் ஆகியோரைக் கொண்டு சில்லாண்டுகளின் முன் ஏற்பாடு செய்தது! அதற்கு 'உடனுண்ணல்' என்று பெயர் வைக்க அரசுக்கு ஆர்வமா? அலுவலர்க்கு ஆர்வமா? எவரோ ஒருவர் 'சமபந்தி போசனம்' என்றார். அவ்வளவுதான்! எங்கெங்கோ 'சமபந்தி போசனங்கள்' பெயரளவில் நடந்தன! இதற்கு ஒரு தமிழ்ச் சொல் கிட்டவில்லையா? தமிழாக்கச் செயலைத் தமிழறிந்தாரைக் கொண்டு செய்தல் அரசின் கடன் என்பதற்குச் சான்றானவற்றுள் ஒன்று இது.

திருக்குறளில் 'பொதுவுண்ணல்' (1099) சுட்டப் பெறுகிறது. 'பொது நோக்கும்' உண்டு (528). பொது மக்கள் புரிந்து கொண்டால் பொதுவுண்ணல் வழக்குக்கு வாராதா? பொதுவுடைமை'க் கட்சி யுமைப்புக்கூட இச்சொல்லாக்கத்தை நழுவவிடலாமா?

## உள்வீழ்தல்

ஒரு செல்வர் தம் செல்வத்தை யெல்லாம் இழந்து, பட்ட கடனைத் தீர்க்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டால் அவர், `I.P.' தந்துவிட்டார் என்பது வழக்கு. `I.P. என்பது Insolvency Petition என்பதன் சுருக்கமாம். இதனைத் 'திவாலா' என்றும், 'மஞ்சள் கடிதம் வாங்குதல்' என்றும் கூறுவது உண்டு. இதற்கு ஏற்றதோர் சொல்லைத் திருவள்ளுவர் தந்துள்ளார். அது, 'உள்வீழ்தல்'என்பதாம்.

**''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று''**

என்பது அது. உள்வீழ்தலாவது, உள்ளது ஒழிந்து போதல் என்பதாம்.

## உள்ளுள்

'உள்ளம்' வள்ளுவத்தில் பெரிதளவு ஆயப்பட்டுத் தனி நூலாகச் சிறக்கும் அளவுக்கு விரிந்துள்ளது. மனநலம் விரும்புவாரும், மன நல மருத்துவம் புரிவாரும் தெரிந்து போற்றும் அரிய கருத்துகள் திருக்குறளில் மலிந்துள்ளன. இந்நாளில் 'ஆழ் மனம்' என்றும் 'அடி மனம்' என்றும் சொல்லக் கூடிய வற்றினும் சிறந்த கலைச் சொல் ஒன்றனை வள்ளுவர் வழங்கியுள்ளார். அது, உள்ளுள் என்பது.

**''இகழ்ந் தெள்ளா தீவாரைக் காணின்**
**உள்ளுள் உவப்ப துடைத்து. (மகிழ்ந்துள்ளம்**

என்பது அது (1057)

**கலைச்சொல் மூலம்**

இனிக், கலைச் சொற்களை மட்டும் திருவள்ளுவர் வழங்கினார் அல்லர். அதற்கு மூலமாம் **அடிச் சொல்** (வேர்ச் சொல்) விளக்கங்களும் பலப்பல இடங்களில் பயன்படுத்தி வேர்விளக்கம் கண்டு புத்தாக்கங்கள் கொள்ள வழிகாட்டியுள்ளார். அதற்கு ஓரிரு எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

திருக்குறள் முதற்பாட்டிலே 'பகவன்' என்பதோர் சொல்லை வழங்கியுள்ளார். எடுத்த எடுப்பிலேயே வட சொல்லைச் சொன்னார் என்பார் உளர். 'பகவன்' மட்டுமா? 'ஆதி' என்ன, 'அகரம்' என்ன, 'உலகம்' என்ன, நான்கு வட சொற்களையும் அல்லவோ முதற் பாடலில் பயன்படுத்தினார் என வாய்ப்பறை அறைந்தாரும் உளர். 'பகவன்' என்பதற்கு வேர் முதல் காண வள்ளுவமே துணையாதலை அவர் ஓதி உணர்ந்திருப்பின் இவ்வாறு உரைத்திரார்.

ஒன்றில் இருந்து ஒரு பகுதியைப் பகுத்தல் உலகியல். அவ்வகையால் **பகுத்தல், பகுப்பு, பகுதி, பாத்தல், பாத்தி, பாகம்,** என்பனவும் **பகல், பகை, பகவு,** என்பனவும் வள்ளுவரால் ஆளப்படுவதுடன் **'பக்கு'** என்பதும் ஆளப்பட்டுள்ளது.

பக்கு என்பது ஒரு புண்ணோ, காயமோ உண்டானால் ஆறி வரும்போது மேல்தோல் பிரிந்து விடுதல் 'பக்கு விடுதல்' எனப்படுதல் இன்றும் நடை முறை வழக்கில் உள்ளதே.

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்" *(1068)*

என்பது இரவச்சக் குறள். பக்கு விடுதல் பிளந்து விடுதல்.

பகவு என்பது பிளவுப் பொருளில் வழங்கப் பட்டமை,

"எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு" *(889)*

என்னும் உட்பகைக் குறளால் உணரப் படுகின்றது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"

"பாத்தூண் மரீஇ யவனை"

"பகைவரைப் பாத்திப் படுப்பதோர் ஆறு"

"கண்களவு கொள்ளும் சிறுகாமம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது"

"பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்"

"பகல் கருதிப் பற்றா செயினும்"

என்பவை வள்ளுவக் கொடைகள்.

'பகவு' என்பதுடன் 'அன்' சேரப் பகவன் ஆதல் வெளிப்படை. பகுத்து வழங்கிய ஆற்றலைப் பகவு என்பது இயற்கை முறையதாம். இவ்வாறு வேர்ச் சொல்லும் விரிவும் காட்டிச் செல்லும் திருக்குறள் வழியே கலைச் சொற்களை உருவாக்கிக் கொள்ளல் தகவுடையதாம். அன்றியும் வேரும் விளக்கமுமாக

விரியும் இச்சொற்கள் தமிழ் வழிப்பட்டனவே யன்றிப் பிற மொழிச் சொற்கள் அல்ல என்பதை மெய்ப்பிக் கவும் உதவுவனவாம்.

'தவம்' என்பதோர் அதிகாரம் திருக்குறளில் உள்ளமை எவரும் அறிந்தது. தவத்தின் இலக்கணம் இன்னது என்பதை,

**"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்**
**அற்றே தவத்திற் குரு" (செய்யாமை**

என்னும் குறட்பா கூறுகின்றது.

**தவம்** என்னும் சொல் இவ்வதிகாரத்தில் ஆறு இடங்களில் ஆளப்பட்டுள்ளது. வேறும் நான்கு இடங் களிலும் (19, 274, 295, 842) தவம் ஆளப்பட்டுள்ளது.

தவம் என்பதனைக் குறிக்கும் **நோன்பு** என்னும் சொல்லும் தவ அதிகாரத்தில் நான்கு இடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

நோன்றல் என்றும் நோற்றல் என்றும் சொல்லப்படும் அது, இந்நாளிலும் 'நோன்பு' என வழக்கில் உள்ளதேயாம்.

உறுதிப்பாடே நோன்பு ஆகும். இவ்வுறுதிப் பாடே தன் துயர் பொறுத்தலும் பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாமையுமாம் இயல்பை ஆக்கும். 'தன்னுயிர் தானறப் பெறும்' தகவை வழங்கும். 'யாதனின் யாதனின் நீங்கும்' தெளிவையும் காட்டும். இப்பொருள்

கள் எல்லாம் அமையத் தவச் சொல் வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளமை ஆய்வார்க்கு அரிய விருந்தாம்.

'தவம்' என்பதன் வேர் 'தவ்' என்பது. அத் 'தவ்' என்பது,

**''கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்**
**'தவ்'வென்னும் தன்மை இழந்து.**

என்னும் குறளில் *(167)* வந்துளது. தவ் என்பது சுருங்குதல் பொருளது. தவ் என்னும் சொல்வழியே பிறக்கும் சொல் தவ்வை என்பது. உள்ளவற்றை யெல்லாம் சுருக்கிவிடும் சோம்பல் தன்மை தவ்வை எனப்படும்.

**அவ்வித்து அழுக்கா றுடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.**

என்னும் குறளில் தவ்வை இடம்பெறும். உணர்வு குன்றி, செயல் சுருங்கி மூடிக் கிடக்கச் செய்யும் சோம்பல் 'முகடி' எனப் படுதலும் கருதத் தக்கது.

**'மடியுளாள் மாமுகடி'** *(617)*
**'முகடியால் மூடப் பட்டார்''** *(936)*

என்னும் இடங்களில் முகடிவருதல் காண்க. முகடி என்பதன் வழியே மூடி, மூடம், மூடல் என்பன வெல்லாம் பிறக்கும்.

அழிவு வழியிலே செல்லும் சுருக்குதல் முகடி.

ஆக்க வழியிலே செல்லும் சுருக்குதல் தவ் - தவம்.

இரண்டன் பொருளும் சுருக்குதல் எனினும் முன்னது உள்ளதாம் நலத்தைச் சுருக்குவதாகவும், பின்னது தேவையைச் சுருக்கி உள்ளத்தின் நலத்தைப் பெருக்குவதாகவும், அமைந்து விடுதல் எண்ணத் தக்கதாம்.

தேவையைச் சுருக்கி உளநலத்தையும் உரத்தையும் பெருக்குதல் வழியாகத் 'தவ்' என்பது அகரம் சேரத் 'தவ' என்றாகி, மிகுதிப் பொருள் தரும் உரிச் சொல்லாக விளங்குவதாயிற்று. தவம் என்பதும் 'மிக நலம்' என்னும் பொருளுக்கு உரியதாயிற்று. தவப்பிஞ்சு என்பது மிகப் பிஞ்சு என்றும் தவப்பேறு என்பது மிகப்பேறு என்றும் பொருள் தருவதாயிற்று.

'தவ்' என்னும் சுருக்க அடி, 'தவல்' என்னும் போது நீங்கல் என்னும் பொருளும், 'தவா' என்னும்போது நீங்காதது என்னும் பொருளும் தரும் வகையில் வள்ளுவத்தில் ஆளப்பட்டுள்ளன.

**"தவா அப் பிறப்பீனும்"** *361*

**"தவா வினை"** *367*

**"தவல் இல்லாத் தாவில் விளக்கம்"** *853*

என்னும் ஆட்சிகளைக் கண்டு கொள்க.

தவல் நீக்கத் தக்கது என்னும் பொருளுக்குரிய தாகவே தவறு என்பது நீக்கத்தக்கது நீங்கியது என்னும் பொருள்களைப் பொதுவழக்கு நூல்வழக்கு என்னும் இருவகை வழக்குளிலும் தருவதாயிற்று.

**"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல் லவை"**

என்பது தவறாயதும், தவறல்லதும் வரும் ஓரிடம்.

இக்கலைச் சொல்லாக்க ஆய்வும் வேர்வழி ஆய்வும் கொண்டால் பெருக வழக்கூன்றிய தவறான சொல்வழக்குகள் படைப்புச் சொற்கள் ஆகியவற்றைச் செவ்விய வடிவில் கண்டு பயன் கொள்ள உதவும்.

தச்சுப் பட்டறை, கொல்லுப் பட்டறை என்பன பெருவழக்காக வழங்கப் பெறுகின்றன. தொழிற் பட்டறை எனத் தொழில் அல்லாத ஆய்வுக் களப் பெயராகவும் வழக்கில் இந்நாள் ஊன்றியுள்ளது. பல்கலைக் கழகங்களிலும் தொழிற்பட்டறைகள் போல ஆய்வுப் பட்டறைகள் வழங்கப் படுகின்றனவே!

'பட்டறை' என்பது பட்டு அறை என்னும் இருசொற் புணர்ப்பு. அழிந்துபோன அறை என்னும் பொருளது. அறிவு அறை என்பது அறிவற்றுப் போன எனப் பொருள் தருவது போலப் பொருள் தருவது. அறை என்பது அறுக்கப்பட்ட இடமும், திட்டமும் குறிக்கும் சொல்லாம்.

பட்டறை என இந்நாள் வழங்கப்படும் சொல், கொல்லர் உலைக்களத்தில் சம்மட்டியால் அறைதற்கு அடையாக இருக்கும். கல்லும், இரும்புமாம். உலைக்கல் எனவும், கிட்டம் எனவும் வழங்கப்படும் அதன் பெயர் **'பட்டடை'** என்பதாம். தன் மேல் அடுத்த

பொருளைத் தாங்கி ஓங்கி அறைதற்கு இடமாக இருப்பது அது. அதனைச்,

**சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு''**

என்று கூடா நட்பில் கூறுகிறது குறள்.

''நெருக்கமாகவும் தாங்குதலாகவும் காட்டி நன்றாக அறைவதற்கு அது இடம் செய்தலால் கூடா நட்புக்குப் பட்டடை எடுத்துக் காட்டாயிற்று.

முகடு கூரை ஆகியவற்றை ஒட்டி அடைந்துள்ள பூச்சிக் கூடுகளும் தூசி தும்புகளும் ஒட்டடை எனப் படுதல் வழக்கு. முகட்டையும் சுவரையும் ஒட்டி அடைதலால் ஒட்டடை எனப் பெயர் பெற்றது. அதுவும் 'ஒட்டறை' எனப் பிழை வழக்காகப் பெருகி வழங்கப் பெறுதல் அறிந்ததே.

முள் மரங்களுள் ஒன்று செறிந்த குடைபோல் விளங்கும். முள்ளும் குச்சியும் இலைகளும் செறிந்த துடன் பல்வேறு பூச்சிக் கூடுகளும் அடர்ந்திருக்கும். அதனால் அதனை ஒட்டடை மரம் என்றனர். அதுவும் ஒட்டறை என்றே வழக்கில் உள்ளது.

வள்ளுவர் வழங்கும் செஞ்சொல்லால் நாம் புதிதாக உருவாக்கிக் கொண்டுள்ள கலைச் சொற் களும் செப்பமுறும் என்பதற்கு இப்பட்டடைச் சொல் ஒரு சான்றாம்.

இன்னொரு சொல் **'தாக்கம்'** என்பது.

மனத்தைத் தாக்கும் துயரச் செய்தியைத் தாக்கல் என வழங்கப் பெற்று, பின்னே செய்தி என்னும் அளவில் தாக்கல் ஏதாவது உண்டா?' எனக் கேட்கும் அளவில் விரிந்துள்ளது.

தாக்கம் என்பது செய்தி அல்லது கருத்துப் பதிவு என்னும் பொருளில் ஆளப்படுகிறது.

'பெரும்பாவலர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடல்களில் திருநாவுக்கரசர் தாக்கம்'

'கம்பரில் திருத்தக்க தேவர் தாக்கம்'

என்பன போலக் கூறப்படுகின்றன.

தாக்கம் என்பது பதிவு, படிவு என வழங்கப் பெறுதல் வேண்டும். ஏன் எனில், அவர் அவரைத் தாக்கினார், எனின் பொருந்தாதாம் எதிரிடை, முரண், போர் என்னும் பொருளில் வருவதே தாக்கம் ஆகும்.

**"ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து"**

என்னும் குறளில் வரும் தாக்கம்(ல்)போர்ப் பொருள் தருதல் பொதுமக்கள் வழக்கிலும் உள்ளதே யாகும்.

தாக்கிப் பேசுதல், ஒட்டிப் பேசுதல் இல்லாமல் வெட்டிப் பேசுதலாக வழக்கில் ஊன்றியமை 'ஒட்டிப் பாடவோ, வெட்டிப் பாடவோ'என்பதால் விளங்கும். ஆதலால், கருதும் கருத்தைத் தழுவாமல், மறுத்துக் கூறுவதாக வருவதைத் தழுவுவதாகக் கொள்வது வழுவாதல் தெளிவாகும். வழுவமைதியாகக் கொள்வ

தற்கு வேறொரு சொல் காண இயலா நிலையில்லையே! வழுநீக்குதல் மொழி நலம் பேணுவார் கடன் தானே!

இவ்வாறு பல வகையாலும் கலைச் சொல்லாக் கத்திற்கும், வேர்ச் சொல் விளக்கத்திற்கும், வழக்குச் செப்பத்திற்கும் திருக்குறள் உதவுதல் கண்கூடு. 'உள்ளூர்ப் பழுத்த பழமர'மெனவும் 'ஊருணி நீர் நிறைந்த'தாகவும் அறிஞர் உலகம் எண்ணிப் பயன் கொண்டால்,

**''முழுமை நிலா அழகுநிலா பூத்தது விண்மேலே**
**பழமையிலே புதுநினைவு பாய்ந் தெழுந்தாற்**
**போலே''**

என்பதற்கு ஒப்பாகத் திகழும்.



# 5. தமிழில் கலைச்சொல்லாக்கம்

(கோவை பூ.சா.கோ. பலதொழிற் பயிற்சிக் கல்லூரித் தமிழ் மன்றப் பொழிவு - 1987)

பேரன்புத் தலைவரவர்களே, ஆய்வுரையாற்றிய அறிஞர் பெருமகனார் அவர்களே, எழுச்சி மிக்க மாணவச் செல்வங்களே, என்கெழுதகு கேண்மைப் பெரும்புலவர் தங்கவேலனார் அவர்களே, தங்கள் அனைவருக்கும் இந்நல்ல வேளையில் நெஞ்சார்ந்த நேயத்தால் வணக்கம் கூறி என் பொழிவைத் தொடங்கு கின்றேன்.

குறளாயச் செல்வர் வேலா அவர்களால் மிகச் சீர்மையாக நேற்று நிகழ்த்தப்பட்ட பெருவிழாவுக்குக்

காலையிலும் மாலையிலுமாக இருவேளைகளிலும் இப் பொறியியல் பல தொழிற் பயிற்சிக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் செயலாளர் துணைச் செயலர் ஆகியோர் ஆர்வத்தொடு பங்கு கொண்டனர். தொலைக்காட்சியில் எவ்வளவோ உள்ளங்கவர் காட்சிகள் இருந்தும் அவற்றைத் தொல்லைக் காட்சியாய் விலக்கிவிட்டு அவர்கள் ஒன்றி உறைந்து விழாவில் பங்கு கொண்டிருந்தது எங்களை நெகிழ் வித்தது. அந்நெகிழ்விப்பே எங்களை இந்த மேடையில் ஏற்றி விட்டிக்கிறது. ஒரு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுக் கலைக் கதிர் என்னும் அருமையான திங்களிதழை நடாத்திவரும் ஒரு கலைக் குடும்பத்தின் காவலில் கனிந்து விளங்கும் இக்கல்லூரியிலே கலைச் சொல்லாக்கம் பற்றிப் பேச உங்கள் முன் நிற்பதற்குப் பெருமகிழ்வடைகிறேன்.

ஏறத்தாழ 70 ஆண்டுகளின் முன்னே பாரதியார பாடினார் "மெல்லத் தமிழினிச் சாகும்; இந்தப் புவிமிசை மேற்கு மொழிகள் ஓங்கும்" என்று ஒருவன் கூறுவதாக. ஏன் அப்படிக் கூறினான் அவன். "சொல்லுதற்குப் பொருளில்லை; சொல்லும் திறமும் அதற்கு இல்லை" என்று தமிழ் சாதற்கு அவன் காட்டிய காரணமாகவும் பாடினார். அம்மட்டில் விட்டாரா? பாரதியார். சொன்னவனுக்கு ஒரு பட்டம் வழங்கினார்: "அந்தப் பேதை சொன்னான்" என்றார். சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் என்று குமைந்தார் பாரதியார் அன்றே தமிழில் எல்லாக் கலைகளும் வந்தாக வேண்டும் பயின்றாக வேண்டும் என்னும் ஆர்வத்தில்

இருந்தார் என்பதைக் காட்ட எத்தனையோ சான்றுகள் உண்டு.

ஓரிடத்தே எழுதுகிறார் "அ...ன்" இதன் பொருள் என்ன? இனிமேல் தமிழ் நாட்டுப் பள்ளிக் கூடங்களில் அகரம் முதல் னகரம் இறுதியாகத் தமிழ் தான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டுப் பள்ளிக் கூடங்களில் 'சிலேட்டு' இருத்தல் கூடாது. கற்பலகையே இருத்தல் வேண்டும். பென்சில் இருத்தல் கூடாது எழுதுகோலே இருத்தல் வேண்டும் என்றார். "எழுதுங் கால் கோல் காணாக் கண்ணே போல்" என்று வள்ளுவர் கூறியதன்வழியாக வந்த எழுதுகோல் இடத்தை ஏதேதோ சொற்கள் கொள்ளை கொண்டன அவற்றை மீட்டமைத்தல் தலையாய பணி எனப் பாரதியார் உள்ளம் ஈடுபட்டமை இதனால் அறியலாம் இன்னும் ஒரு குறிப்பைச் சொல்லி மேலே செல்கின்றேன். 'மெம்பர்' என்னும் சொல்லுக்கு உங்களிடம் தமிழாக்கம் வேண்டும் என்று யான் கேட்கிறேன். நீங்கள் சொல்லுங்கள் மெம்பர் என்பதற்குத் தமிழென்ன- உறுப்பினர் என்று உங்கள் செயலர் என் பக்கல் இருந்து உடனே கூறுகிறார். உங்கள் பகுதியில் இருந்தும் ஒரே வேளையில் பலர் வாயிலிருந்து உறுப்பினர் வெளிப் படுகிறார். ஆனால் 1916இல் பாரதியார் எழுதுகிறார். "மெம்பர் என்பதைத் தமிழாக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அரை மணி நேரமாக மண்டையை உடைத்துக் கொண்டது தான் மிச்சம். அவயவி, அங்கத்தான், சபிகன், உறுப்பி, உறுப்பாளி என்னவோ நினைக்கிறேன். ஒன்றும் நெஞ்சில் ஒட்டி வரவில்லை.

இப்பொழுது மெம்பர் என்றே எழுதிவிடுகின்றேன். யாராவது ஒரு தமிழ்ப் பண்டிதர் நல்ல சொல்லைத் தந்தால் அதனைப் பின்பு பயன்படுத்திக் கொள்கிறேன்" என்கிறார். இதில் பாரதியார் கொண்ட எண்ணம், தமிழில் எல்லாக் கலைச் சொற்களையும் ஆக்கியாக வேண்டும் என்ற வேட்கை, அதன் தவிப்பு ஆகியவை நன்கு வெளிப்படுகின்றன.

உங்கள் அரங்கிலே பேராசிரியர் அவர்கள் அருமையும் செறிவுமிக்க ஒரு கட்டுரை படித்தார்கள். அக்கட்டுரையில் என்நினைவு சரியாக இருக்குமானால் நாற்பதுக்கு மேல் கலைச் சொல்லாக்கம் அவர் செய்திருக்கிறார். மிகச் சுருங்கிய கால அளவில் அதாவது நாலைந்து நாள்கள் அளவில் அரை மணி நேரம் படிக்கும் அருமையான தமிழ் அறிவியல் கட்டுரை படிக்க அவர்களால் முடியுமானால் அவர்கள் இதே ஆர்வம் குன்றாமல் தொடர்ந்து முயன்றால் எத்துணைப் பெரும் பெரும் பணிகளைத் தமிழுக்குச் செய்ய முடியும். உங்களுள் இப்படிச் சிலர் எதிர் காலத்தில் ஈடுபட்டால் - விரல் விட்டு எண்ணத் தக்க சிலர் ஈடுபட்டாலும் எவ்வளவு செயல்களைச் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்தில் தமிழில் பயிற்றினர் மருத்துவத்தை, இங்கே இருந்த அறிஞர் கா. சு. பிள்ளை 'வான நூல்' 'உடல் நூல்' என்பவற்றை யெல்லாம் ஆக்கினார். ஆயினும் விடுதலை பெற்று 40 ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னரும் 'தமிழால் முடியுமா?' என்று வினாவுவாரும் அதற்கு மறு

மொழியாகத் தமிழால் முடியாது என்பாரும் அவருக்கு ஒருபடிமேலே போய் "முடியவும் முடியாது முடியவும் கூடாது; முடியவும் விடமாட்டோம்" என்பாரும் பல்கியிருக்கின்றனர். யான் சொல்கிறேன் "தமிழால் முடியும்; இயல்பாக முடியும்; ஆனால் தமிழரால் முடியாது" என்பதே அது.

வானவூர்தியைக் கண்டுபிடித்தார்களோ இல்லையோ, அக்காலத்திலேயே - ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்னரே 'வானவூர்தி' என்னும் கலைச் சொல்லைத் தந்தவர் பழந்தமிழர். அவர்கள் அச் சொல்லாட்சியினும் உயர்ந்து சென்று அதனை இயக்குவானுக்கும் ஒரு கலைச் சொல் தந்தவர்கள் அவர்கள். அதனினும் ஒருபடி மேலே போய் அதனை இயக்குவானும் இல்லாமல் இயங்குவது என்று கணித்துரைத்தவர்களும் அவர்கள். இவ்வளவும் ஒரே ஒரு தொடரிலே - அகவற்பாவின் ஓரடியிலே - "விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி" - என்பதால் நிறுவினார்கள். இப்படிப்பட்ட பழைய ஆட்சிகளைக் காணவேண்டும். கண்டு நிலைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். காரல் மார்க்கசு அவர்களால் 'மூலதனம்' என்னும் நூலைத்தான் எழுத முடிந்தது. அவரால் முடிந்த அருஞ்செயல் அதுதான். அவ்வளவில் நின்றிருந்தால் உலகம் பயன் கொண்டிராது. ஏட்டுச் சுரைக்காயாய் நின்றிருக்கும். ஆனால் ஒரு இலெனினார் கிளர்ந்தார். என் செயலாக்கத்தால் இதனை நடைமுறைப் படுத்துவேன் எனத் துணிந்தார். என்ன ஆனது? வளமிக்க வல்லமை மிக்க ஓரரசையே

அமைத்துக் காட்டினார். ஆம்! தெரிவியல் வேறு; புரிவியல் வேறு. தெரிவியல் 'தியேரி'. புரிவியல் பிராக்டிகல்! அதனைச் செய்வாரிடம் இதனை எதிர்பார்க்கவோ இதனைச் செய்வாரிடம் அதனை எதிர்பார்க்கவோ வேண்டுவதில்லை.அப்படி ஒரு சிலர்க்கு இருதிறமும் அமையுமானால் பாராட்டலாம்.

கூரை வீட்டைப் பார்த்திருப்போம்.ஊசித் துளை அளவான ஓட்டை அதில் இருக்குமானால் அதன் கதிரொளி ஊடுருவிப் பாய்ந்து வீட்டினுள் கதிரம்பு பாய்ச்சும். குறுகி வெளிப்பட்ட அக்கதிர் வரவரப் பெரிதாய் ஒருருபா வட்டம் போல நிலத்தில் படும். அதனைக் கூர்ந்து நோக்கினால் எத்தனை எத்தனை கோடி துகள்கள்? இத்துகள்களைக் கண்ட மணி வாசகர்க்கு அண்டக் காட்சியன்றோ அரும்புகின்றது. அண்டத்தின் அறிவியற் கூறுகளை அவ்வளவு அருமையாக அல்லவோ கண்முன் காட்டிவிடுகிறார்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கங்களை எடுத்துக் கூறும் அவர் "இல் நுழை கதிரின் துண் அணுப்புரைய நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்கிறார். இற்றை அறிவியல் அறிஞர்கள் கூறுவதைத் தானே மாணிக்கவாசகர் கூறினார். அதனை இறைமைக்கு எடுத்துக் கொண்டோம்; அறிவியலுக்கு எடுத்துக் கொள்ளவில்லை!

ஞாயிற்றின் வெப்பம், அதன் கதிர்கள், அதன் கதிர் வட்டம். அதன் இடப் பெயர்ச்சி, காற்றின் சுழற்சி, வெற்றிடமாக - பாழாக - நிலை பெற்றிருக்கும் வானம்

என்பவற்றையெல்லாம் ஆங்காங்கே சென்று அளந்து அறிந்தவர் போலக் கூறுபவர்களும் உளர் என்று புறப்பாடல் புகல்கின்றது.

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளிதிரி தரு திசையும்**
**வறிது நிலைஇய காயமும், என்றிவை**
**சென்றளந்தறிந்தோர் போல**
**இனைத் தென்போரும் உளரே"**

என்பது அது. அறிவியல் வளர்ந்த இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கு விந்தையாகத் தோன்றுகிறது. 'ஞாலம்' என்று உலகுக்குப் பெயர் வைத்தார்கள்! ஏன்? ஞாலுதல் - நாலுதல் - தொங்குதல் "நான்று கொண்டான்" என்பதன் பொருள் நமக்குத் தெரியுமே. சொல்லாலே பொருளைத் தெரிவிப்பது தமிழ். பொருள் இல்லாத சொல்லைக் கொள்ளாததும் தமிழ். நமக்கு விந்தையாகத் தோன்றும் இவ்வறிவியல் பழங்காட்சிகள் பற்றித் திரு.வி.க. எண்ணினார் : "புறக்கருவி கொண்டு ஆராய்கிறான் விஞ்ஞானி; அகக் கருவி கொண்டு ஆராய்கிறான் மெய்ஞ்ஞானி இருவர் முடிவும் ஒன்றாகவே உள்ளன" என்பது அவர் தந்த முடிவு.

அருமைச் செல்வர்களே, ஒரு சித்தர் ஒரு சொற் கொடை வழங்குகிறார். ஆறெழுத்துச் சொல்லொன்றை ஈரெழுத்துச் சொல்லாக அருள்கிறார். அவர் 'நீர் வாழ்வன' என்று நாம் சொல்வதை நீட்டாமல் மயக்காமல் 'நீரி' என ஆக்கி விடுகிறார்.

''நீரியாய் நிலையாய் நின்றநிலை போதாதோ?
கீரியாய்க் கிடமாய்க் கெட்ட நிலை போதாதோ?''

என்பது அவர் வாக்கு.

அவர் தந்த 'நீரி' எத்தனை கலைச் சொற்களைத் தரவல்லது. ஊர்வனவற்றை நாம் 'ஊரி' என்று வழங்கலாம் அல்லவா! உயிருடையவற்றை 'உயிரி' என்னலாமே. பிராணனையுடையது. 'பிராணி' என வடசொல்லாக்கம் செய்து காட்டினார்கள் என்றால் நாம் நேரே உயிரையுடையது உயிரி என்று கொள்ளலாமே!

ஊரி என்பது ஊர்வனவற்றைக் குறிக்கும் சொல்லாகவே முந்தையோரால் ஆளப்பட்டுள்ளது. வானிலே ஊரும் முகிலை 'ஊரி' என்றனர். ஒரு மரத்திலே யிருந்து முளைத்து வரும் பிறிதொரு மரத்தை அல்லது செடியைப் புல்லுருவி என்போம். இதனையும் உருவி என்றுகுறுக்கி 'ஊரி'யும் ஆக்குவர். வயிற்றால் ஊர்ந்து செல்லும் ஓர் உயிரியைக் கண்ட வர்கள் அப்பொருள் விளங்க அகடூரி என்றனர். அகடு - வயிறு. ஊரி - ஊர்ந்து செல்வது. பாம்பிற்கு ஒரு பெயர் அகடூரி என்பது.

ஒரு சொல்லோடு இகரத்தை ஈறாகச் சேர்த்து இப்படிக் கலைச் சொற்படைக்கலாம் என வழிகாட்டி னார் ஒருவர் என்றால் அவர் வழியில் நாம் செல்லாமை குற்றமே யன்றி, தமிழின் குற்றம் ஆகாது.

கலைச் சொற்கள் எப்படி யெல்லாம் உருவா கின்றன என்பதைக் காண்பதற்குச் சில சான்றுகளைச்

சொல்ல விரும்புகிறேன். சொல் எப்படி உருவாகிறது; எப்படி எப்படி விரிவுறுகிறது விரிய விரியப் பொருள் பொதிந்த கலைச் சொற்களாகத் திரிகிறது என்பவற்றை அதன் வழியே காணலாம்.

வெண்ணிறப் பறவைக் கூட்டம் நிற்கக் காண்கிறான். தொல்பழ மாந்தன். அவன் கருத்தைக் கவர்கின்றது அக்கூட்டம்; கண்ணைக் கவர்கிறது காட்சி. காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்கிறான். அவற்றின் ஒலி "கொக் கொக்" என்பதாக அவனுக்குக் கேட்கின்றது. அவ்வொலி அவன் கருத்தில் நிலைபெறுகின்றது. அக்கூட்டம் மகிழும்போதும் போரிடும் போதும் அஞ்சி அரற்றும் போதும் அக்குரலிலே ஒருமித்து ஒலிப்பதைப் பல்கால் கேட்கின்றான். அவ்வொலியால் அப்பறவைக்குக் 'கொக்கு' எனப் பெயர் சூட்டுகின்றான். 'கொக் கொக்' என்பது 'கொக்கு' என ஒலி வழிச் சொல்லாக்கம் பெறுகின்றது. 'கிண்கிண்' என்பது 'கிண்கிணி' என்றும் 'சல்சல்' என்பது சலங்கை, சதங்கை, சல்லரி என்றும் பெயர் பெறுவதை அறிவோமல்லவா! அவ்வாறு அமைந்த பெயரே கொக்கு.

கொக்கு என்னும் சொல் அப்பறவையைக் காணாத இடத்திலும் அதன் வடிவத்தை நினைவு கொள்ளும் வண்ணம் பரவியது. அப்பரப்பு மொழிக் கொடையாய் நிலைத்தது.

பின்னே கொக்கின் காலைப் பார்த்த ஒருவன் அதன் பொருந்தா நெடுமையில் ஊன்றினான்.

மெலிந்து வளர்ந்து கால் நீண்டு இருப்பானைப் பார்த்த போது அக்கொக்குக் கால் அவன் நினைவில் முந்தியது. அதனால் 'கொக்குக் காலன்' என்றான். அவனையே 'கொக்கன்' என்றும் சொன்னான். இருப்பதற்குரிய நாற்காலியினும் உயரமாய், வெள்ளை யடிப்பதற்கும் அட்டளையில் இருந்து பொருள் எடுப்பதற்கும் உயர்ந்ததாய் கால் நீண்ட நாற்காலி செய்தான். அதன் கால் நீளம் கொக்குக் கால்களை நினைவூட்டக் கொக்குக் காலி - கோக்காலி - என்றான்.

கொக்கின் கழுத்தைக் கண்ட ஒருவனுக்கு அதன் வளைவு பதிந்தது. அவ்வளைவைப் போல் வளைந்து செல்லும் புழுவைப் பார்த்துக் 'கொக்கிப் புழு' எனப் பெயர் சூட்ட ஏவியது. இன்னொருவன் தொழிலாளி. அவன் இரும்புக் கம்பி ஒன்றை எடுத்தான். அதனை வளைத்தான். கொக்கின் கழுத்தின் வளைவு முன்னின்றது 'கொக்கி' எனப் பெயர் சூட்டினான்.

ஒருவன் கொக்குகள் கூச்சலிட்டு ஒன்றன்மேல் ஒன்று எதிரிட்டுச் செல்வதைப் பார்த்தான். அவனுக்குச் செருக்கினால் அடாவடி செய்வார்க்கு அக்கொக்குத் தாக்குதல் பெயரூட்டத் தூண்டலாயிற்று. அதனால் 'கொக்கரித்தல்' என்றான். அரித்தல் என்பது ஒலித்தல். 'அரை' என்பதும் ஒலித்தல். கொக்குக் கூடிய குளம் 'கொக்குக் குளம்'; கொக்குமிக்கொலிக்கும் குளம் கொக்கரை குளம்; இரண்டூர்களும் நெல்லையைச் சேர்ந்தவை.

கொக்கின் ஒலியிலே ஈடுபட்டான் ஒரு கலைஞன். அவ்வொலியுண்டாக ஓரிசைக் கருவி படைத்தான். அதற்குக் கொக்கரை எனப் பெயரிட்டான்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து"

என்று வள்ளுவர் கொக்கை ஆள்வதை நீங்கள் அறிவீர்கள்!

பழந்தமிழன் ஒருவன் ஒலிக் குறிப்பால் அமைத்த ஒரு பொருட்பெயர் எத்தனை எத்தனை விரிவாக்கங் களைப் பெற்றுள்ளது என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமானால் கலைச் சொல்லாக்க வழியும், நெறிமுறையும் எளிதில் விளங்கும்.

இன்னொரு சொல்லை எடுத்துக் கொள்கிறேன்: 'குர்குர்' என்று ஓர் உயிரி ஒலிக்க முன்னைத் தமிழன் கேட்டான். 'குர்குர்' என்பது பல்கால் இடைவிடாது ஒலித்தலைக் கேட்ட அவனுக்குக் 'குர்க்குர்' என்று ஒலிப்பதற்கு என்ன பெயரிடுவது? 'குர்க்கு' என்றான். 'குரக்கு' என்று பின்னே நின்றது. இந்நுட்பம் அறியாமல் குரங்கு - குரக்கு என்று ஆனது வலித்தல் விகாரம் என இலக்கணர் கூறலாயினர். குரக்கு என்பதே குரங்கு ஆனது. ஆதலால் குரங்கு என்பது மெலித்தல் விகாரம் என்பதே முறைமை.

இக்குர்க்குர் ஒலியால் குரங்குப் பெயர் உண்டா யிற்று. அக்குரங்கின் வடிவு வளைவானது. குந்தியிருக் கும் போது அதன் வளைவு நன்கு புலப்படும். அதனைப் போலக் கட்டை வண்டியின் தாங்கு கட்டை (போல் மரம்) நிலத்தில் படியாமல் இருப்பதற்கு ஒரு வளைவு கம்பு உண்டாக்கிப் பொருத்தினர். அதற்குக் குரங்குக் கட்டை என்று பெயரிட்டனர். சில இடங்களில் குதிரைக் கட்டை என்று வழங்குகின்றனர்.

பனை மரத்தின் மட்டையின் அடிப்பகுதி இருகூறாய் மரத்தைப் பற்றிப் பிடித்திருக்கக் கண்டவர் அதனைக் குரங்கு மட்டை என்றனர். குரங்குப் பிடி என்பது நாமறியாதது அன்றே!

குரங்கின் வளைவு போல் தோன்றும் பிறை நிலாவைக் 'குரங்கி' என உவமையாக்கி இன்புற்றனர்.

தாவித் தாவிச் செல்லும் நிலைப்படாமனத்தை மெய்ப் பொருளாளர் 'குரங்கு மனம்' என்றனர். இலக்கியம் வல்ல சான்றோர் ஒருவர் ஒரு காட்சியைப் படைத்துக் களிப்புறுத்தினார்.

ஆண் ஒருவன் பெண் போல் ஒப்பனை செய்து கொண்டு முறுக்கேறிய தன் கைகளைப் பின்னாக வளைத்து ஆடினான். அக்கை எத்தகையது? எருமை மாட்டின் முறுக்கேறிய கொம்பு போன்றது.

அத்தகு கொம்புடைய எருமையின்மேல் ஒரு சிறுவன் அமர்ந்து ஓட்டிக் கொண்டு வருகிறான். அது நிற்கும்போதும் புன்மேயும் போதும் அவன் அம்மயிர்ச் செறிவுடைய கரிய எருமையின் முதுகிலேயே வீற்றிருக்கிறான். இக்காட்சி குண்டுக்கல் ஒன்றின்மேல் குரங்கு ஒன்று குந்தியிருப்பதாகப் புலவர்க்குத் தோன்றியது. அதனால்,

**"பேடிப் பெண் கொண்டாடுகை கடுப்ப நகுவரப்**
**திரிமருப் பெருமை, (பணைத்த**
**மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்**
**ஏறிச் சோணேர்க்குத் துறுகல் மந்தியில் தோன்றும்"**

என்றார் அப்புலவர்.

ஓர் ஒலிக்காட்சி தந்தது எத்துணை ஒளிவளம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிக் கொள்கிறேன்.

பொழுது போய் விட்டாலும், தலைவரவர்கள் தொடருமாறு கூறுவதாலும், உங்கள் ஆர்வ வரவேற்பாலும் இவ்விடத்துப் பொழியும் பொழிவு, வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிதலாகவும் யாப்பினுள் அட்டிய நீராகவும் வள்ளுவர் கூறுமாப் போல உந்துதலாலும் மேலும் ஒரு சொல்லைத் தொடர் கின்றேன்.

'தண்டு' 'தண்டு' என்று வழங்கும் சொல்லைக் கேட்டிருப்பீர்கள். தண் + து = தண்டு. தண்ணியது என்பது அதன் அடிப்பொருள். தாமரைத் தண்டு, அல்லித் தண்டு முள்ளங்கித் தண்டு என வளர்ந்து முள்ளந்தண்டு முதுகந்தண்டு என நீண்டு நிலை பெற்றது அத்தண்டு

கீரையுள் ஒருவகை தண்டங்கீரை அல்லது தண்டுக் கீரை. அத்தண்டு நெடுமையைக் குறித்தது. அந்நெடுமை கம்பை - ஊன்று கோலைக் குறிப்பதற்கு ஆயிற்று. தண்டூன்று கிழமாயும் தொண்டூன்றி நின்ற நாவுக்கரசரை நாமறிவோம். தொடித்தலை விழுத் தண்டினார் என்பார் சங்கச் சான்றோருள் ஒருவர். தொடி என்பது வளைவு. தொடி - வளையல்; 'தொடுவை' என்பது வளைகம்பியமைந்த கம்பு. உச்சியில் வளைவு அமைந்த - இந்நாளில் நாம் 'டாணா' கம்பு என்பதை அவர் தொடித் தலை விழுத்தண்டு என்றார். விழாமல் காக்கும் தண்டுக்கு 'விழுத்தண்டு என்றது அருமையான அடைமொழி.

இத்தண்டு என்னும் சொல்லில் இருந்து எண்ணற்ற சொற்கள் விரிந்தன. தண்டு வைத்திருந் தவன் 'தண்டன்' எனப்பட்டான். மாரியம்மையின் ஒரு பெயர் தண்டுமாரி, 'தண்டு' கொண்டு போருக்குச் செல்வது முந்தை வழக்கம். அதனால் அப்படைக்குத் 'தண்டு' என்பது பெயர். தண்டு கொண்டு சென்ற கரிகாலன் செண்டு கொண்டு இமயம் திரித்த செய்தி இலக்கியம். செண்டு என்பதும் ஒரு கருவியே.

வரிவாங்குவதற்குச் செல்பவர் தண்டு கொண்டு சென்றனர். வரிதண்டுதல் என்பது பெயர். தண்டல் காரர் என்பது வரிவாங்குபவர் பெயர். அவர் தலைவர் பெயர் தண்டலார் தலைவர், தண்டல் நாயகர். ஆகவே, மாவட்ட ஆட்சியாளர் என நாம் இன்று சொல்லும் கலைச் சொல்லை முன்னே இருந்தவர் 'தண்டல் நாயகர்' என்று ஆக்கம் செய்தனர்.

தண்டு வருகிறது என்பதற்கு முன்னறிவிப்பாகப் பறை முழக்கிச் சென்றனர். அதற்குத் 'தண்டோர்', 'தண்டோரா', 'தண்டரா' என்றெல்லாம் பெயராயின. வரிதர மறுத்தால் அல்லது விசும்பினால் தண்டால் அறைந்தனர். அது தண்டனை ஆயிற்று. அத்தண்டனை இந்நாளில் விரிந்து தண்டிப்பும் ஆகியது. எவ்வகைத் தண்டனைகளையும் குறிப்பதாகவும் ஆயிற்று. அவனுக்கு வாணாள் சிறைத் தண்டனை; தூக்குத் தண்டனை என்பவை நடைமுறைச் செய்திகள். மெல்லிய தண்டு, வல்லிய மரத் தண்டாக வளர்ந்த அளவிலும் விரிந்தது. பழனிமலைப் படிக்கட்டென விரிந்து செல்வது சொல்லாக்கம். இரும்புத் தண்டும்

உண்டாயிற்று. ஒரு காலத்தில் இருப்புப் பாதை வண்டி, புகைவண்டி என்றெல்லாம் வழங்கியது. நீராவி வண்டி என்றும் கூறினர். புகையில்லாத வண்டியைப் பார்த்த பின்னர் அதன் தொடரில் தோய்ந்து 'தொடர் வண்டி' என்றனர். அதனையும் சுருக்கித் 'தொடரி' என நாம் கொள்ளலாம். இத் தொடரி செல்வதற்குரிய வழிதடக் கம்பி நீண்டது. தண்டுக்கும் அப்பொருள் உண்டு. வாளம் - வாலம் - நீளம். அவ்வகையில் 'தண்ட வாளம்' உண்டாயிற்று. என்னை ஏதாவது சொன்னால் உன் வண்ட வாளத்தையெல்லாம் தண்டவாளத்தில் ஏற்றி விடுவேன் என்னும் வழங்கு மொழியும் உண்டாயிற்று.

ஒரு தண்டு செய்த மொழியாக்கம் சொல்லாக்கம் எத்துணை என்று பார்த்தீர்களா?

உட்கொளல் என்னும் பொருளுக்கு 28 சொற்களைப் பாவாணர் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளில் காட்டினார். யான் எண்ணினேன். எண்ணிக்கை மிகுந்தது 103 சொற்கள் கண்டேன். எப்படி எனக்குக் கிட்டின. அவர் நிலத்தில் நின்று கொண்டு பார்த்தார். நான் அவர் தோள்மேல் இருந்து கொண்டு பார்க்கிறேன். அவர் ஒளி காட்டினார்; வழிகாட்டினார்; அவர் கொடையின் விரிவாக்கம் என்பதை அன்றி என்னாக்கம் எனலாமா?

நோய் வினைகளைப் பற்றி எண்ண நேர்ந்தது. என் இனிய நண்பர் ஒல்லியல் மருத்துவர் (ஓமியோபதி) அவர்தம் மருத்துவமனைப் பத்தாம் ஆண்டுப் பொழிவு செய்ய நேர்ந்திருந்தேன். அப்பொழுது நோய்

வினைகளைப் பட்டியலிட்டேன். என் எண்ண வட்டத்துள் பட்டவை 319 நோய் வினைகள். 'கதையா?' 'கற்பனையா?' என ஐயுறமாட்டீர்கள் என நம்பு கின்றேன். எவருக்கேனும் ஐயமுண்டானால் வளரும் தமிழ் உலகம் என ஈரோட்டில் இருந்து வெளிவரும் திங்களிதழைப் பாருங்கள்! தொடர்ந்து வெளிவந்தது அப்பட்டியல்.

தமிழில் சொல் இல்லாக் குறையில்லை. தமிழர் ஆர்வமில்லாக் குறை; முயற்சியில்லாக் குறை; தமிழ் வளர வேண்டும் என்னும் இன நலம் இல்லாக் குறை ஆகிய பொல்லாக் குறைகளே மிகுதி. இக்குறைகள் இல்லையேல் தமிழால் சிறப்பாக எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாகத் திகழ முடியும்.

4000 பக்கங்கள் பல்துறைக் கலைச் சொற்களைத் தொகுத்த கலைக் கதிர்க் கொடை இக்கல்லூரி. கலைக் களஞ்சியம் கண்ட அவினாசிலிங்கனார் வாழும் மண் இம்மண்! இக் குறிப்புகள் நம்பிக்கையை ஊட்டு கின்றன. உங்கள் எழுச்சி மிக்க வரவேற்பு என் பணியை ஊக்குகின்றது. ஒன்றை நினைவுபடுத்தி அமைகின்றேன்.

முந்நூறு ஆண்டுகளாக ஆங்கிலத்திற்கு எவ்வளவு பரப்புதல் - முயற்சி - பயிற்சி. எத்தனை நோபல் பரிசுகள் நம் மண்ணில் குவிந்தன? ஏன் மொழியறிவு வேறு! துறையறிவு வேறு. கலைச் சொல்லாக்கம் பற்றிப் பேசும் நான் ஒரு குண்டூசி செய்ய முடியுமா? சேக்சு பியரையோ கம்பனையோ முற்றும் கரைத்துக் குடித்தவர் இவ்வொலி வாங்கியைச் செய்து

முடிப்பாரா? இது பழுதுற்றாலும் அத்துறையாரிடமே செல்லல் கண்கூடு. ஆதலால் துறையறிவு வேறு; மொழியறிவு வேறு என உணர்தல் வேண்டும். நம் ஊர்ப் பேரறிஞர் அறிவியல் புனைஞர் கோ.து. நாயுடு அவர்கள் மொழிப் புலமையில் தளிர்த்தனரா? ஒழுங்காகத் தொடக்கக் கல்வி பயின்றவாரா? கண்டு பிடிக்கும் மூளை வேறு; கருத்துக் கூறும் மூளை வேறு என்னும் அடிப்படை புரிந்தால் தமிழில் முடியாது என்பவர் தம் முடியாமையைக் காட்டியவர் என்பது வெளிப்படும். மூதறிஞர் இராச கோபாலாச் சாரியார் 1937 இல் ஓரரிய கருத்தை- தமிழ் வளக் கருத்தை - உவமையால் கூறினார்.

> "நாம் வேளைதோறும் நாள்தோறும் பிண்ணாக்கு, தவிடு, தண்ணீர், புல் வைக்கோல் ஆகியவற்றை ஆங்கில மாட்டுக்கே போட்டுத் தடவித் தடவி வளர்க்கிறோம். தமிழ் மாட்டைப் பட்டினி போட்டு விட்டுப் பால் கறக்கக் கலத்தை எடுத்துக் கொண்டு போய்ப் பால் சுரக்க வில்லையே எனப் பழிக்கிறோம்"

என்றார். எவ்வளவு பொருள் பொதிந்த உவமை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே அவர் சொல்லியதை அறிஞர் உலகம் கேட்டிருந்தால் தமிழ் அறிவியல் வாகை சூடி உலகை வலம் வந்திருக்குமே! அத்திருப் பணி உங்களிடத் திருந்தேனும் அரும்புமென நம்பி அமைகின்றேன்.

என்னையும் பொருட்டாக எண்ணி இவண் அழைத்து அரைமணி உரையை ஒன்றே கால் மணியாக்கவும் வரவேற்று இடந்தந்த உங்கள் ஆர்வத்திற்குத் தலைவணங்கி விடைபெறுகின்றேன். பொழுது போகி விட்டது. இருப்பினும் ஏதேனும் வினாவ வேண்டு மெனினும் அதற்கும் இடந்தர இசைகின்றேன். நன்றி.

**ஒரு பேராசிரியர் வினா :**

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று தொல்காப்பியர் சொல்வதாகச் சொன்னீர்கள். அப்படியானால் தமிழில் இடுகுறிப் பெயரே இல்லை என்று ஆகிறது. ஆகவும் நன்னூலார் இடுகுறிப் பெயர் எனச்சொல்கிறாரே? இதற்கு விளக்கம் வேண்டும்.

**மறுமொழி :**

தாங்கள் கேட்டது அரிய வினா; தெரிய வேண்டிய பொருள் பற்றிய வினா. அதனால் தங்கள் நுண்ணிய வினாவுக்கு மகிழ்ந்து விடை கூறுகின்றேன்.

தொல்காப்பியனார் எல்லாச் சொல்லுக்கும் பொருள் உண்டு என்றார். ஆனால் சில சொற்களுக்குப் பொருள் நமக்குப் புலப்படுவது இல்லை. வண்டி சென்ற தடம் தெரியும். ஆனால் வண்டு சென்ற தடம் தெரிவதில்லை. அதற்காக வண்டு செல்லவில்லை என்று சொல்லி விடுவோமா? ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்குச் சென்ற வண்டைக் கண்டே அதற்கொரு தடம் இருந்தமை புலப்பாடாம். இவ்வாறே காலங் கடந்த சொற்களின் மூலப் பொருள்

நமக்குப் புலப்படாமல் இருக்கலாம். அதற்காகப் பொருள் அதற்கு இல்லை என்னும் முடிவுக்கு நாம் வந்து விடக் கூடாது. ஆய்ந்து ஆழ்ந்து சென்று பொருளை முயன்று காண வேண்டும். மேலோட்டமாகப் பார்வையில் முடிவு செய்து விடுவது அன்று என்பதைத் தெளிவாகக் குறிக்கவே ஆசிரியர் தொல்காப்பியர், "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்றார். இங்கே 'விழிப்ப' என்பதற்குப் பார்த்த பார்வையில் என்பது பொருள். ஆழ்ந்து நோக்கி அறிந்து கொள்ள வேண்டும் என ஏவுகிறார் அவர்.

இப்பொழுது எனக்கு ஒரு நினைவு உண்டாகின்றது. மொழி ஞாயிறு பாவாணரிடம் ஒருவர் போய் "ஐயா, எல்லாச் சொல்லுக்கும் பொருள் உண்டு என்கிறீர்கள்; மரம் என்பதற்கு என்ன பொருள்? இலக்கண நூலில் இடுகுறிப் பெயர் என்று இருக்கிறதே" என்று வினாவினார்.

பாவாணர் அமைந்து சொன்னார். நாம் சில வேளைகளில் காலை மடக்கி நெடுநேரம் உட்கார்ந்திருக்கிறோம். பின்னே எழுந்திருக்கிறோம். 'கால் மரத்துப் போய் விட்டது' என்கிறோம். இந்த மரத்துப் போனது என்ன? குறைந்த உணர்வு நிலைக்கு - மரத்தின் உணர்வு நிலைக்குப் - போய் விட்டது என்பது தானே பொருள்.

நன்னூலார் நன்னூல் செய்தவரே, எனினும் அவர் தவறிய இடங்கள் சிலவுண்டு. அவற்றுள் தலையாய

ஒன்று 'இடுகுறி' என்னும் ஆட்சியைப் படைத்துக் கொண்டது.

இப்பொழுது நாய், பன்றி என்பவை இடுகுறி என்றே கருதுகிறோம். நாய் 'நா' என்பதன் அடியாகப் பெற்ற பெயர். ஓடி இளைக்கும்போது மட்டும் அன்று எப்பொழுதும், தொங்கப் போட்டுக் கொண்டும், உள்ளும் வெளியும் இழுத்துக்கொண்டும், நீர் சொட்டிக் கொண்டும் இருக்கும் உறுப்பு நாவே. அதனைக் கொண்ட 'நா' 'நாய்' என்னப்பட்டது. ஆ - ஆய், ஏ - ஏய் ஆகின்றமை போல.

பன்றி என்பதில் காரணம் தோன்றவில்லை. கூர்ந்து பார்த்தவனுக்கு 'பல்லி' என்பதன் காரணம் நன்கு தெரியும். அதன் பல் நீளம் அதன் வடிவுக்குப் பொருந்தாத தோற்றம் காட்டும்.அதனால் பல்லி என்றனர். இப்பொழுதும் 'பல்லன்', 'பல்லாயி' என்று பட்டப் பெயர் பலர்க்கு இருப்பதை அறியலாம். பன்றி என்பதில் அவ்வினத்தின் வரலாறே அடங்கிக் கிடக்கின்றது. பல் + தி என்பதே பன்றியாயிற்று. அறப்பழங் காலத்தில் யானைக்குத் தந்தம் இருப்பது போலப் பன்றிக்கும் இருகடைவாய்ப் பற்கள் நீண்டு இருந்தன என்று உயிரியல் ஆய்வாளர் கூறுவர். அதற்குச் சான்று காட்டும் சொல்லே பன்றி. பல் உடைய உயிரியே அஃது பன்னீட்சியே அப்பெயராட்சிக்கு மூலம் என்க. பல்லை நினைத்தவுடன் நம் பல்லும் நினைவில் எட்டுகிறது. பல தொழிற் பயிற்சி நிலையம் என்னும் கல்லூரிப் பெயரும் எழுகின்றது.

கண்கள் இரண்டு; காதுகள் இரண்டு; மூக்கு ஒன்று; வாய் ஒன்று. ஆனால் பலவுறுப்புகள் பற்கள். ஆதலால் பலவாக அமைந்தன பல ஆயது; பலப்பல; பற்பல; பல்லபல என ஆட்சி கொண்டன. பல்போல் அமைந்த சுளையும், வித்தும், பலவாக அமைந்த கனி பலாக் கனியாய் ஆயது. மரம் 'பலா' மரம் ஆயது. ஒவ்வொன்றும் எத்தகு அடிப்படையில் அமைந் துள்ளன என்பது உங்களுக்கு வெளிப்படும் என நம்புகிறேன்.

சொற்களின் மூலப் பொருள் மறைந்தும் குறைந்தும் நின்றும் உண்மை ஆய்வு தெளிவாக்கி விடும் என்பதற்கு ஒரு சான்று சொல்கிறேன்

எலி என்பது எல் என்பதன் அடியாக வந்த சொல். 'எல்' என்பதற்கு விளக்கம் ஒளி - என்பதே பொருள். 'எல்லே இலக்கம்' என்பது தொல்காப்பியம். ஆனால் 'எலி' ஒளியாகவோ விளக்கமாகவோ இல்லையே என்பதே நமக்குத் தோன்றும். அச்சொல் நமக்குத் அறிவிப்பது எலியின் அடிப்படை வரலாறே.

ஒரு காலத்தில் வெள்ளை நிறத்தில் இருந்தது. அதற்கு எலி என்று பெயர் ஏற்பட்டது. கால இட மாற்றங்களால் அது கருநிறமுற்றது அதற்கும் அப்பெயரே நின்றது. ஆனால், பொருள் ஒட்டாமையை ஆய்வுலகம் கண்டது. அதற்காக ஒரு வழி கொண்டது 'காரெலி' என்று ஓர் அடை தந்தது. இலக்கியக் கண் கொண்டு காண்பார் இதனைத் தெளிவாக அறிவர்.

இனி வாழ்விலேயே எடுத்துக் காட்டால் விளக்கலாம். கருமை நிறப்பயிர் 'கரும்பு' கரும்பில் உள்ள 'கரு' கருமைச் சான்றே. கருவேல், வெள்வேல் என்பவற்றில் உள்ள 'கரு' தெளிவாக்கும். ஆனால் இந்நாளில் வெள்ளைக் கரும்பு, இராமக் கரும்பு என்பவை உள்ளனவே அங்கே கருமை இல்லையே என்றால், இல்லை என்பதற்காகவே உள்ளவை அடைகள் என்க. மெய்கண்டார் ஓர் உண்மையை நிலைநாட்ட உளது இலது என்றலின் என்றார். யான் இதனை நிலைநாட்ட அதனை மேற் கொள்கின்றேன். விரிந்த மறுமொழி கூற நேர்ந்தமையைப் பொறுத்துதவ வேண்டும். வேறு வினவங்களைப் பொழுது கருதி நீங்கள் எழுப்பாமல் இருப்பின் நிறைவுபடுத்து கின்றேன். நிறைவுச் செய்தி இது :

நிகழ்ச்சித் தலைமையேற்ற பேராசிரியப் பெருமகனார் அழகுத் தமிழில் பேசினார்; ஆய்வுக் கட்டுரை படித்தவர் அறிவியலை அருமைத் தமிழில் படித்து விளக்கினார். தம் தமிழாக்கம் தவறுடைய தாயின் யான் பொறுக்க வேண்டும் என்றார்; திருத்த வேண்டும் என்றார்.

நுங்கள் எண்ணம் சீரியது; தொண்டு பாராட்டத் தக்கது. தமிழில் சொல்வேன் என்று தலைப்பட்ட தற்குத் தலைவணங்குகிறேன். சில சொற்கள் ஆங்கிலச் சொல்லாக இருக்கின்றனவா, இருக்கட்டும்; வடசொல் முதலாய வேற்றுச் சொல்லாக இருக்கின்றனவா, இருக்கட்டும். நீங்கள் தமிழில் சொல்லுங்கள்; தமிழில்

எழுதுங்கள்; தமிழில் எல்லா நிலைகளிலும் பயில வழிகாட்டுங்கள்; தமிழால் முடியாது என்று மட்டும் தட்டிக் கழிக்காதிருங்கள். நீங்கள் தமிழில் செய்யத் தொடங்கி விட்டால் தமிழின் தூய்மை தானாகவே நேரும். எண்ணம் மட்டும் வேண்டும்! திண்ணம் வெற்றி என்று சொல்லி வாழ்த்தி அமைகின்றேன்.

(தனிப்படச் சிலர் வரும் வழியிலும் விருந்தின் போதும் வினவினர்; அவற்றின் மறுமொழிகள் இவண் இணைக்கப் பெறவில்லை.)

- நிறைவு -

## குறிப்புக்காக :